# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



பிட்சாடனப் பெருமான்,
வழுவூர்த் திருவீரட்டம்

மாலை 13] சாதாரண - மாசி - பிப்ரவரி, 1971 [மணி 5

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.

1156



திருப்பெண்ணாகடம் பிரளயகாலேசுவரர் கோயில், திருமண மண்டபத்தை நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா B. A. அவர்கள் திறந்து வைத்தல் (5—11—70),

## பொருளடக்கம்


1. திருமாகறல் தேவாரத் திருப்பதிகம்.
2. மார்கழித் திருவாதிரை.
3. எப்பரிசாயினும் ஏத்துமின்.
4. திருப்பாவை,
5. மகாபாரதம்.
6. எம்பார் வைபவம்.
7. மாகறல் அளித்த மாபெருந் தமிழறிஞர்.
8. செந்தமிழ் பெருந் திருவிழா.
9. திருவாசகம்.
10. சிவஞானப் போத பொருள் நிலை.


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும்


தனிப்பிரதி விலை ரூ. ஒன்று·மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆக சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாக சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமல் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது;

—ஆசிரியர்;




மாலை 13 ] சாதாரண — மாசி — பிப்ரவரி, 1971 [ மணி 5

# திருமாகறல் தேவாரத் திருப்பதிகம்

(மூலமும் கருத்துரையும்)

( ந. ரா. முருகவேள், M. A., M. O. L. )

**முன்னுரை:**

தொண்டை நாட்டில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள், ஏழாவதாகத் திகழ்வது திருமாகறல். இது செங்கற்பட்டு மாவட்டத்தில், காஞ்சிபுரத்திற்குத் தென் கிழக்கே ஒன்பது கல் தொலைவில், செய்யாறு என வழங்கும் சேயாற்றின் வடகரையில் இருக்கின்றது. மாகறன் என்ற அசுரன், இத்தலத்துப் பெருமானை வழிபட்டதனுல், இதற்கு மாகறல் எனப் பெயர் அமைந்தது எனத் தலபுராணம் கூறுகின்றது. உறையூரில் இருந்து சோழநாட்டை ஆண்ட இராசேந்திர சோழன் என்பவனுக்குச் சிவபெருமான் இங்கு ஒரு பெரிய உடும்பு (மா+கறல்) வடிவமாகக் காட்சி தந்தருளினன் ஆதலால், இத்தலத்திற்கு இங்ஙனம் பெயர் வழங்குவதாயிற்று என்றும் பெரியோர்கள் கூறுவர்.

இதற்குச் சான்ருக, இக்கோயிலின் மூலத்தானத்தில் உள்ள சுயம்பு லிங்கம், உடும்பின்

148687
Q2 M21, N59T15

வடியில் அமைந்து காணப்படுகின்றது. சுவாமி பெயர் மாகறலீசுவரர். அம்மை பெயர், திரிபுவனநாயகி. இத்தலத்தில் பிரமன் இந்திரன் தாரை இரதி காசிபர் அகத்தியர் முதலியவர் வழிபட்டு அருள் பெற்றனர். திருஞானசம்பந்தர் திருவோத்தூர்க்கு எழுந்தருளி, அங்கு ஆண்பனையைப் பெண்பனை யாக்கிய அற்புதம் நிகழ்த்தி, இங்குப் போந்து திருப்பதிகம் பாடி, இறைவனை வழிபட்டார். இங்கிருந்து திருக்குரங்கணில்முட்டம் காஞ்சிபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றார். இத் திருமாகறலீசுவரர் கோயிலுக்கு, *31 - 1- 71* அன்று, மகா கும்பாபிஷேக விழா, மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது. அதனை ஒட்டி, அக் கோயிலுக்குரிய தேவாரத் திருப்பதிகத்தின் மூலமும் கருத்துரையும், இங்கு வெளியிடப்பெறுகின்றன.

(திருச்சிற்றம்பலம்)

‘‘விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்,
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்,
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினன்,
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள்
தீவினைகள் தீருமுடனே.’’

(கருத்துரை) திருமாகறல், மஞ்சள் விளைகின்ற வளம்மிக்க கழனிகளையுடையது, அவற்றில் உழைப்பு மிகுந்த உழத்தியர்கள் பாடல்கள் பாடுகின்றனர். அதற்கு ஏற்ப இனிய ஆடல்களைப் புரிகின்றனர். இவற்றால் நல்ல ஆரவாரம் எங்கும் பரவுகின்றது. அங்குள்ள மாட மாளிகைகளில் எல்லாம் கொடிகள் அழகாகப் பறக்கின்றன. அவைகள் மேகமண்டிலம்வரையில் நீண்டு உயர்ந்து செல்கின்றன. அங்கு அழகு மிகுந்த பற்பல சோலைகள் உள்ளன. இத்தகைய சிறப்புடைய திருமாகறலில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அவன் தனது செஞ்சடையில் நறுமணம் பரப்புகின்ற கொன்றை மலருடன், கங்கை ஆற்றையும், வளருகின்ற மூன்றாம் பிறையையும் அணிந்திருக்கின்றான். சிவந்த கண்களை உடைய காளை மாட்டை ஊர்தியாகக் கொண்டிருக்கின்றான். அவனது பெருமையுடைய திருவடியை இடைவிடாது நினைத்து வணங்குபவர்களின் கொடிய பாவங்கள் அக்கணமே அழிந்தொழியும்.

(குறிப்புரை) விங்கு—மஞ்சள். விளை—உழுது பயிரிடாமல் தானே விளைகின்ற. ‘உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே’ என்பது புறநானூறு (*109*); நிலவளச் சிறப்பைக் குறித்தவாறு. உழத்தியர், மக்கட்டொகுதியில் கடை நிலையில் உள்ளவர்கள் ஆதலின் ‘கடைசியர்’ எனப் பட்டனர். ‘கண்டுழவர் பதம்காட்டக் களைகளையும் கடைசியர்கள்’ ‘வரும் பல்லாயிரம் கடைசி மடந்தையர்கள் வயல்எல்லாம்’ என்பது பெரியபுராணம் (*2 13,15*). அவர்களின் பாடலும் ஆடலும் ஆகியவற்றைக் குறித்ததனால், அங்குள்ள பிற மேன்மக்களின் இயல்பும் சிறப்பும் தாமே வெளிப்படும். மங்குல்-மேகம். கொங்கு—மணம், தேன். வளர் திங்கள்-மூன்றாம் பிறை. அண்ணல்-பெருமை மிக்கவன். (*1*)

‘‘கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தியழகார்,
மலையின்நிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்,
இலையின்மலி வேல்நுனைய சூலம்வல
னேந்தியெரி புன்சடையினுள்,
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
யேத்தவினை யகலுமிகவே.’’

(கருத்துரை) திருமாகறல், பல்வேறு கலைகளின் ஒலியும், இளம் பெண்களின் பாடல் ஒலியும், ஆடல் ஒலியும் மிகுந்து விளங்குவது. அங்குள்ள மாட மாளிகைகள் மலைகளைப் போன்றவை; வண்ணங்கள் தீட்டப்பெற்றவை; கட்டிடக் கலையின் சிற்ப நுட்பங்கள் வாய்ந்தவை. அவற்றில், நீண்டு உயர்ந்த கொடிகள் காற்றினால் அழகுறப் பறந்து ஒளி வீசுகின்றன. அங்

N71·13·5



குச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான், அவன் தனது வலக்கரத்தில் சூலம் ஏந்தி இருக்கின்றான். அது இலையைப் போன்ற வடிவை யுடையது, ஒளிமிகுந்த வேலைப் போன்றது, கூர்மையான நுனியை உடையது. அப்பெருமான் நெருப்பைப் போன்ற தனது புற்கென்ற சடையினுள்ளே, அலைகள் மிகுந்த கங்கையாற்றைத் தாங்கிக் கொண்டுள்ளான். அவனுடைய திருவடிகளைத் துதித்தால், பாவங்கள் எல்லாம் விரைவில் அகன்றொழியும்.

(குறிப்புரை) பலவகை ஒலிகளையுடையதாதல், ஒரு நகரத்திற்குச் சிறப்பாகும். ''காலை எழும் பல்கலையின் ஒலி... வேலை ஒலியை விழுங்கி எழ விளங்கி ஓங்கும் வியப்பினதால்'' என்பது பெரியபுராணம் (37-2). ஆதலின் திருமாகறலில் எழும் ஒலிகள், குறிப்பிடப் பெற்றன. கவின், அழகு என்பன இரண்டும் ஒரு சேர வந்தமையின், ஏற்றபெற்றி ஈண்டுப் பொருள்கொள்ளப் பட்டது. (2)

''காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்,
மாலைவழி பாடுசெய்து மாதவர்க
ளேத்திமகிழ் மாகறலுளான்,
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசையா, அழகிதாப்
பாலையன நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே.''

(கருத்துரை) திருமாகறல், சிறந்த தவமுனிவர்கள், வாழும் மாண்புடையத்து. அவர்கள் காலையிலும் மாலையிலும் வழிபாடு செய்கின்றார்கள். அப்போது துந்துபி சங்கு குழல் யாழ் முழவு முதலிய பலவகை வாத்தியங்கள் முழங்கும். அத்தகைய திருமாகறலில், சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அவன் புலித் தோலையே உடையாக விரும்பி அணிகின்றான். அதன்மேல் ஒளிமிக்க ஒரு பாம்பினைக் கச்சையாகக் கட்டுகின்றான். அழகுடையதாய்ப் பால் போன்று வெண்மையான திருநீற்றைத் தனது திருமேனியிற் புனைந்துகொள்கின்றான். அவனது திருவடிகளைத் துதித்தால், பாவங்கள் விரைவில் விலகி ஓடும்.

(குறிப்புரை) 'காலையொடு மாலையிலும் வழிபாடு செய்து' எனக் கொள்க. கடவுள் வழிபாட்டிற்குக் காலைவேளையே பெரிதும் சிறப்புடைத்தாதலின், அதனை ஒடுக்கொடுத்துக் கூறினர். 'ஒடுவென் கிளவி உயர்பின் வழித்தே' என்பது தொல்காப்பியம். ''காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின் ஞாலத்தலைவனை நண்ணுவர் அன்றே'' என்னும் திருமந்திரமும், ''காலையிலும் மாலையிலும் கடவுளடி பணிந்து கசிந்த மனத்தவர் பயிலும் கலய நல்லூர் காணே'' என்னும் தேவாரமும் இங்கு நினைக்கத் தகும். (3)

''இங்குகதிர் முத்தினொடு பொன்மணிக
ளுந்தியெழில் மெய்யுளுடனே,
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுன
லாடிமகிழ் மாகறலுளான்,
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையி னனடியையே,
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி
பாடுநுக ராஎழுமினே.''

(கருத்துரை) திருமாகறல், சேயாற்றின் கரையில் இருப்பது. அஃது எப்போதும் நீர் வற்றாமல் நிலைபெற்றிருப்பது, ஒளி பொருந்திய முத்து பொன் பலவகை மணிகள் ஆகியவற்றை அடித்துக் கொண்டு வருவது. அதன்கண், எழில்மிக்க உடம்பும், தூய மனமும் உடைய, மங்கையரும் மைந்தரும் ஒருங்கு சேர்ந்து நீராடி மகிழ்வார்கள், அத்தகைய வளப்பம் மிக்க திருமாகறலில், சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அவன் நறுமணம் மிகுந்து ஓங்குகின்ற கொன்றை மலரையும், குளிர்ச்சி மிக்க சந்திரனையும், அணிந்துள்ள செஞ்சடையை யுடையவன். அவனது திருவடிகளையே, உங்களுடைய பாவங்கள் தீரும்படி, மிகவும் துதியுங்கள்; வழிபாடு செய்யுங்கள்; அதன்பயனை நுகர்ந்து மேலான நிலைக்கு எழுமின்கள்.

(குறிப்புரை) இங்கு கதிர் முத்து—ஒளி தங்கும் முத்துக்கள். இங்கு—தங்குகின்ற. 'உந்தி'

என்பது உந்திக் கொண்டு வருகின்ற ஆற்றைக் குறித்து நின்றது. உந்துதல்—தள்ளுதல், அடித்துக் கொண்டு வருதல். உந்தியில் (ஆற்றில்) என ஏழன் உருபு விரிக்க. எழில்மெய், எழில் உள் (ளம்) எனக் கொள்ளுக. 'மாதவரும் ஆடவரும் புனலாடி மகிழ் மாகறல்' என்க. (4)

''துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்கழனிவாய்,
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடல்மலி மாகறலுளான்,
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர்மழு வாளன், வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதன் அடி
யாரைநலி யாவினைகளே.''

(கருத்துரை) திருமாகறலில், இரவில் இதழ் விரியாத நீல மலர், இருள் நீங்கிப் பொழுது விடிந்ததும், மலர்ந்து தனது நிறம் விளங்கும். அவற்றில் தேன் நிரம்பித் ததும்பிக் கழனிகளிற் பாயும். அத்தகைய செழிப்பு வாய்க்கப் பெற்றது திருமாகறல். அங்கே, மேகங்கள் தவழ்ந்து படிகின்ற பூஞ் சோலைகள் பலவுள்ளன. அவற்றில் மேகங்களைக் காணும் மகிழ்ச்சியினால், மயில்கள் எப்பொழுதும் நடம்புரிந்து கொண்டிருக்கும். அங்கேயுள்ள சிவபெருமான், கறுவுகொண்டு தாக்கவந்த மதயானையை உரித்து, அதன் தோலைப் போர்வையாகக் கொண்டு மகிழ்பவன். தனது கையில் ஒப்பற்ற மழு என்னும் படையை ஏந்தியிருப்பவன். இருள் மிகுந்த நஞ்சு தங்கிய கண்டத்தை உடையவன். அத்தலைவனுக்கு அடியவர்களாகிப் பணிபுரியும் அன்பர்களைப் பாவங்கள் துன்புறுத்தமாட்டா!

(குறிப்புரை) நீலம்—நீலோற்பல மலர். அஃது இரவில் இதழ் விரியாது குவிந்து நிற்பதாகலின், அதனைத் 'துஞ்சும் நறுநீலம்' என்றார். துஞ்சுதல்—கண்மூடித் துயிலுதல். நீலோற்பல மலரின் இதழ்கள் குவிந்து நிற்றல், அது கண்மூடித் துயிலும் காட்சி போலத் தோன்றுவதாயிற்று. மஞ்சு—மேகம். 'மழுவாளன்' என்புழி, வாள் என்னும் சொல் படை என்னும் பொருளில் வந்தது. கண்டம்—கழுத்து. (5)

''மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்,
இன்னவகை யாலினிதி றைஞ்சியிமை
யோரிலெழு மாகறலுளான்,
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே,
உன்னுமவர் தொல்வினைக ளொல்கவுயர்
வானுலக மேறலெளிதே.''

(கருத்துரை) திருமாகறலில், நிலை பெற்ற வேதங்களை ஓதித் தேர்ச்சி பெற்ற வேதியர்கள் உள்ளனர். பற்பல வகையான அரிய விரதங்களைக் கடைப்பிடித்து ஒழுகுகின்ற பெரும் தவ முனிவர்களும் அங்கு வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் திரண்டு ஒருங்குசேர்ந்து, இன்னின்ன முறைகளில் வழிபாடு புரிதல் வேண்டும் என நூல்களில் விதிக்கப்பட்டுள்ள முறைமைப்படி, இனிதாக இறைவனைத் தொழுது வணங்குகின்றனர். அதன் பயனாகத் தேவர்களைப் போன்று, நரை திரை மூப்பு இல்லாத சிறப்புக்களை அடைந்து, மேல் நிலை எய்துகின்றனர். இத்தகைய திருமாகறலில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அப்பெருமானின் மின்னல் போன்று விரிகின்ற புன் சடையின் மேல் உள்ள மலர்களும், கங்கையாறும், இளம் திங்களும் ஆகியவற்றைச் சிறிதாயினும் நினைத்துப் போற்றுபவர்களுடைய, பழைய கொடிய பாவங்களெல்லாம் சுருங்கும். உயர்ந்த தேவர் உலகத்திற்கு விமானம் ஏறிச் செல்லுதல் அவர்களுக்கு எளிதாகக் கைகூடும்.

(குறிப்புரை) பல்படிம மாதவர்கள்—பலவகையான விரதங்களையுடைய பெருந்தவ முனிவர்கள். படிமம்-விரதம். இச்சொல் படிமை, படிவம் எனவரும். இச் சொற்கள், விரதங்கள் அல்லது தவவொழுக்கங்களைக் குறிக்கும். ''கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது'' எனவும், ''கூறினை பெரும நின் படிமையானே'' (பதிற்று 74).

என்வும் வரும்தொடர்கள் இதற்குச் சான்று பகரும். 'படிமம்' என்பதற்கு உருவம் (திருவேடம்) எனவும் சிலர் பொருள் கொள்வர். திருவேடம் புனைதல், திருவைந்தெழுத்து ஓதல், சிவோகம் பாவனை புரிதல் முதலிய பலவகை நெறிகளையும் ''இன்ன வகையால்'' என்றார். உன்னுதல் — நினைத்தல், தியானித்தல். ''பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியும் ஆடியும் பயிலவல்லவர் விண்ணவர் விமானம் கொடுவர ஏறி வியனுலகாண்டு வீற்றிருப்பவர் தாமே'' என்று பிறிதோரிடத்துத் திருஞான சம்பந்தர் அருளிய வெங்குருப் பதிகம், 'உயர் வானுலகம் ஏறல் எளிதே' என்பதனை வலியுறுத்தும். (6)

''வெய்யவினை நெறிகள்செல வந்தணையும்
மேல்வினைகள் வீட்டலுறுவீர்,
மைகொள்விரி கானல்மது வார்கழனி
மாகறலு ளான்; எழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்,
ஐயனடி சேர்பவரை அஞ்சியடை
யாவினைக ளகலுமிகவே.''

**(கருத்துரை)** திருமாகறல், இருள் அடர்ந்த பரந்த சோலைகளை உடையது. அவற்றினின்று சிதறும் தேன் துளிகள் வெள்ளமாகப் பெருகிக் கழனிகளிற் சென்று பாயும். அங்கே சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அவன் கால்களை யுடைய மலையைப் போன்றதும், அழகிய தும்பிக்கையாகிய கையை உடையதுமாகிய, யானையினுடைய தோலை உரித்து, அதனைப் போர்வையாகக் கொண்ட திருமேனியை உடையவன். சிறப்பு மிகுந்த அத் தலைவனின் திருவடியை இடையறாது நினைத்து வழிபடுபவர்களைப் பாவங்கள் அஞ்சும்; அவர்களை அணுகாமல் நெடுந்தூரத்திற்கு அகன்று ஓடும். (முன்பே அணுகிய) கொடிய பாவங்கள், தாம் வந்த வழியே நோக்கித் திரும்பிச் செல்லும்; இனி வந்து சேர இருக்கின்ற பெரிய பெரிய பாவங்களையும் நீங்கள் அழிக்க வல்லவர்கள் ஆவீர்கள்.

**(குறிப்புரை)** வெய்ய வினை—பிராரத்த கன்மங்கள். அவைகள் பெரும்பாலும் அனுபவித்தே கழிக்கற்பாலன ஆதலின், ''வெய்ய வினை'' எனப்பட்டன. இறைவன் தனது அடியவர்களின் ''ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப வாழ்வு தந்தருள்வான்'' ஆதலின், அவைகளை ''நெறிகள் செல'' என்றார். 'வல்வினையின் வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ'' என மணிவாசகர் அருளியமையும் கருதற்பாலது. வந்து அணையும் மேல் வினைகள்—ஆகாமிய கன்மங்கள். 'அடையா' என்னும் சொல் வினைமுற்றாகவும், பெயரெச்சமாகவும் கொள்ள உள்ளது. அடையா வினைகள்—சஞ்சித கன்மங்கள். யானைக்குத் தும்பிக்கை சிறப்புறுப்பு ஆதலின், அதனைக் 'கையகரி' என்றார். தனது பெரிய வடிவத்தால் மலை போன்றதாய், அதற்கு இல்லாத வகையில் நான்கு கால்களைப் பெற்றிருத்தலின், யானையைக் 'கால்வரை' என்றார். வரை-மலை, கால்களையுடைய வரை-யானை. ஐயன்-தலைவன். (7)

''தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்க
ளோதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணி யழகார்
பூசுபொடி யீசனென ஏத்தவினை
நிற்றலில போகுமுடனே''.

**(கருத்துரை)** திருமாகறலில், பொன்னால் அமைந்த மாளிகைகள் நிறைந்துள்ளன, அவற்றின் மீது விதவிதமான பட்டாடைகளால் அமைந்த நீண்ட கொடிகள், மேகங்களைச் சென்று தோய்ந்து தொடும் வகையில் பறக்கின்றன. அங்கே சிறந்த மாதவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் குற்றங்களை அழிக்கின்ற சிறந்த செயல்களை உடையவர்கள், வேதங்களை ஓதிக் கொண்டு திரள்பவர்கள். இத்தகைய திருமாகறலில், சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அவன் பாசுபதவேடம் கொள்வதில் விருப்பம் உடையவன்; வரிகள்

கொண்ட நச்சுப்பாம்பினைக் கச்சையாக மேற்கொண்டவன். அழகு மிகுந்த திருநீற்றுப் பொடியைப் பூசுகின்ற பெரும் தலைவனாக விளங்குபவன். அவனைத் துதித்தால் பாவங்கள் நிற்கமாட்டா! விரைவில் நீங்கி அழிந்து போகும்.

(குறிப்புரை) கொடிகள், பலவகையவாய் விளங்குதலைக் குறிக்கத் 'தூசு துகில் நீள் கொடிகள்' என்றார். மாசு படு செய்கை-குற்றங்களை அழிக்கின்ற செயல். 'படு' என்பது பிறவினைப் பொருளில் வந்தது. படுத்தல்-அழித்தல். ஓதி-ஞானம், மெய்யுணர்வு என்றுமாம். 'ஓதி மலி மாதவர்கள்' எனக் கூட்டுக. 'இச்சை' அல்லது 'விச்சை' என இருவகையாகவும் கொள்ளலாம். இறைவன் பாசுபதவேடம் கொள்ளுதலில் விருப்பம் உடையவன் போலும். அதன் இயல்பினைச் "சவம் தாங்கு மயானத்துச் சாம்பல் என்பு தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்பவம் தாங்கு பாசுபத வேடத்தானை" எனவரும்திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தால் உணரலாம். (8)

தூயவிரி தாமரைகள் நெய்தல் கழு
நீர்குவளை தோன்ற மதுவுண்
பாயவரி வண்டுபல பண்முரலு
மோசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றிய இராவணன
தன்மை கெட நின்றபெருமான்
ஆயபுக ழேத்துமடி யார்கள்வினை
யாயினவு மகல்வதெளிதே.''

(கருத்துரை) திருமாகறல், நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. அங்கே தாமரை நெய்தல் கழுநீர் குவளை முதலிய தூய மலர்கள், நறுமணம் பரப்பி மலரும். அவற்றில் தோன்றுகின்ற தேனை உண்ணுகின்ற, வரிகள் படர்ந்த வண்டுகள், பலவகையான இனிய பண்களை மெல்லென மிழற்றும். அவ்வினிய ஓசை, திருமாகறலில் இடைவிடாது எப்போதும் இனிதாக ஒலித்துக் கொண்டேயிருக்கும், இத்தகைய திருமாகறலில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். இராவணனுடைய செருக்கு அழியும்படியும், வலிமை குன்றும்படியும், தனது கால் விரலால், மெல்லென ஊன்றி நின்ற அப்பெருமானின், எல்லையற்ற புகழினைத் துதிக்கின்ற அடியார்களின் துன்பங்களும், பாவங்களும் அகன்று ஒழிவது எளிதாகும்.

(குறிப்புரை) விரிதல்-மலருதல்- 'தூய' என்னும் அடைமொழி ஏனைய மலர்களுக்கும் பொருந்தும். முரலுதல்—மெல்லென மிழற்றுதல். 'வண்டினம் முரலும் சோலை' என்பது காண்க. பயிலுதல்—இடைவிடாது நிகழ்தல்; 'தில்லைப் பயில் கூத்தன்' என்பது திருக்கோவையார். (9)

''காலினல பைங்கழல்கள் நீள்முடியின்
மேலுணர்வு காமுறவினர்
மாலுமல ரானுமறி யாமையெரி
யாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை யடிகளடி
யாரையடை யாவினைகளே.''

(கருத்துரை) தனது கால்களில் உள்ள அழகிய பொன்னால் இயன்ற கழல்களை உணர்தலையும், நீண்ட திருமுடியினை உணர்தலையும், முறையே விரும்பியவர்களாகிய திருமாலும் பிரமனும், அவற்றை அறியமுடியாதபடி, ஒரு பெரும் நெருப்பு மலையாகி ஓங்கி உயர்ந்தவன் சிவபெருமான். அவன் சிறந்த திருமாகறலில் எழுந்தருளியுள்ளான். சீறிச் சிதறுகின்ற எரி போலும் நஞ்சையும், உரிகின்ற தோலையும், பெரிய மாணிக்கத்தினையும் கொண்ட பாம்புகளை அணிந்து, அவற்றுடனே அசைந்து நடக்கும் காளைமாட்டை ஊர்தியாகக்கொண்ட கடவுள் ஆகிய அப்பெருமானின், அடியார்களைப் பாவங்கள் அணுகமாட்டா.

(குறிப்புரை) காமுறவினர்-விருப்பமுற்றவர்கள். 'உயர்' என்பது 'எரியாகி உயர்' எனவும்,

'உயர்மாகறல்' எனவும் இயையும். நாலுதல்—சிதறுதல், கக்குதல். எரி-எரியைப் போன்ற கொடிய நஞ்சு. சிவபிரானுக்குப் புன்முறுவல்-நெற்றிக்கண்-திருக்கை-திருமேனி ஆகிய நான்கும் நெருப்பு எனவும் சிலர் பொருள் கூறுவர். 'தோலும் உரி' என்பதனை, 'உரி தோலும்' எனக்கொள்க. ஆலும் விடை—அசைந்து நடக்கும் காளை. அடிகள்-கடவுள், இறைவன். (10)

''கடைகொள்நெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியர்கோன்,
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்தனுரையால்,
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறலு ளானடியையே,
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல்வினைக ளொல்குமுடனே,''

(கருத்துரை) வாயில்கள் பலவற்றைக் கொண்ட, நெடிய மாட மாளிகைகள் மிக ஓங்கித் திகழ்வதும், நறுமணம் கமழ்கின்ற வீதிகள் நிறைந்ததுமாகிய சீர்காழியில் உள்ளவர்களின் தலைவனும், சிவபெருமானை அடைவதற்குரிய விதத்தால் துதித்து, அவர்தம் திருவடிகளையே புகலாகச் சேர்ந்தவனும் ஆகிய திருஞானசம்பந்தன், மடைகளில் நிறைந்த தண்ணீர் ஓடிப் பாய்கின்ற வயல்களையும், கூட்டமான சோலைகளையும் கொண்ட திருமாகறலில் உள்ள, இறைவனின் திருவடிகளையே பொருளாகக் கொண்டு பாடிய இத் திருப்பதிகத்தின் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் ஓதி, இவற்றின் பொருள் உணர்ந்து வழிபடுபவர்களுடைய, பழைய கொடிய பாவங்கள் அனைத்தும், உடனே சுருங்கி அழிந்தொழியும்.

(குறிப்புரை) கடை-வாயில்; ஒரு மாளிகைக்கு வாயில்கள் பல அமைந்திருப்பது சிறப்பாதலின் 'கடை கொள் நெடுமாடம்' என்றார். மடை-கால்வாய். 'புனல் ஓடு (கின்ற) வயல்' எனக் கொள்க. கூடுபொழில்-கூட்டமான சோலை-இத்திருப்பதிகம் இறைவனுடைய திருவடியையே தனக்கு உரிய பொருளாகக் கொண்டதாதலின், 'அடியையே உடைய தமிழ்' என்றார். உணர்தல்-பொருள் உணர்ந்து பாடி வழிபடுதல். ஒல்கும்-சுருங்கும், அழியும். உடனே—விரைவில், முழுதும். (11)

(திருச்சிற்றம்பலம்) —ஆசிரியர்.



பெண்ணுகடம், பிரளய காலேசுவரர் கோயிலின் முகப்பு மண்டபத்தினை நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே.வி.சுப்பையா, B.A., அவர்கள் திறந்து வைத்தல் (5-11-70)

# மார்கழித் திருவாதிரை

ந.ரா. முருகவேள், M.A., M.O.L,

## முன்னுரை :


நட்சத்திரங்கள் இருபத்தேழனுள், ஆதிரை சிவபெருமானுக்கு உரியது, ஓணம் திருமாலுக் குரியது. ஆதலின் இவை இரண்டிற்கு மட் டுமே நம் முன்னைச் சான்றோர்கள், 'திரு' என்ற அடைமொழி கொடுத்து முறையே, திருவா திரை என்றும், திருவோணம் என்றும் சிறப்பித் துப் போற்றி வழங்குவாராயினர். திருநாவுக் கரசர் 'ஆதிரைநாள் உகந்தான்' 'ஆதிரை நன்னாளான்' எனச் சிவபெருமானைக் குறிப்பர், 'மதியணி புனிதன் நன்னாள்' என்று சேக்கிழார் பெருமானும் திருவாதிரையைப் புகழ்ந்து கூறுவர். கண்ணபிரான் பகவத்கீதையில் ''மாதங்களில் மார்கழியாகவும், நாள்களில் திருவாதிரையாகவும், யான் விளங்குகின் றேன்'' என்று அர்ச்சுனனுக்கு உபதேசத் தருளினான் என்பர்.

சிவநெறித் தலைவர் ஆகிய திருஞான சம் பந்தர், திருவவதாரம் செய்ததும், சிவஞானப் பால் ஊட்டப் பெற்றதும், திருவாதிரைத் திருநாளிலேயே ஆகும். சேக்கிழார் தமது பெரிய புராணத்தினை ஒரு சித்திரைத் திருவா திரையில் அரங்கேற்றம் செய்யத் தொடங்கி, மறு சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றம் செய்து முடித்தனர் என்பர் உமாபதி சிவம். மேலும், வைணவசமயப் பெரும் சான்றோர் ஆகிய சுவாமி எம்பெருமானார் என்னும் இரா மானுஜர் தோன்றிய நாளும், திருவாதிரை நட்சத்திரமேயாகும்.

## மார்கழித் திங்கள் :

மார்கழி என்பது மிருக சீரிட நட்சத்திர மும், பௌர்ணமி திதியும் கூடும் மாதம் ஆகும். இது 'மார்க்கசீர்ஷம்' எனவும் வழங்கப்படும். தமிழில் மார்கழி என்பதற்கு, ஒடுக்கம் நீங்கும் காலம் எனப் பொருள் கூறுவர். மா-மாய்தல்; மறைதல்; அஃதாவது ஒடுங்குதல். கழி-கழி தல், நீங்குதல். ஆதலின் இறைவன் உயிர் களுக்குத் தனுகரண புவன போகங்களை மாயை யில் ஒடுங்கச்செய்து, மீளத் தோற்றுவிக்கும் காலத்தை மார்கழி என்னும் சொல் உணர்த் தும் என்பர்.

சூரியன் ஒருமுறை உதித்து மறைந்து, மறு முறை தோன்றும் வரையில் மனிதர்களாகிய நமக்கு ஒரு நாள். அதுபோல, ஒரு மகர சங்க ராந்தி தொடங்கி, மற்றொரு மகர சங்கராந்தி வரையிலுள்ள காலம் தேவர்களுக்கு ஒரு நாளா கும். தைமுதல் ஆனி இறுதியாக ஆறு மாதம் தேவர்களுக்குப் பகல்; அது உத்தராயணம் எனப் படும். ஆடி முதல் மார்கழிவரை ஆறு மாதம் தேவர்களுக்கு இரவு; அது தட்சிணாயனம் என வழங்கும். அறுபது நாழிகையாக உள்ள தேவ தினத்தில், ஒவ்வொரு மாதமும் ஐந்து நாழிகை



இராமர் — இலட்சுமணர் — சீதாதேவி — ஆஞ்சநேயர்



ஸ்ரீ வரதராசப் பெருமாள்

காஞ்சிபுரம்

யாக அமையும், அம் முறைப்படி, தேவர்களுடைய நாளில் மார்கழி மாதம் பிராமி முகூர்த்தம் அல்லது வைகறையாகிய விடியற் பொழுதாக நூல்கள் கூறும். தெய்வம் தொழுவதற்கு மனம் தெளிவது, துயில் எழும் காலம் ஆகிய வைகறைப்பொழுதே ஆகலின், தேவர்கள் மார்கழி மாதமாகிய வைகறைப்பொழுதில் இறை வழிபாடு ஆற்றுவர். ஆதலின் அது நமக்கும் மிக்க புனிதமுடையது ஆகும்.

## பரிபாடலில் ஆதிரை :

பரிபாடல் என்னும் பண்டைச் சங்க கால நூலில், மார்கழி மாதத்துத் திருவாதிரைபற்றிய செய்திக் குறிப்பொன்று அழகுறப் பயின்று வருகின்றது :—

''முன்பனிப் பருவம், பனி மிகுதியும் பெய்வது; மக்களைக் குளிரால் நடுங்கச் செய்வது; ஞாயிற்றின் வெப்பம் பெரிதும் காயாதது; குளிர்ந்த மழைக்காலத்தில் இறுதியாக இருப்பது. இத்தகைய முன்பனிப் பருவத்திற்குரிய மார்கழி மாதத்தில், முழுநிலா (பௌர்ணமி) நாளை ஒட்டிவரும் திருவாதிரை நாளில், விரிந்த மெய்ந் நூல் ஆகிய வேதங்களை உணர்ந்த அறவோர்கள், அத்திருவாதிரைக்குரிய தெய்வம் ஆகிய சிவபெருமானுக்குத் திருவிழாச் செய்யத் தொடங்குவர். அவ்விழாவின்கண் முப்புரி நூல் அணிந்த அந்தணர்கள், சிவபெருமானுக்குரிய வழிபாட்டுப் பொருள்கள் பலவும் நிரம்பிய பொற்கலங்களை ஏந்துவர்.

'அதுபோது, 'இந்நிலவுலகம் ஞாயிற்றினது வெப்பத்தின் மிகுதியால் வருந்தாதபடி, மழையினுற் குளிர்ச்சி யடைவதாக' என்று வாழ்த்தி, அம்பா ஆடல் என்னும் நோன்பினை மேற்கொள்ளும் கன்னிப் பெண்கள், அந்நோன்பினை இயற்றும் முறைமையினை அறிந்த முதுமகளிர் தமக்கு அறிவுறுத்தி உதவி செய்ய, மிகுந்த பனிபெய்கின்ற வைகறைப் பொழுதில் வையையாற்றில் நீராடுவர். ஊதைக் காற்று சில்லென்று வீசுவதனுல் விளையும் கொடுங்குளிர் நீங்கும்பொருட்டு, அருகிற் கரையின்கண் அந்தணர்கள் வேதநெறியின்படி வளர்க்கின்ற



தீயினை வலம்வந்து, தமது ஈர உடைகளையும் புலர்த்திக்கொள்ளுவர்,'' இதனை,

''பனிபடு பைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்
புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏந்தினர்,
வெம்பா தாக வியன்நில வரைப்பென
அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்
முனித்துறைமுதல்வியர்முறைமைகாட்டப்
பனிப்புலர்பு ஆடிப் பருமணல் அருவியின்
ஊதை ஊர்தர உரைசிறை வேதியர்
நெறி நிமிர்நுடங்கு அழல்பேணிய சிறப்பில்
தையல் மகளிர் ஈரணி புலர்த்துவர்.''

எனவரும் பரிபாடல் வரிகள் குறிப்பிடும் 'அம்பா ஆடல்' என்னும் வழிபாட்டு விரத நெறியே, பிற்காலத்தில் '' பாவை நோன்பு '' எனப் பெயர் பெறுவதாயிற்று.

## மார்கழி நீராடல் :

பாவை நோன்பு என்பது, உலகப் பொது நலங்கருதி மழை பெய்வது குறித்தும், தம்முடைய சிறப்புநலம் கருதித் தக்க கணவரை அடைதற்பொருட்டும், வைகறையில் நீராடிக் கன்னிப்பெண்கள் உலகன்னையாகிய காத்தியாயநி (பார்வதி) தேவியை வழிபடுதல் ஆகிய விரதம் கடைப்பிடித்தல் ஆகும். இவ்விரதம் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்னராகத் தொடங்கித் திருவாதிரையில் முடிவு பெறும். இவ்வுண்மை,

'' மாதர்கொள் மாதர் எல்லாம்
மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன் ஈரைந்தே
ஆகிய தினங்கள் எல்லாம்,
மேதகும் மனைகள் தோறும்
அழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப்
புனற்றடம் ஆடல் செய்வார்,''

என்னும் திருவாதவூரடிகள் புராணச் செய்யுளால் தெளியப்படும். மார்கழித் திருவாதிரையைத் தழுவி, இந்நீராடல் நிகழ்தலின், இது 'மார்கழி நீராடல்' என வழங்கும். இதுவே, பூர்ணிமாந்த முறைப்படி திருவாதிரையில் இருந்து தொடங்கப்பெற்று, தைத்திங்களிலும் தொடர்ந்து நடைபெறுதல் உண்டு ஆதலின், 'தைந்நீராடல்' எனவும், கலித்தொகை (59, 80). ஐங்குறுநூறு (84), நற்றிணை (22) என்றும் சங்க நூல்களிற் குறிப்பிடப்பெறும். இங்ஙனம் பெயரான் வேறுபடினும், இரண்டும் மார்கழித் திருவாதிரையையே முதன்மையாகக் கடைப்பிடித்துத் தழுவிக்கொண்டுள்ளமை கருதற்பாலது.

## திருவருட்பேறும் திருவாதிரையும் :

திருவாதிரைக்கு இத்தகையதொரு பெருஞ்சிறப்பு ஏற்பட்டமைக்குக் காரணம், அவ்விழா முழுவதுமே இறையருட்பேற்றிற்கு உரியதாகத் திகழ்ந்து, அதனை எளிதின் எவர்க்கும் அடைவித்தல் பற்றியேயாகும். 'ஆருத்திரா' என இதனைக் குறிக்கும் வடசொல்லுக்கு 'நனைதல்' என்பது பொருள் என்பர். அஃதாவது இறைவனின் திருவருட் பெருக்கமாகிய கருணை மழையில், அருள் வெள்ளத்தில் நனைந்து மூழ்கி இன்புறச் செய்வது என்பது கருத்து. இறையருளில் மூழ்கித் திளைத்து இன்புறுதலையே, மார்கழி நீராடல் குறிப்பிற் புலப்படுத்துகின்றது. உடம்பின் மாசு போக நீராடுதல்போல, உயிர்களின் மல மாசினைப் போக்க இறைவன் ஐந்தொழில் புரியும் அருட்டிறனைத் திருவாதிரை விழா செவ்விதின் உணர்த்துகின்றது,

## திருவாதிரையில் ஐந்தொழிற்றிறம் :

(1) திருவாதிரை நட்சத்திரம், முறையே பன்னிரண்டு மாதங்களிலும் வருமாயினும், மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை, மிக்க பெருஞ் சிறப்புடையதாகத் தொன்று தொட்டுப் போற்றப்பெற்று வருகின்றது. ஆதிரை என்பதில். ஆ-ஆன்மாக்களையும், திரை-மறைத்தலையும் குறிக்கும் என்பர். எனவே ஆதிரை என்பதற்கு, 'உயிர்களின் அறிவு இச்சை செயல்களை மறைத்து உலக வாழ்வில் ஈடுபடச் செய்வது' என்பது பொருள். ஒடுக்க நீக்கத்தில் மலபப்பற்று நீங்காத உயிர்களை, மீளவும் உலக வாழ்வில் இறைவன் ஈடுபடுத்துதலை உணர்த்துவதே, திருவாதிரை விழாவின் கருத்தாகும்.

(2) சிவபெருமான் உயிர்களின் நலம் கருதி ஐந்தொழில் புரிதலை உணர்த்துவது நடராஜர் திருவுருவமாகும். அவர் தமது உடுக்கையினுல் உலகத்தைப் படைக்கின்ருர்; அபயகரத்தால் காப்பாற்றுகின்ருர்; தீயேந்திய கையால் அழிக்கின்ருர். ஊன்றிய திருவடியால் உலக போகங்கள் தந்து மறைக்கின்ருர். எடுத்த திருவடியால் அருள் புரிகின்ருர். இங்ஙனம் ஐந்தொழில் புரியும் நடராஜப் பெருமானுக்கு ஓர் ஆண்டில் ஆறு நாட்களில் திருமுழுக்குகள் செய்யப் பெறும். நடராசப் பெருமானுக்கு மார்கழித் திருவாதிரை, வைகறைப்பொழுது (உஷத் காலம்); மாசிப்பூர்வ பட்ச சதுர்த்தி, காலைச் சந்தி; சித்திரைத் திருவோணம் உச்சிக் காலம்; ஆனி உத்திரம்; பிற்பகல் பிரதோஷ காலம்; ஆவணிப் பூர்வ பட்சசதுர்த்தசி மாலைச்சந்தி; புரட்டாசிப் பூர்வ பட்சசதுர்த்தசி நள்ளிரவாகிய அர்த்த சாமம் என நூல்கள் கூறும்.

(3) திருவாதிரை விழாவில் நடராசப்பெருமான் சிற்சபையை விட்டு எழுந்தருளுவர். இரட்சா பந்தனமாகிய காப்பு அணிவர்; கிருஷ்ண கந்தம் என்னும் கருநிறச் சாந்து தரிப்பர்; வெள்ளைசாத்தப் பெறுவர்: திருவிழாப் பூசை கொண்டு ஆயிரக்கால் மண்டபத்திற்கு உலா வருவர். இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் குறிக்கும்.

(4) திருவாதிரையின்போது செய்யப்படும் அபிஷேகம் சிருட்டி; நைவேத்தியம் திதி; கிருஷ்ண கந்தம் சங்காரம்; கபிலைப்பசு தரிசனம் திரோபவம்; தீபாராதனை முதலியன அனுக்கிரகம், என நூல்கள் கூறும். இவ்வாற்ருல் மார்கழித் திருவாதிரை விழா முழுவதும், உயிர்களின் இறையருட் பேற்றையே உணர்த்துவதாதல் காணலாம்.

(5) திருவாதிரைத் திருவிழாவில் நடராஜப் பெருமானின் சந்நிதியில் ஒரு பசு நிறுத்தப்படும். அச்செயல், சிவபெருமான் மீண்டும் படைத்தற்றொழிலை உயிர்களின் பொருட்டு மேற்கொள்வதைக் குறிக்கும். அப் பசு 'காரான்' பசுவாக இருத்தல், உயிர்கள் ஆணவ மலத்தால் மறைப்புண்டு அறியாமையிருள் வயப்பட்டு நிற்றலை உணர்த்தும். அப் பசு இறைவன் திருமுன்னிலையை நோக்கி நில்லாமல், இறைவனுக்குத் தன் பின்புறத்தைக் காட்டும் நிலையில் நிறுத்தப்படும். அஃது, உயிர்கள் இறையருள் பெறுவதில் விருப்பம் இல்லாமல், அதற்கு மாறுபட்டு உலகியல் நுகர்ச்சிகளையே விரும்பி உழலுதலைப் புலப்படுத்தும். அதுபோது இறைவனின் சந்நிதியில் கருநிறச் சாந்து (கிருஷ்ண கந்தம்) வழங்கப்பெறும். அஃது, இறைவன் உயிர்களுக்கெல்லாம் அவைகள் விரும்பி நிற்கும் மலச் சார்பாகிய உலக நுகர்ச்சிகளை வழங்கியருளுதலை அறிவிக்கும். திருவாதிரை விழாவில் வழங்கப்படும் களியாகிய அருள் உணவு, ஆணவ மலத்தில் ஒடுங்கிக் கிடக்கும் உயிர்களுக்கு இறைவன் தனு கரண புவன போகங்களைப் படைத்துக்கொடுத்துக் களிப்பித்தலை அறிவிக்கும்.


**முடிவுரை :**

தனு (சிலை) மாதம் ஆகிய மார்கழியில், நாள்தோறும் வைகறைப்பொழுதில் பூசை புரிபவர்கள், மலமாசுகள் நீங்கப்பெறுவதுடன், திருவருள் வெள்ளத்தில் திளைத்து இன்புறுவார்கள். அம் மார்கழி மாதத்தில், திருவாதிரையாகிய புனித நாளில், இறைவனுக்கு நெய்ம் முழுக்குச் செய்து, சந்தனம் களபம் கத்தூரி முதலிய கலவைகளை அணிவித்து, அன்புடன் வழிபாடு இயற்றுபவர்கள், இகபர சுகங்களைப் பெற்று இன்பக் கடலில் படிந்து, இறையருளிற் கலந்து மகிழ்வார்கள்.

—ஆசிரியர்.

'' சிலையாம் மதியில் வைகறையில்
தினமும் பூசை இயற்றுவோர்
தொலையா மலமும் துமிய அருட்
டுறையிற் குளிப்பர்; அம்மதியின்
நிலைஆ திரையின் நெய்யாட்டி
நிகரில் கலவை இனிதணிவோர்
அலையா தருளிற் கலந்தின்ப
ஆழி படிவர் அக்கணமே.''

—கச்சியப்ப முனிவர்.



தில்லைவிளாகம், ஸ்ரீவீரகோதண்டராமசுவாமி ஆலயத்திற்கு, ஆலயத் தூய்மைக்காக சுழற்கோப்பை வழங்கும் விழாவில் தஞ்சைத் துணை ஆணையர் திரு .ஜி. ஆதிமூலம், B.A.,B.L., அவர்கள் வருகை தந்து சிறப்பித்தபோது எடுத்த படம்

# "எப்பரிசாயினும் ஏத்துமின்"

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள், தேவக்கோட்டை

மானிட யாக்கை பெற்று நிலவுலகத்தில் தோன்றியவர்கள், மறு பிறப்புக்கும் வழி தேடுபவர்களாய் வாழுவது, அறியாமையின்பாற் பட்டதாகும். புல் முதலாகச் சொல்லப் பெறுகின்ற புல்லிய உடம்புகள் பலவற்றிலும் வாழ்ந்த உயிர், பிறப்பிறப்பற்ற பெரும் பேற்றை அடைவதற்கே மானிட யாக்கையைப் பெறுகின்றது. இதனுலேயே மனித வுடம்பு பெறுதற்கரியதெனப் பெரியோர் கூறினர்: ''எண்பத்து நான்கு நூறுயிரத்தால் உண்டுபல் யோனியெல்லாம் ஒழித்து மானுடத் துதித்தல், கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்'' என்பது சிவஞான சித்தியார்.

அரிதிற் பெறுவதாகிய மானிட யாக்கையை, அதுகொண்டு பெறுதற்குரியதா யிருக்கின்ற பேரின்பத்தை அடையும் முயற்சியில் ஈடுபடுத்தாமல் நிலையற்ற சிறுபயன்களைப் பெறும் முயற்சியில் ஈடுபடுத்தி வீணுக்கிக் கொள்ளலாமா? இங்ஙனம் சிறு பயன்களாகிய உலக போகங்களை நுகர்ந்து, அவ்வளவில் உடலைவிட்டுப் பிரிந்து செல்லும் உயிர்களை நோக்கி இரங்கியே ''நந்தவனத்தில் ஓர் ஆண்டி-அவன்-நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்-கொண்டு வந்தான் ஒரு தோண்டி— அதைக்-கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி'' என்ற சிந்துச் சந்தப்பாட்டு வெளிப்படுவதா யிற்று. எல்லாப் படியாலும் எண்ணினுல் இவ் வுடம்பு பொல்லாப் புழு மலி நோய்ப் புன்குரம்பையே யாயினும், இவ்வுடம்பைக் கருவியாகக் கொண்டன்றி நிலையான இன்பப் பேற்றை எய்துதல் கூடாமையால், இதனுல் பெறும் அப் பெரும்பயன் ஒன்றை மட்டும் கருத்துட் கொண்டு, பரம ஞானியருங்கூட இவ்வுடம்பைப் பேணுவது இன்றியமையாததெனக் கண்டு கூறினர்.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன், உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன், உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென், றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே'', எனவும்; ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார், உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே, உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே'' எனவும் வரும் திருமந்திரங்கள் இங்கே நினைவு கூர்தற்குரியனவாகும்.

நிலையற்றதாகிய உலக வாழ்வில், நிலையற்றனவாகிய சிறு போகங்களை நுகர்ந்து, அதனுல் வரும் குறுகிய கால இன்பத்தைப் பெறுவதற்கு மக்கள் மேற்கொள்ளும் முயற்சியும், உழைப்பும் எத்துணைப் பெரியனவாயிருக்கின்றன, என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். பெரிய பயனைச் சிறிய உழைப்பினுல் பெறுவோர், ''சதுரர்'' என்று பாராட்டப் பெறுவர். ஆனுல், சிறிய பயனைப் பெறுவதற்கு வாழ் நாள் முழுவதும் உழைத்து

மடிகின்ற பெரும்பாலான மனித இனத்தவரது அறியாமைக்கு என்ன செய்ய இருக்கின்றது?

துன்பத்திற்குக் கொள்கலமாயிருக்கின்ற பிறப்பிலிருந்து விடுபட்டாலன்றி, நிலையான பேரின்பத்தை அடைய முடியாது. பிறந்து வாழுவோர் அனைவரும் இறந்துபோவது உறுதி. "தோற்றம் உண்டேல் மரணம் உண்டு'' என்பது, ஆளுடைய நம்பிகள் திருவாக்கு. பிறப்பு இறப்புக்களின் பாற்பட்டு அல்லலுறுகின்ற உயிர்கள், அவற்றிலிருந்து விடுதலை பெற, அவையிரண்டும் இல்லாத சிவபெருமான் திருவடித் துணையை நாடிக் கூடுவதே சிறந்த உபாயமாகும்,

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேரா தார்'' என்பது, திருக்குறள். ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான், மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'' என்பது, திருவாசகம். ''மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப் பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்'' என்பது தேவாரம்.

''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பமெனவும், பிறவார் உறுவது பெரும் பேரின்பமெனவும்'' அநுபவ வாயிலாக அறிகின்ற மக்களிற் பெரும்பாலோர், அப்பிறப்புக்களில் நீங்கி உய்திபெற எண்ணுதிருப்பது ஒரு புறமும், எஞ்சியுள்ள சிறுபான்மையினரிற் சிலர் உய்திபெற எண்ணிப் பிறப்பிறப்பின் பாற் படும் சிறு தெய்வங்களை நாடி நின்று, பெறத்தக்க பயனைப் பெறுது போவது மற்றெருரு புறமுமாக உலகம் அலமந்து கொண்டிருக்கின்றது. ''சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம், சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றேம்'' என்பது, அநுபவ மெய்ஞ்ஞானியாகிய அப்பர் அடிகளின் அருளுரை.

பசி நீக்கத்தை வேண்டுமவன் பசித்திருப்போனிடம் சென்று இரந்து நிற்பது அறிவுடைமையாகாது. பிறப்பு நீக்கத்தை வேண்டுவோர், பிறப்பில்லாத பெருமானை வேண்டி நிற்பதுதான் முறை. சிவபெருமான் ஒருவரே ''பிறப்பிறப் பில்லாதவர்'' என்பதை ''எல்லார் பிறப்பும் இறப்புமியற் பாவலர் தம், சொல்லால் தெளிந்தேம் நம் சோணேசர்— இல்லில், பிறந்த கதையும் கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதை யுங்கேட்டி லேம்'' என்ற வெண்பாவால் அறியலாம். செந்தமிழ் மொழியிலுள்ள சிற்றிலக்கியங்களாகிய தொண்ணூற்றுறு வகைப் பிரபந்தங்களுள் பாட்டுடைத் தலைவனைக் குழந்தைப் பருவத்தில் வைத்துப் பாடப்பெறும் பிள்ளைத் தமிழ் நூல்கள், சிவபெருமானைக் குறித்துச் செய்யப் பெறுதிருப்பதும், ஏனைய எல்லாத் தெய்வங்களையும் குறித்துச் செய்யப் பெற்றிருப்பதுமாகிய மரபும் இங்கே சிந்தித்தற் குரியதாகும்.

பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானது திருவடிப் புணையைப் பற்றினர்க்கல்லது, வேறெருவர்க்கும் பிறவிப் பெருங்கடலைக் கடந்து கரையேறும் வாய்ப்புக் கிட்டாது என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணர்ந்து கொண்டால், அப்பெருமானது திருவடிகளைப் பற்றுதற்குரிய உபாயம் யாது? என்பதை அறிந்து கொள்ளவும், அதனை முறையாகக் கடைப் பிடித்துப் பயன்பெறவும், விருப்பம் நிகழும். அத்தகைய மேலான விருப்பம் வந்தவர்களுக்குத் திருமூல தேவ நாயனர் தமது திருமந்திரமாலைக் கடவுள் வாழ்த்து முப்பத்தாறும் செய்யுளை அருளித் தந்துள்ளார். அது,

''அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே''.

என்பதாகும்.

இது போன்ற திருப்பாடல்கள் பல மரபறியாதவர்களின் வசப்பட்டு அந்தோ ! எத்துணை விபரீதங்களை உண்டு பண்ணியுள்ளன என்பதை எண்ணும்போது உள்ளம் பதை பதைக்கின்

றது. இந்தத் திருப்பாடலை வைத்துக் கொண்டு இறைவனை யாரும் எப்படியாயினும் ஏத்தலாம். அதற்கு விதி-வரம்பு போன்ற எவையும் வேண்டுவதில்லை என்று முழங்குவோரும் இந்நாளிற் பலர் இருக்கின்றனர். ''பசிக்கு எதையேனும் உண்டு வயிற்றை நிரப்பிக் கொள்க'' என்றால் மண்ணையேனும் அல்லது பொன் முதலியவற்றையேனும் உண்ணுக'' என்று சொன்னதாகக் கொள்ள முடியுமா? உண்ணுவதற்குரிய பொருள்களில் கிடைப்பதை உண்ணுக என்று சொன்னதாகத்தானே கொள்ளவேண்டும்? அது போலவே ''எப்பரிசாயினும் ஏத்துமின்'' என்னும் பொழுது, விதி நூல்களில் உள்ள முறைகளில் அவரவர் பக்குவம்-வசதிகளுக்கேற்ற முறையைக் கடைப்பிடித்து வழிபாடு செய்க'' என்று பொருள் கூறுவதுதான் பொருந்துவதாகும்.

சிவபெருமானை வழிபடுவதற்குரிய தகுதியையும் உரிமையையும் வழங்குவது சிவதீட்சை. சைவசமயிகள் அனைவரும் தமது ஏழாவது ஆண்டில் சமய தீட்சை பெற்றுச் சைவாநுட்டானம் செய்தல், திருவைந்தெழுத்தை ஓதுதல், உடம்பாலாகிய திருத்தொண்டுகளைச் செய்தல் ஆகியவற்றை நியமமாகக் கடைப்பிடிக்கும் கடப்பாடுடையவராவர். இவர் சிவபெருமானை ஆண்டவனாகவும், தம்மை அவரது அடிமைகளாகவும் கொண்டு பணி செய்வர்.

இவரிற் பக்குவம் பெற்றோர் விசேட தீட்சை பெற்று இறைவனுக்கு உடம்பாலும் உள்ளத்தாலும் பணியாற்றி அவரைத் தந்தையாகக் கொள்ளுவதும், இவரிலும் பக்குவம் உற்றோர் நிருவாண தீட்சை பெற்று உள்ளத்தால் பணியாற்றி அவரை நட்பாளராகக் கொள்ளுவதும் சைவ மரபுகளாகும். பொது நிலையிலிருந்து மேம்பட்ட சிறப்பு நிலையில் முதலில் இறைவன் தந்தையாகப் புறத்தே யிருந்து அருள் புரிவதும், பின்னர் உற்ற தோழனாகி அகத்தேயிருந்து அருள் புரிவதும், இத்திருப்பாடலில் ''அப்பனை-ஆரா அமுதினை'' என்று வரும் குறிப்பால் அறியப் பெறுகின்றது. நந்தி என்பது சிவபெருமானுக்குரிய திருப்பெயர்களுள் ஒன்று.

வேண்டுவன அனைத்தையும் மெய்யடியார்களுக்கு வழங்கும் வள்ளன்மை, சிவபெருமான் ஒருவருக்கு மட்டும் உரிமையான தென்பதை ''ஒப்பிலி வள்ளலை'' என்பதனாலும், உயிர்கள் மலங்களோடு கூடி வாழும் பெத்தக் காலத்திலும், மலங்களில் நீங்கி வாழும் முத்திக் காலத்திலும் சிவபெருமானது உதவி உள்ள தென்பதை ''ஊழி முதல்வனை'' என்பதனாலும் ஆசிரியர் உணர்த்தி யருளுகின்றார்.

''எப்பரிசாயினும் ஏத்துமின்'' என்றது, ''அருள் நூல்களில் விதித்த முறையில் உங்களுக்குப் பொருந்தியதொரு முறையைக் கைக்கொண்டு வழிபாடு செய்யுங்கள்'' என்று உணர்த்தியதாகும். ''சன் மார்க்கம், சக மார்க்கம், சத்புத்ர மார்க்கம், தாத மார்க்கம்'' என்றும் சங்கரனை அடையும், நன்மார்க்கம் நால்'' என்பது சிவஞான சித்தியார். இந்த நால்வகை நெறிகளையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லுவர். இவற்றுள் ''இயன்ற ஒரு நெறியைக் கடைப்பிடித்து இறைபணி செய்க'' என்பது ஆசிரியர் கட்டளை.

சரியையாளர் அவருக்கு விதித்த பணியளவில் உரிமையுடையர், கிரியையாளர் அவர் பணியுடன் சரியையாளர் பணியையும், யோகியர் அவர் பணியுடன் சரியை, கிரியையாளர் பணிகளையும் மேற்கொள்ளும் கடப்பாடுடையர். இப்பணிகளில் யார் எந்தப் பணியில் நின்றாரோ அவருக்கு அந்தப் பணிக்கேற்ற பயன் கிடைக்கும். சரியையாளருக்குச் சிவலோக வாழ்வும், கிரியையாளருக்குச் சிவபெருமானுக்கு அருகிலிருக்கும் வாழ்வும், யோகியருக்குச் சிவபெருமானது திருவுருவத்தைப் பெற்று வாழும் சிறப்பும் உண்டென்று அருள் நூல்கள் கூறுகின்றன. சிவயோக சாதனம் முற்றி, மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றவர்க்குச் சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து சிவபோகத்தில் திளைக்கும் பெரும் பேறு கிட்டும்.

இவ்வுண்மைகளை நன்கு தெளிந்துகொண்டால், ''எப்பரிசாயினும் ஏத்துமின்'' என்பது, ''சரியை, கிரியை, யோகமாகிய நெறி முறைகளில் ஒன்றால் வழி படுங்கள்'' எனவும் ''அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே'' என்பது, அவ்வழிபாட்டு முறைக்கேற்ப அதற்கேற்ற பயனை அடையலாம்'' எனவும் ஆசிரியர் அருளியுள்ள நுட்பம் தெற்றெனப் புலப்படும். ''எப்படியாயினும்'' என்னாது ''எப்பரிசாயினும்'' என்று, ''பரிசு'' என்னும் சிறப்பு மொழியை ஆசிரியர் இங்கே பயன்படுத்தி யிருப்பதையும் சிந்தித்துக் கொண்டு, திருத்தொண்டு செய்வது நமது கடமையாகும்.

# திருப்பாவை

நாவீறர் திரு. நா. ஸ்ரீகாந்தராமானுஜ சுவாமிகள், காரைக்கால்.

திருப்பாவை என்னும் பெறுதற்கரிய போற்றத்தக்க நூல், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் இயங்கித் துலங்குவது ஒன்ருகும். இதனை அருளிச் செய்தவர் பெரியாழ்வார் திருமகளாரான ஸ்ரீ ஆண்டாள். நிலத்தியல்புக்கு ஏற்றபடி நீர் திரிவதுபோல, மக்கள் சார்ந்தவர் நிலைக்குத் தக்கவாறு இருப்பர். பரத்வ நிர்ணயம் செய்தருளி, யானைமீது வீற்றிருந்து, மதுரை அரசனுன ஸ்ரீ வல்லபதேவன் முதலியோர் சூழ ஊர்வலம் வந்தபோது, ஸ்ரீமந் நாராயணன் பெரிய திருவடி மீது திவ்வியாயுதங்கள் ஏந்திப் பெரிய பிராட்டியாருடன் சேவை சாதித்தருளினன், அது சமயம் பொங்கும் பரிவாலே திருப்பல்லாண்டு பாடியருளியவரான பெரியாழ்வாரைச் சார்ந்திருந்ததினுல் பிள்ளைப்பருவத்திலேயே பகவத் பக்திமிக்கு, அதற்குத் தக்க மிகச் சீரிய செயலில் ஆண்டாள் ஈடுபடலானுள்.

தானும் அவ் இடைப் பெண்களின் நிலையை அடைந்து, இடை நடையும், இடைப்பேச்சும், முடை நாற்றமும் பெற்ருர். இறைவனையே கூடியனுபவிக்க விரும்பினர். தனது திருத்தமப்பனுர் தொடுத்துவைக்கும் மலர் மாலைகளைச் சூடித் தான் பெருமானுக்குத் தக்கவளா என நாளும் கண்ணுடிமுன் நின்று பார்த்து வரலானுர். தான் சூடி அழகு பார்த்த மாலைகள் பெருமானுக்கு ஆகாது என்று கருதி, பெரியாழ்வார் வேறு மாலை தொடுத்துச் சமர்ப்பித்த பொழுது, ஆழ்வார் கனவில் எம்பெருமான் எழுந்தருளி, ''ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையே மணம் மிக்குளது, அதனையே நாம் விரும்புகிருேம்'' என்று தெரிவித்தருளினர். அதனுல் ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' என்று போற்றப் பெற்ருர். பூமாலை சூடிக் கொடுத்தார். பாமாலை (திருப்பாவை) பாடிக் கொடுத்தருளினுர்.

திருத்துழாயினடியில் தோன்றி, அந்தணரான பெரியாழ்வாரால் வளர்க்கப் பெற்றிருந்தும் தோல்புரையே போம் குல ஆசாரங்களை, ஆண்டாள் அன்னையார் மேற்கொண்டிலர். கிராம குலாதிகளால் வரும் பெயர், ஆன்ம ஈடேற்றத்திற்கு அழிவு பயக்கும் எனக் கருதியிருந்தனர். குலமாவது, இறைவனுடைய சம்பந்தமுடைய உயர்குலம் என்று எண்ணியிருந்தனர். ஸ்ரீ கிருஷ்ணுவதார வரலாற்றில் ஸ்ரீ கண்ண பெருமானேடு கலந்து பரிமாறிய கோபியர்களின் செயலைக் கேட்டார்.

ஆண்டாள் அன்னையார், பகவத் சம்பந்தம் உடையார் அனைவரோடும் உறவு கொண்டாடுபவராவர். இதனை ''அஞ்சு குடிக்கொரு சந்ததியார் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் - பிஞ்சாய்ப் பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும் வழுத்தாய் மனமே மகிழ்ந்து'' என்ற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தாலும் அறியலாம், அருள்மாரி வள்ளலான திருமங்கை மன்னரை ''வெட்டிமை ஐயர்'' என்றும், சுவாமி எம்பெருமானுரைக் ''கோயில் அண்ணர்'', என்றும் உறவு கொண்

டாடுவர். ஸ்ரீ கண்ணனே எம்பெருமானுக்கு மலர்மாலை தொடுத்து அளித்தவரை, அவர் பிறந்த குலத்தை நோக்காது தம் தந்தை என்று பாராட்டினுர்.

"மாட மாளிகை சூழ்மது ரைப்பதி,
நாடி நம் தெருவின் நடுவந்திட்டு
ஓடைமா மதயானை யுரைத்தனன்
கூடுமாகில் நீ கூடிடு கூடலே"

என்று நாச்சியார் திருமொழியில் கூடலிழைத்தல் என்ற பதிகத்தில் இவ்வரலாறு கூறப்பெற்றுள்ளது காணலாம். ஸ்ரீ மாலாகாரர் வீடு இருந்த தெருவினை "நம் தெரு" எனக் கூறியருளுகின்ருர் என உரையாசிரியர்கள் அருளிச் செய்வர்.

இவர் பெரியாழ்வார் பெண்மணி, ஆழ்வார் திருமகளார், பட்டர்பிரான் கோதை, திருப்பாவைச் செல்வி, என்று பாராட்டப் பெறுகின்ருர். திருப்பாவையின் சிறப்பை, "பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் வேத மனைத்துக்கும் வித்தாகும் - கோதை தமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு" என்று, வேதப்பிரான்பட்டர் பணித்துள்ளனர்.

"சீராரும் வில்லிபுத்தூர்ச் செழும் பூங்காவனம் முளைத்து திருத்தார்தொண்டன் நீராரும் அபிமான நிழல் செழித்து மெய்ஞ்ஞான நிறை பூவீன்று பாராரும் பத்தி மணம் பரப்பி திருப்பாவை மொழிப்பழத்தை ஈந்து தாராரும் அரங்கன் உரச்சயிலமிசைப் படர்கொடியைத் தாழ்வாய் நெஞ்சே" என்ற இப்பாட்டில், ஆண்டாளாகிய கொடி, திருத்துழாய் வனத்தே முளைத்து, பெரியாழ்வர் அபிமானமாகிய நிழலிலே வளர்ந்து, உண்மை நன் ஞான மலர் பூத்து, பக்தி மணம் பரப்பி, திருப்பாவை நாச்சியார் திருமொழியாம் பழத்தைத் தோற்றுவிக்க, திருவரங்கப் பெருமான் திருமார்பாகிய மலையிலே படர்ந்தது. அச்சிறப்பான கொடியை மனமே நீ என்றும் வணங்குவாயாக என்று ஆப்தர் ஒருவர் துதித்துள்ளனர்.

ஸ்ரீகண்ணனெம்பெருமானை எழுப்பி, மறைகிளத்தும் ஆன்ம வாழ்வளிக்கும் அரும் பாரதந்திரிய மதனையுணர்த்திய சிறப்பு இத்திருப்பாவையில் விளக்கப் பெற்றுள்ளன. "துயிலுங் கிருட்டிணனை எழுப்பி மறைகிளத்தும் ஆன்ம வாழ்வளிக்கும் அரும் பாரதந்திரிய மதையுணர்த்தி வரமாம்பேற்றை, ஆழ்கடற்பார் உயக்கொண்ட ஆண்டாளாம் ஆய்ச்சி எனை ஆண்டாள்வாயே" என்ருர் ஒரு சான்ருேர்,

திருப்பாவை கூறும் நோன்பு "தொல் பாவை" என்று முற்காலத்தில் பிரசித்தமான, "மார்கழி நீராட்டம்" என்ற காதை பற்றியதாகும். அதாவது, ஒருமுறை திருவாய்ப்பாடியிலுள்ள ஆயர் சிறுமியரனைவரும் கூடி, மார்கழித் திங்கள் முப்பது நாளும் விடிவோரை எழுந்து, ஸ்ரீ கண்ணனெம்பெருமானைப் பாடிக் கொண்டு காளிந்தீ நதிக்குச் சென்று நீராடி, ஸ்ரீ கண்ணனையே தத்தமக்கு நாயகனுக்கித் தர வேண்டும் என்று, அக்கால வழக்கின்படி, "காத்யாயநீ" தேவியைப் பூசித்து வேண்டி; அவளை இடையருது பக்தியுடன் நோற்ற நோன்பாகும்.

அந்நோன்பின் முடிவில், ஸ்ரீ கண்ணன் எம்பெருமான் அந் நீர்த்துறைக்கு எழுந்தருளி, அப் பெண்களின் நோன்பிற்கு உவந்து, அவர்கள் கருத்தையும் உணர்ந்து, அதற்கிசைந்து, "நீங்கள் என்னை யடையவேண்டுமென்று நோற்ருலும், அந்த நோன்பிற்கு மூலம் எதுவாளுலும், என்னைப் பூசித்தல் என்ற அந்த ஓர் வழியினுலேயே உங்களின் பிறவி என்னும் வித்து, மீண்டும் முளையாதபடி வறுபட்டு ஒழிந்துபோகும்" என்றருளி. அவர்களை ஆட்கொண்டருளினன்.

இந்த வரலாற்றுக்குரிய நோன்பையே ஸ்ரீ ஆண்டாள் அன்னையார் இத் திருப்பாவையில் அநுகரித்துத் தரிக்கின்ருர். ஆயர் சிறுமியர் நோன்பை அனுஷ்டித்து ஸ்ரீ கண்ணன் எம்பெருமானைப் பேருகப் பெற்றனர். ஸ்ரீ ஆண்டாள் அந்நோன்பை அநுகரித்து அவனைப் பெற்றனர். நாம் இத் திருப்பாவையை

அநுசந்தித்து அவனைப் பெறலாம்,' என்று நம் பூருவர்கள் முடிவு கட்டியுள்ளனர்.

திருப்பாவைப் பாசுரங்கள் முப்பது என்பது யாவரும் அறிவர். 1, மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள் எனக் காலத்தையும், நேரிழையீர், செல்வச் சிறுமியர்காள்'' என மகளிரையும் வாழ்த்துவதைக் கூறுகின்றன.

2: ''வையத்து வாழ்வீர்காள்'' என்னும் தலைப்பை உடைய பாசுரம், ''செய்யுங் கிரிசைகள்'' பரமன் அடிபாடி ''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி'' உய்யுமாறு எண்ணி, என்பவற்றால் இன்னவற்றைச் செய். இன்னவற்றைச் செய்' என்கிறது.

3. 'ஓங்கி யுலகளந்த' என்கின்ற பாசுரம் 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து, 'நீங்காத செல்வம் நிறைந்து' என்பவற்றால், வாழ்க்கையை விளக்குவதாகின்றது.

4. '' ஆழிமழைக்கண்ணா'' என்கின்ற பாசுரம், மழையை நோக்கி ஆழியுட்புக்கு முகந்து கறுத்து. மின்னி, அதிர்ந்து, வாழ உலகினில் பெய் என்று ஏவுகின்றதாகும்.

5. ''மாயனை'' என்னும் பாசுரம், தூயோமாய் வந்து, தொழுது, பாடிச் சிந்திக்கப், போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் என வினைப்பயன்கள் ஒழிந்துவிடும் என்று உறுதி செய்கின்றது,

6, 15. ''புள்ளும் சிலம்பினகாண்'' என்னும் பாசுரம் முதலாக, 'எல்லே இளங்கிளியே' என்னும் பாசுரம் வரையுள்ள பத்துப் பாசுரங்களும், 'பிள்ளாய் எழுந்திராய்' 'தேசம் உடையாய்' 'பாவாய் எழுந்திராய்' 'மாமான் மகளே' 'அம்மனாய்' 'பொற்கொடியே' 'நற்செல்வன் தங்காய்' 'போதரிக் கண்ணினாய்' 'நங்காய் எழுந்திராய்' 'இளங்கிளியே' என்றிப் புடைகளில் வரும் சொற்றொடர்களால் தன்னோடு ஒத்த இளம் பெண்களை எழுப்புவதை விளக்குகின்றன.

16. '' நாயகனாய்'' என்னும் பாசுரம், ''கோயில் காப்பானே'' 'வாசல் காப்பானே' என்பவற்றால் கோயில் காப்பாளர்களை எழுப்புவதை இயம்புகின்றன.

17. 'அம்பரமே' என்னும் பாசுரம், 'நந்தகோபாலா எழுந்திராய்' 'யசோதா யறிவுறாய்' 'பலதேவா உம்பியும் நீயும் உறங்கேல்' என்பவற்றால். நந்தகோபனையும் யசோதைப் பிராட்டியையும் பல தேவரையும் துயிலுணர்த்துவதைத் துலக்குகின்றது.

18-20. '' உந்து மதகளிற்றன்'' ''குத்து விளக்கு'' 'முப்பத்து மூவர்' என்னும் பாசுரங்கள் முறையே, 'நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்' 'மைத்தடங் கண்ணினாய்' 'நப்பின்னை நங்காய்' என்பவற்றால் நப்பின்னைப் பிராட்டியை உணர்த்துவதை இனிதே எடுத்து நவில்கின்றன. இம்மூன்று பாசுரங்களினும், ஸ்ரீ கண்ண னெம்பெருமானையும் எழுப்புவது கூறப்படினும் பின்னர்ச் சிறப்பாக 'மாரிமலை முழைஞ்சில் என்னும் பாசுரத்தில் சிறப்பாக நப்பின்னைப் பிராட்டியைத் துயில் உணர்த்துவதாகக் கொள்ளுதல் வேண்டும்.

21. ''ஏற்ற கலங்கள்'' என்னும் பாசுரம் 'ஆற்றாது வந்து உன் அடிபணியுமாபோல்' என அடிபணியும் பேற்றை அறிவிக்கின்றது.

22. '' அங்கண்மா ஞாலம் '' என்னும் பாசுரம் 'பள்ளிக் கட்டிற்கீழே... ..வந்து தலைப் பெய்தோம்' எங்கள்மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம் இழிந்து' என்பவற்றால் இறைவனின் இயல்பான குணத்தைக் குறிக்கின்றது.

23. ''மாரிமலைமுழைஞ்சில்'' என் னும் பாசுரம் ஸ்ரீ கண்ண னெம்பெருமானை எழுப்புவதைக் கட்டுரைக்கின்றது.

24.25, '' அன்றிவ்வுலகம்'' 'ஒருத்தி மகன்' என்னும் பாசுரங்கள், அடிபோற்றி திறல் போற்றி முதலானவற்றாலும், 'வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து' என்பதாலும் தங்கள் ஆசியையும் விருப்பத்தையும் தெரிவிப்பதை விளக்குகின்றன.

20. '' மாலே மணிவண்ணா '' என்னும் பாசுரம் நோன்புக்கு வேண்டுவனவான 'பாஞ்ச

சன்னியம்' முதலானவை வேண்டுமென்பதை விளக்குகின்றன.

27. "கூடாரை வெல்லும்" என்கின்ற பாசுரம் 'யாம்பெறு சம்மானம், சூடகமே...... அணிவோம்; 'ஆடை உடுப்போம்' என்பவற்ருல் தம் மகிழ்ச்சிக்கு உறுப்பாகச் செய்யவேண்டுவனவற்றைச் செப்புகின்றது,

28, "கறவைகள்" என்னும் பாசுரம் 'சிறியருளாதே' என்பதனுல் எம்மைப் பொறுத்தருளவேண்டுமென்பதை விளம்புகின்றது,

29. "சிற்றம் சிறுகாலே" என்னும் பாசுரம், 'உன்றன்னேடு உற்ருேமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்பதனுல் தொண்டு செய்யும் விருப்பத்தை வெளியிடுகின்றது.

30. "வங்கக்கடல்" என்னும் பாசுரம் 'எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்' என்பதனுல் இத் திருப்பாவையைக் கற்ருர் பெறும் பயனைப் பகர்கின்றது. இவ்வாறு, இத் தொகுப்புப் பொருளை ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்தில் உள்ள ஒரு செய்யுள் கவினுற விளக்குகின்றது. அச்சீரிய பிள்ளைத் தமிழை அருளிய பேராசிரியர் யாவர் என்று அறியமுடியவில்லை.

அச்செய்யுள் வருமாறு :

"மன்னும் மார்கழி யாதியைந்தினிற் புள்ளாதி
வாய்ந்த எல்லீறுபத்தின்
மற்ற நாயகன் அம்பரத்தினிற் காலத்தை
மாலே மகளிரை யேத்தியே
இன்னன செய் இன்னன செய் என்கை வாழ்
வெய்தும்
மேல் எழிலி இன்னனசெய், தடைதான்
யாதுமின்ருமென்கை பெண்களீரை வரை
எழுப்புதல் அவற்றினேடு
பின்னேயை எழுப்புந்து முதன் மூன்றின்
முந்துறப்
பெலபத்ரன் நிறை தந்தை தாய்
பெருவாயில் கோயில் காவலவர் ஏற்றங்கணிற்
பேறு குணம், எழுகென்மாரி
சொன்னதன் ருதியேழாசி சங்காதிபொறை
தொண்டுரை திருப்பாவையைச்
சொல்லுவார் முத்தியெய்து வரென்னக்
கோதையைச்
சுருதி யென்றுங் காக்கவே.

(காப்புப் பருவம் 11-ம் பாடல்)

இச் செய்யுளில் 'மார்கழி யாதி ஐந்து' புள்ளாதி எல்லீருனபத்து, 'நாயகன் அம்பரம் பிள்ளையை எழுப்புந்து முதன் மூன்று, ஏற்றங்கள்' எழுகென்மாரி அன்ருதி ஏழ் எனத் தொகைப்படுத்துப்பொருள் கூறும் முறை அறிந்து பெரிதும் இன்புறத்தக்கதாகும்.

'நாயகன் அம்பரம் என்ற இரு பாசுரத்தின் பொருள்களை "பிள்ளையை எழுப்புந்து முதன் மூன்றின் முந்து" என விதந்து கூறி, அதற்கேற்பப் பல பத்ரன் தந்தைதாய், வாயில் கோயில் காவலர் இவர்களை எழுப்புதல் என்று கீழிருந்து மேல் நோக்கு முறையில் நிரல் நிறையே கூர்ந்தறிய வைத்துள்ளதும் சிந்தனைக்கு இன்பம் பயப்பதாகும்.

'உந்து மதகளிறு' 'குத்து விளக்கு' 'முப்பத்துமூவர்' என்னும் மூன்று பாசுரங்களும் சிறப்பு வகையான் நப்பின்னைப்பிராட்டியையே எழுப்புவதேயாம் - எனக் காட்டுவான் 'பின்னையை எழுப்புந்து முதன் மூன்று' எனவும் 'எழுகென்மாரி' எனவும் பொருளை முன்னுகக் குறித்ததும் நுண்மாண் நுழை புலத்திற்குப் பெருவிருந்தாகும்.

திருப்பாவைப் பொருட்பாகு பாட்டைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் இச் செய்யுள் நம்மனேர்க்கு ஒரு சேம நிதியாகும்.

# செந்தமிழ்ப் பெருந்திருவிழா

## (வைகுண்ட ஏகாதசி)

திரு. கே. பட்சிராஜன், B.A., B.L., வழக்குரைஞர், திருநெல்வேலி-1.

மார்கழி மாதம்! கோயில்களில் 'சிற்றஞ் சிறுகாலே' தமிழ் முழக்கம் கேட்கிறது. மக்கள் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகச் சாரிசாரியாக ஆண்டவன் திருக்கோயில்களுக்கு உடலும் உள்ளமும் தூயராய்ச் சென்று வழிபடுகின்றனர். ஒருநாள் இரு நாளல்ல, மாதம் முழுமையும். ஓரிரு கோயிலல்ல. எல்லாக் கோயில்களிலும் தான். இறைவனைத் துயிலெழுப்பும் பாவனையாகத் திருப் பள்ளி எழுச்சி பாடப் பெறுகின்றது. ஏன் இவ்வாறு நிகழ்கின்றது?

தினமும் இரவானதும் நாம் துயிலச் செல்கிறோம். விடிவோரையில் எழுகின்றோம். அதே போன்றது தான் இந்நிகழ்ச்சியும். உலகினைப் படைத்த பரமன் ''பரமே ஸ்தானே திஷ்டதி' என்றபடி பரமபதத்திலே இருக்கிறான். விடிவோரையிலே துதிபாடி அவனை எழுப்பி வணங்கி அவன் அருள் நோக்கோடு தங்கள் அன்றைய வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள் தேவர்கள். அவர்களுக்கு நம்முடைய ஒரு ஆண்டு ஒருநாள், தைமுதல் ஆடி வரை உள்ள உத்தராயணம் தேவர்களுக்குப் பகலாகவும் ஆடிமுதல் தைவரை உள்ள தக்ஷிணாயனம் இரவாகவும் கூறப் பெறும். தேவ இரவுத் தொடக்கத்தில் திருப் பள்ளி சேரும் பரமனை அவ்விரவு முடிவான விடிவோரையில் (பிராதக் காலத்தில்) அவன் திருப் பள்ளியுணரும் முன்பே பாடிப்பரவி அவனைப் பள்ளியுணர்த்தி வணங்க முற்படுகிறார்கள் தேவர்கள். அவர்களது விடிவோரை தான் மார்கழி மாதம்.

பரம பதத்திலே உள்ள பரந்தாமன் இவ்வுலகோரும் தன்னை வணங்கி வழிபட வாய்ப்பாக அர்ச்சா மூர்த்தியாக (திவ்யமங்கள விக்கிரக வடிவமாக) திருக் கோயில்களிலே எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கின்றான். விண்ணாட்டிலே பரம பதத்திலே விடிவோரையில் அவனை அமரர்கள் துயிலுணர்த்துவது போன்று இந்நிலவுலகிலே நம் நல் வாழ்வுக்காக அமரர் விடிவோரையான மார்கழி மாதம் முழுவதும் நாம் அவனைத் துயிலுணர்த்துகின்றோம்.

இங்ஙனம் துயிலுணர்த்தப் பெறும் பரமன் துயிலுணர்ந்து வந்து சேவை சாதிக்க, அவர்கள் அவனை வணங்கித் துதித்துத் தங்கள் குறைபாடுகளை அவன் திருவடிகளிலே சமர்ப்பிக்கிறார்கள். இதில் மூன்று நிலைகள் உள்ளன. துயிலும் பரம பதநாதனை அவன் துயிலுணர்ந்தருள வேண்டித் தேவர்கள் ஒன்று கூடிச் சென்று வேண்டல்; பரமன் துயிலுணர்ந்து வந்து அவர்

களுக்குக் காட்சி அருளல்; அங்ஙனம் சேவை சாதிக்கும் பரமனை அமரர்கள் பாடிப் பரவி வணங்கித் தம் குறைபிரத்தல். இந்நிலவுலகிலே அவனைத் துயிலுணர்த்தும் நாம் ஆண்டாளது திருப்பாவையை ஓதி அவனை எழுப்புகிறோம். ஏன்? அத்திருப் பாவையிலே முன் சொன்ன மூன்று நிலைகளையும் காண்கிறோம். திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்கள் மார்கழி நோன்புக்கு அனைவருக்கும் விடும் பொது அழைப்பு, எங்ஙனம் வர வேண்டும் என்பது, யாரைப் பரவுகின்றோம் பரவினால் கிட்டும் பலன் இவை கூறும் முகவுரையாக அமைந்துள்ளன. ஆறு முதல் பதினைந்து வரை உள்ள பத்துப் பாசுரங்கள் ஆண்டாள் வீடு வீடாகச் சென்று தன்னோடொத்த சிறுமியரை எழுப்பி உடன் கொண்டு சென்றமை கூறும். பதினாறு முதல் இருபத்திரண்டுவரை, சிறுமியர் கண்ணன் கோயில் வாயிலோரை வேண்டி உள்புக்கு, பிறரை முதலில் துயிலுணர்த்திப் பின் தம் மோடொத்த நப்பின்னையை உணர்த்தி, அவளைக் கொண்டு கண்ணனை உணர்த்த வேண்டித் தாங்கள் வெளியே எம் முறையில் வந்துள்ளனர் என்பதையும் வெளியிடுவதாக அமைந்தன. கண்ணன் வரவையும் அவர்கள் அவனை வணங்கி மங்களாசாஸனம் (வாழ்த்து) செய்து அவனோடு அளவளாவித் தங்கள் குறையிரத்தலையும் இருபத்து ஒன்பதாம் பாசுரம் வரை கூறி அப்பிரபந்தத்தின் பலனை முப்பதாம் பாடலில் கூறிப் பிரபந்தத்தைத் தலைக்கட்டுகிறாள். இது ஆண்டாள் திருப்பாவைக்கே உள்ள தனிச் சிறப்பு.

மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியன்று பரந்தாமன் துயிலுணர்ந்து வந்து தேவர்களுக்குக் காட்சியளித்ததாகக் கூறுவர். துயிலுணர்ந்தெழ வேண்டுமானால் துயிலச் சென்ற காலம் எது என்ற கேள்வி எழுவது இயல்பே. அது ஆவணி மாத சுக்கில ஏகாதசி என்பர். ஆதவன் அத்தமித்ததுமே நாம் படுக்கச் செல்கிறோமா? சற்றுக் கழித்துத் தானே செல்கிறோம். அது போன்றே தேவர்களுக்கு இரவு ஆடியிலேயே தொடங்கினாலும் ஆவணி வளர் பிறை ஏகாதசியன்றே பரமன் திருப்பள்ளி சேர்கிறான். மறு நாளான துவாதசி ச்ரவண துவாதசி என்றும் சயனத் துவாதசி என்றும் பெயர் பெறும். அன்று காலை தம் பாரணைக்கு முன் பரமனை அவன் முதல் இரவு துயில் கொண்ட கோலத்திலே பக்தர்கள் சேவிக்கிறார்கள். அப்படியே மார்கழி சுக்கில ஏகாதசியன்று அவன் பள்ளி கொண்ட கோலத்திலேயே அவன் துயிலுணர்வதையும் சேவிக்கிறார்கள். அவன் துயிலுணரும் மார்கழி சுக்கில ஏகாதசி உத்தான ஏகாதசி (எழுகின்ற ஏகாதசி) எனப்பெறும். இங்ஙனம் பரமன் துயிலச் சென்ற காலை அவனது சயனத்திருக் கோலத்தையும் அவன் துயிலுணரும் போதுள்ள சயனத் திருக்கோலத்தையும் வைணவக்கோயில்களிலே தான் காணலாம். பரமன் அவனேயாதலால், பிற கோயில்களிலும் இத்திருப் பள்ளி எழுச்சி கொண்டாடப்படுகிறதே என வினவலாம். பரம் பொருளான வைகுண்ட நாதன் ஏழுலகும் தனிக்கோல் செலுத்தும் சக்ரவர்த்தியாதலின் ''இறுக்கும் இறை இறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன்மூர்த்தியாக'' அவன் படைத்த தெய்வ மூர்த்தங்கள் உள்ள கோயில்களிலும் அவ்வத்தெய்வ வழிபாட்டில் இம்முறையைப் பின்பற்றி ஒவ்வொரு முறையில் இத்திருப்பள்ளி எழுச்சி நிகழ்த்தப் பெறுகின்றது.

மார்கழி மாத சுக்கில ஏகாதசியன்று வைகுண்டத்திலே விடிவோரையில் பரமன் பள்ளியுணர்ந்து அமரருக்குக் காட்சி அளிப்பதனால் அவ்வேகாதசி வைகுண்ட ஏகாதசி எனப் பட்டது. ஆகவே அன்று துயிலுணர்த்தப் பெறும் அப்பரமனது இந்நிலவுலகத் திருக்கோயிலை வைகுண்டத்திலுள்ள அவன் திருக்கோயிலாகவே பாவித்து அவன் அங்கே துயிலுணர்ந்து வந்து கபாடம் திறந்து வெளியே உள்ளம் துள்ள நிற்கும் தேவர்களுக்குக் காட்சியளித்தலை உளங்கொண்டு இங்குள்ள அவனது திருக்கோயில்களிலும் அத்தெய்வ நாயகன் ''வைகுண்டவாயில்'' எனப் பெறும் பெருவாயில் கதவு திறக்கப் பெற்று வெளியே ''கூம்பித் தொழுகையும் கூவித்தொழு வாயும் தேம்பித் தவி யுளமுமாகத் திரைத்தெழும்'' மக்களுக்குச் சேவை சாதிக்கிறான் என்ற முறையில் வைணவக்கோயில்களின் திருவிழா நடைமுறை அமைந்துள்ளது.

இங்ஙனம் பரந்தாமன் துயிலுணர்ந்து கபாடம் திறந்து சேவை தரும் நிகழ்ச்சி தமிழ் நாட்டில் தொன்றுதொட்டே நிகழ்ந்துவந்திருக் கிறது என்றும், அப்படித் திறக்கப் பெறும் வாயில் வைகுண்ட வாயில் என்றே அழைக்கப் பெற்று வந்திருக்கிறது என்றும் தெரிகிறது. இது எல்லா வைணவக்கோயில்களிலும் நிகழ்ந் துள்ளது என்றும் காண்கிறது. குலசேகராழ் வார் இன்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் (சரித்திர ஆசிரியர் கணக்குப்படி; ஆனல் வைணவர் குரு பரம்பரைப்படி 4500 ஆண்டு களுக்குமுன்) வாழ்ந்தவர். அவர் காலத்தேயே திருப்பதி மலையில் இவ்வேகாதசி விழா சிறப்புற நடைபெற்று வந்துள்ளதாகக் காண்கிறேம். திருமலையில் ஏதாவது ஒன்ருக இருக்கப் பாரிக் கும் குலசேகரர் பாடிய ''ஊனேறு செல்வத்து' என்று தொடங்கும் பதிகத்திலே,

'' பின்னிட்ட சடையானும்
பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய
வைகுண்ட நீள் வாசல்
மின்வட்டச் சுடராழி
வேங்கடக்கோன் தான்உமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே
புகப்பெறுவே ஞவேனே ''

என வரும் பாடல் இத்தகைய வைகுண்ட வாயில் இருந்தமை குறிக்கின்றது. திருமலை என்ற திருப்பதி வானவரும் மண்ணவரும் தன்னை ஒன்ருக வந்து வணங்க வாய்ப்பாகப் பரமன் அமர்ந்த திவ்யதேசம் என்று தமிழ் மறைகளும் புராணங்களும் கூறும்.

இங்ஙனம் சேவை சாதிக்கும் நிகழ்ச்சியின் மூன்று பகுதிகள் உள்ளனவாக மேலே காட்டிய வற்றுள், சேவை சாதித்தல் இடையில்நிகழ்வது. இதற்கு முன்னும் பின்னும் நிகழும் இரு பகுதி களின் சின்னமாக வைணவக்கோயில்களிலே அவ்வேகாதசிக்கு முன் பத்து நாளும் ஏகாதசி தொடக்கமாகப் பத்து நாளுமாக அவனைப் பாடிப் பரவும் நிகழ்ச்சிகளாக்கப் பெற்றன. தேவர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியிலே (கீர்வாணம்) அவனைப் பரவுகின்றார்கள். சர் வஞ்ஞன் (யாவும் அறிந்தவன்) ஆன அவ் வைகுண்டநாதன் நம்மோடு அளவளாவி நமக் கருள் செய்ய வந்த இடத்திலே அப்பரமனை நாம் நாமறிந்த நாம் பேசும் மொழியிலே போற்றி அவனேடு அம்மொழியிலே அள வளாவுவதுதானே இயல்பு. அவனுக்கும் மகிழ்ச்சி. ''தங்கள் அன்பாரத் தமது சொல் வலத்தால் தலைத்தலைச் சிறந்து பூசிப்ப'' என் றல்லவா அவனுள் மயர்வறமதி நலம் அருளப் பெற்ற நம்மாழ்வார் கூறினர். அவை தாம் எத்துணைப் பொருள் பொதிந்த மொழிகள்! தம் தமது சொல் வலத்தால் அவனைப் பூசிப் பதே சிறப்புடைப் பூசனை என்றல்லவா ஆழ் வார் கூறுகிருர்!

ஆழ்வார்களில் கடைக்குட்டியான மறக் குல மறவனன திருமங்கை ஆழ்வார் தமிழ்ப் பண்பில் ஊறியவர். நம்மாழ்வாரிடத்திலே அவ ருக்கிருந்த ஈடுபாடு எல்லையற்றது. அதஞ லேயே நம்மாழ்வாரை 'அங்கி' என்றும் திரு மங்கை மன்னனை நம்மாழ்வாரின் அங்கம் என் றும் வைணவர் போற்றுகின்றனர். நம்மாழ் வார் திருவாய்மலர்ந்தருளிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகிய நான்மறைகளுக்கு, வடமொழி வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் அமைந்தன போன்று ஆறங்கமாக ஆறு பிரபந்தங்கள் அருளியவர் திருமங்கை ஆழ்வார்,

'' மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர் கோன்
ஆறங்கம் கூற அவதரித்தான் ''

என்பது திருமங்கை ஆழ்வாரைப்பற்றிய மணவாள மாமுனி வாக்கு. நம்மாழ்வாரின் திருவுள்ளக் கிடக்கையை நன்குணர்ந்த வர் மங்கை மன்னர். வைகுண்டத்திலே தேவர் களின் சாமகானம் கேட்கும் இறைவன் நம் மோடு கலந்து பரிமாற வந்த இடத்திலே நம் மொழியிலேயே கானம் கேட்டலையே உகப் பான் உகந்தான். அதுவே சிறப்பு என நம்மாழ் வார் அருளியதன் முக்கியத்தை உணர்ந்தார் பரகாலர்.

அவர் அரங்கனது திருக்கோயிலுக்கு ஏழு மதிலெடுத்து அரங்கன் திருமுன்பே உள்ளத்திலே ஒரு குறை தோன்றக் கைகுவித்து நின்ருர். அரங்கன் அவரை நோக்கி 'கலியா! ஏதோ உன் உள்ளத்தில் ஒடுகின்றதுபோலக் காண்கிறதே. என்ன? சொல்லு'' என்று வினவ ஆழ்வார் ''ஸ்வாமி! உம்முடைய பரம பதத்திலே சாமகானம் கேட்கிறீரே. அது போன்று இங்கு எங்கள் மத்தியிலே தமிழ்வேதம் கேட்டருளவேண்டாமோ? என்று விண்ணப்பிக்க அரங்கத்தண்ணலும்'' அதுதானே காணும் நமக்கு உகப்பு. அதற்காகவன்ருே! நாம் இங்கே கிடக்கிருேம். என்று பணித்தார். திருமங்கைமன்னர் மகிழ்ச்சியால்உள்ளம் துள்ள வைகுண்ட ஏகாதசி தொடங்கிப் பத்துநாள்களை உற்சவ தினங்களாக்கிப் அந்நாட்களில் மாறன் மறை நான்கையும் அரங்கன் சன்னிதியிலே ஓதத் திட்டம் செய்தார் என அவரது சரிதம் கூறும். அவருக்குப் பின் அத்தமிழ்மறை ஓதப் பெற்றுவந்த வழக்கு மெல்லமெல்லக் குறைந்து ஓரளவு மறைந்துபோனதுபோலாயிற்று. காரணம் ஆராயவேண்டியதில்லை. தமிழ்நாட்டிலே தமிழ் மறைகளும் அருகி நின்றன என்னும் ஸ்ரீமந் நாதமுனிகள் அவதரித்த பின் அவை மீண்டும் உயிர் பெற்றன என்பதும் சரித்திரம் கூறும் உண்மை. நாதமுனிகள் திருவரங்கன் திருக்கோயில் நிர்வாகத்தை ஏற்று நடத்திவந்த காலையில் திருமங்கை மன்னன் காலத்தே சிறப்பாக நடத்திவந்த இத்திருவாய்மொழித் தமிழ் மறைத்திருநாளைப்பற்றிய விவரங்களை அறிந்து உள்ளம் பதறி அரங்கனுக்கு உகப்பான இத்திருநாளை மேலும் சிறப்புடன் நிலைபெறத் திட்டமிட்டார். திருமங்கை ஆழ்வார் நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களை ஓத வழி செய்ததை ஒட்டி அதனைப் பெருக்கி ஈரத் தமிழ் தேக்கிடும் ஆழ்வார்களின் பிரபந்தங்கள் அனைத்தையுமே ஏகாதசிக்கு முந்தைய பத்து நாளில் இரண்டாயிரமும் ஏகாதசி தொடக்கமான பத்து நாளில் இரண்டாயிரமுமாக அரங்கன் திருமுன்பே ஓத வழிவகுத்து எம்பெருமான் ஒரு நாள் காலையில் துயிலெழும் நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து வேதங்கள் ஞானியர்க்கும் காட்ட இடர்ப்படும் அப் பரமனை நமக்கெல்லாம் கூடத் தெள்ளத் தெளியக் காட்டிய தமிழுக்குப் பெருந் திருவிழா எடுத்து மகிழ்ந்தார் அதுவும் இருபது நாள் திருவிழா!

அதுமட்டுமன்று அரங்கன் கோயிலில் பல்வேறு உற்சவங்கள் நிகழும்போதெல்லாம் அரங்கன் செவிக்கினிய தமிழ்மறைகளாகிய திவ்யப் பிரபந்தங்கள் ஓதப் பெறவும், இறைவன் திருவீதிகளில் புறப்பாடாக எழுந்தருளுங்கால் அவனுக்கு முன்பே தமிழ் மறைகள் ஒலி செய்து வழியமைக்கவும் திட்டங்கள் வகுத்தார். கோயிலொழுகு என்ற நூல் இதனை விரிவாகக் கூறும். தமிழ் மறை கேட்டலே இறைவனுக்கு மிகவும் உகப்பானது என்று தமிழுக்குத் தென்மொழிக்கு முதலிடம் தந்த ஆசார்ய பரம்பரை தென்ஞசார்ய பரம்பரை எனச் சிறப்புப் பெயர் பெற்றது.

வைகுண்டத்திலே தன்னுடைய எல்லையற்ற கல்யாண குணங்களுக்குப் போதிய போக்கு வீடின்றி அவை புகர்விட்டொளிர வேண்டுமென்றே அர்ச்சாமூர்த்தியாக இந்நிலவுலகுக்கு எழுந்தருளிய எம்பெருமான் தமிழ் நாட்டிலே அவனுலே மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களின் பாலேய் தமிழில் ஈடுபட்டு அத்தமிழின் இன்னிசையைப் பின்பற்றித் தான் செல்லும் அளவுக்கு எளியனுனன். அதனுலன்ருே பிறசமயத்தாரும் ''பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே'' என்று அவ் வைகுண்ட நாதனுக்குத் தமிழின்பால் உள்ள பக்ஷபாதத்தை வியந்து பாராட்டியுள்ளார்!

எனவே தமிழ்நாட்டில் வைணவக்கோயில்களிலே கொண்டாடப்பெறும் வைகுண்ட ஏகாதசி உற்சவம் பொதுவாகப் பரமனைத்துயிலுணர்த்தி வணங்கும் நோன்பாகக் கூறப் பெறினும் உண்மையில் வைணவர் தமிழுக்கு எடுக்கும் பெருந் திருவிழாவேயாகும்.

இன்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்நாட்டில் தமிழ் இரண்டாமிடத்துக்கு ஒதுக்கப்பெற்று வாடியகாலத்திலேயே பழந்தமிழ்ப் பரம்பொருளைப் பள்ளி

உணர்த்தும் நாளை ஒட்டி அவன் பள்ளி உணரும் முன்பும், உணர்ந்த பின்பும் அவன் திருச்செவி நிறையப் பைந்தழிழ்த் தேனைப் பாய்ச்சும் செந்தமிழ் திருவிழாவாக்கி அவனுடைய கருடக் கொடியோடு ஒக்க உயர்ந்து பறக்கத் தமிழ்க் கொடியை உயர்த்தியவர் பரம கருணை வள்ளலான ஸ்ரீமந் நாதமுனிகள் அன்று தொட்டின்று காறும் வைணவக் கோயில்களிலே தமிழ்த்தேன் வெள்ளம் தினமும் பெருக்கெடுத்துப் பாய்ந்து மக்களது ஊனையும் உள்ளத்தையும் உருக்கி உயிர்களைப் புனிதமாக்கி வருகின்றது. உற்சவம் வைகுண்ட ஏகாதசி உற்சவமானுலும் இதனைத் திருவாய்மொழித் திருநாள் என்பதே வழக்காயிற்று. நாதமுனிகளின் இத்தகைய சீரிய தெய்வத்தமிழ்த் தொண்டினைத் ‘தமிழர்’ களில் எத்தனை பேர் நன்றியோடு நினைக்கின்றனரோ அறியோம். ஆனல் நாதமுனிகள் தொடங்கி மணவாளமாமுனிவரை ஓராண் வழியாக வந்து முன் சிறப்பித்துக் கூறப்பெற்ற ஆசார்ய பரம்பரையும், அவ்வாசார்யர்களைப் பின்பற்றி வந்த, வருகின்ற வைணவரும் இவ்விறைவன் திருப்பள்ளி எழுச்சி நன்னாளான வைகுண்ட ஏகாதசியையும் அதன் முன்னும் பின்னும் பத்துப் பத்து நாளாக இருபது நாட்கள் அப்பரமனைப் பரவும் முறையில் தமிழுக்கு எடுக்கப்பெறும் பெருந்திரு விழாவையும் தங்கள் உயிரினும் மேலாகப் பேணிப் போற்றிவந்துள்ளனர் என்பது சென்ற ஆயிரம் ஆண்டுகளாக இப்பாரத பூமியில் கண்ணுடையார் கண்ட, இன்று காண்கின்ற என்றும் காணப் போகின்ற உண்மை.

இச்செந்தமிழ்த் திருவிழா தமிழ்நாட்டில் உள்ள எல்லா வைணவக் கோயில்களிலும் சிறப்புடன் நடைபெற அறநிலையத் துறையாரும் தெய்விகப் பேரவையாரும் உரிய வாய்ப்பும் வசதியும் அளித்து நாதமுனிகள் உயர்த்திய தமிழ்க்கொடி நாடெங்கும் மேலோங்கிப்பறக்க வழி செய்வார்களாக !



ஸ்ரீ ஆஞ்சநேயர், அனந்தமங்கலம்.

சென்னை-600 008.
48687

# மகாபாரதம்

(முற்றொடர்ச்சி)

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

அக்காலத்தில் எங்கும் அர்ச்சுனனைப் பற்றியே யாவரும் புகழ்வார்கள். ஒருவன் வழிவிடு என்றால், ''இவன் என்ன அர்ச்சுனனா?'' என்று கேட்பார்கள். பிள்ளைகள் வணங்கினால் ''அர்ச்சுனனைப்போல் கல்வியில் உயர்க'' என்று ஆசி கூறுவார்கள். இடி இடித்தாலும் ''அர்ச்சுனா!'' ''அர்ச்சுனா'' என்பார்கள். இவ்ற்றையெல்லாம் அறிந்த அழகிய சுபத்திரை அர்ச்சுனன்மீது அளவற்ற காதல் கொண்டிருந்தாள். அவனுடைய குணங்களையும், அழகின் நலத்தையும் பலரிடம் கேட்டுக் கேட்டு மகிழ்வார்கள்.

சுபத்திரை அந்த சந்நியாசியிடம் பலப்பல அறங்களையும் அவர் செய்த தீர்த்த யாத்திரையின் பெருமைகளையும் வேடிக்கைக் கதைகளையும் கேட்டு இன்புறுவாள்.

ஒரு நாள், ''சுவாமீ! தாங்கள் பலப்பல தேயங்கள் சுற்றியிருக்கின்றீரே! எங்கள் அத்தை வாழுகின்ற இந்திரப் பிரஸ்தம் போயிருக்கின்றீரா ?'' என்று கேட்டாள்.

''ஆம். போயிருக்கின்றேன்.''

''சுவாமீ! எங்கள் அத்தையைக் கண்டிருக்கின்றீரா ?

''ஓ. நன்றாகத் தெரியும். நல்ல உத்தமி,''

''சுவாமி! தாங்கள் எங்கள் பெரிய மாமா தருமரைக் கண்டதுண்டா ?

''ஆம் கண்டிருக்கிறேன். நல்ல புண்ணிய சீலர்''.

''குருபரா! தோள் வலிமிக்க பீமசேன மாமாவைத் தெரியுமா ?

''நன்றாகத் தெரியும்''.

''நகுல சகதேவர்களைத் தெரியுமா ?

''தெரியும்''

அர்ச்சுனனுக்கு மிகுந்த வருத்தம். தன்னைப் பற்றிக் கேட்கவில்லையே? இவளுக்கு நம்மீது விருப்பமில்லையா? என்று எண்ணிக் கவலையுற்றான்,

''சுபத்திரையே! நீ ஏன் எல்லோரிலும் உயர்ந்த விஜயனை விசாரிக்கவில்லை ?''

''சுவாமி! அவர் என் கணவன், அவர் பெயரைக் கூறக்கூடாது'' என்று வினவவில்லை. அவர் தீர்த்த யாத்திரை சென்றதாகக் கேள்விப்பட்டேன். சுவாமி! அந்த அழகிய செம்மலை எங்காவது நீங்கள் கண்டதுண்டோ ?''

''பெண்ணரசே! கண்டிருக்கிறேன். பல இடங்களில் கண்டிருக்கிறேன்''

''சுவாமி! இப்போது அந்த வீரகுமாரர் எங்கிருக்கின்றார் ?''

''அன்புள்ளவனே! உன் எதிரிலேயே இருக்கின்றார்''

சுபத்திரை சந்நியாசிதான் தான் விரும்பிய விஜயன் என்று தெரிந்து மிகவும் நாணமுற்று, கடைக் கண்ணால் கண்டு களித்தாள். அவள் மிகுந்த காதல் கொண்டாள்,

பின்னர் அவள் அந்தப்புரத்தில் காதல் தீயால் கருகினாள். அதை யறிந்த தேவகி கண்ணனையழைத்து விரைவில் திருமணஞ் செய்து வைக்குமாறு கட்டளையிட்டாள்.

கண்ணபிரான் கடலுக்கு நடுவேயுள்ள தீவில் சிவபெருமானுக்கு 34 நாட்கள் செய்யும் திருவிழாவுக்காக எல்லோருடனும் சென்றார். சுபத்திரை மட்டும் அதிதி வழிபாட்டுக்காகத் துவாரகையில் இருந்தாள்.

அர்ச்சுனன் இந்திரனை நினைத்தான். தேவர் கோமான் இந்திராணியுடனும் தேவமாதர்களுடனும் நாரதருடனும் வந்து அர்ச்சுனனை வாழ்த்தினாள். சசிதேவி தனஞ்சயனுக்குத் திருமணக் கோலம் புனைந்தாள்.

கிருஷ்ணர் ருக்மிணி சத்யபாமையுடன் வந்து சுபத்திரையை அலங்கரித்துக் கல்யாணம் விதிப்படி நடத்தி வைத்தார். வைகாசி மாதம் சுக்லபட்சம், ஹஸ்த நட்சத்திரம், திருதியை திதி, பவகரணம் கூடிய நாளில் மகர லக்கினத்தில் திருமணம் நடந்தது.

அர்ச்சுனன், தேர் விடுவதில் வல்ல சுபத்திரை தேர் நடாத்தப் புறப்பட்டான். காவல் புரியும் யாதவர்கள் பேரிகை கொட்டிப் போருக்கு வந்தார்கள். சுபத்திரை தன் கணவனைப் பார்த்து ''என் உறவினர் ஒருவரையும் கொல்லவேண்டாம். நான் திருமாங்கல்யந் தரித்த இன்று இன்னொருத்தியின் திருமாங்கல்யம் நீங்கக் கூடாது'' என்று வரங் கேட்டாள். அர்ச்சுனன் எதிர்த்த யாதவர்களை வென்று இந்திரப் பிரஸ்தம் சென்றான். நகருக்கு வெளியேயுள்ள இடைப் பாடியில், சுபத்திரையைத் தேரில் இருந்து இறக்கினான். ''அன்புடையவளே! நெருப்பில் பிறந்த வீரபத்தினி திரௌபதி உன்னைக் கண்டு சினந்து ஒரு வார்த்தை கூறிவிடுவாளாயின் அது பலிக்கும். ஆதலால் நீ இங்குள்ள இடைச் சிறுமிகளுடன் சென்று முதலில் அவளை வணங்கி அவளுடைய ஆசீர்வாதத்தைப் பெறுக'' என்றான்.

அதுபடியே இடைச்சியைப்போல் வேடந் தரித்து இடைச்சியர்களுடன் சென்று கிருஷ்ணையைப் பணிந்தாள். திரௌபதி, ''அம்மா! நீ உன் கணவனுடன் ஒற்றுமையாக வாழ்ந்து உத்தமபுத்திரனைப் பெறுக'' என்று வாழ்த்தினாள். பிறகு குந்திதேவியைத் தொழுதாள். அவள் சுபத்திரையைத் தழுவி வாழ்த்தினாள். பிறகு திரௌபதிக்கு உண்மை தெரிந்தும் முன் சொன்ன சொல்லை மாற்றவில்லை.

அர்ச்சுனன் வந்து தாயாரையும் தமையனார்களையும் பணிந்து தன் யாத்திரையில் கண்ட அதிசயங்களைக் கூறினான்.

எல்லாரும் கூடி மகிழ்ந்தார்கள்.

போர்ப்பறையைக் கேட்ட பலராமன் கிருஷ்ணன் முதலிய யாதவர்கள் அனைவரும் திடுக்கிட்டு உடனே துவாரகைக்கு வந்தார்கள். சந்நியாசியாக வந்த அர்ச்சுனன் சுபத்திரையைக் கவர்ந்துகொண்டு போனான் என்ற செய்தியைக் கேட்ட பலராமன் காலாக்கினி ருத்திரனைப்போல் சீற்றமுற்றார். ''ஆ! சேற்றுக் காலை என் சென்னிமேல் வைத்தான் அர்ச்சுனன். இதோ என் கலப்பையால் அவன் தலையைத் தள்ளுவேன் புறப்படுங்கள்'' என்று கூறி வீர கர்ஜனை புரிந்து நால்வகைச் சேனைகளுடன் போருக்குப் புறப்பட்டார்.

கண்ணபிரான் மெல்ல வந்து அண்ணனைப் பார்த்துக் கூறினார். ''அண்ணா! மன்னிக்க வேண்டும். நான் முன்னமே ஐயமுற்றேன். சந்நியாசியைச் சேர்க்க வேண்டாம் என்றேன். என் சொல்லை நீர் தட்டிவிட்டீர். நடந்தபின் சிந்தித்துப் பயன் இல்லை. அர்ச்சுனன் நமது அத்தை மகன். நம் தங்கை முறைப் பெண்; அர்ச்சுனன் தன் ஆற்றலினால் அரச தருமத்தின் படி தங்கையைக் கவர்ந்தான். இது அரசருக்குரிய அறந்தானே; அன்றியும் தனஞ்சயனை

முக்கண்ணராகிய சிவபெருமானன்றி வெல்ல வல்லவர் மூவுலகங்களிலும் இல்லை. வீணேநாம் பெண்ணையும் கொடுத்துப் புண்ணையும் பெறுவது நன்றன்று. அல்லாமலும் நம் தங்கை உடன்பட்டுத்தானே அவனுடன் சென்றாள், இப்போது நீர் அவனைக் கொன்றால் நமக்குள்ள ஒரே தங்கை கணவனையிழந்து கதறியழுவாள். அருமைத் தங்கையின் நலத்தை நாம் பார்க்க வேண்டாமா?'' என்று சமாதானம் செய்து பலராமருடன் சீதனங்கள் கொண்டுபோய் சுபத்திரைக்குக் கொடுத்தார். பாண்டவர்களும் பலராம கிருஷ்ணருடன் சேர்ந்து பரமானந்த முற்றார்கள். ஏழு நாட்கள் அங்கே திருமண விழாவைக் கொண்டாடினார்கள்.

## அபிமன்யு

சுபத்திரை கருக்கொண்டு இளஞ் சூரியனைப்போல் உரியகாலத்தில்* அபிமன்யுவைப் பெற்றாள். அவன் மிக்க வீரகுமாரனாக விளங்கினான்.

திரௌபதிதேவி ஐவரிடம் ஐந்து மக்களைப் பெற்றாள். பிரதி விந்தியன், சுதசோமன், சுருதகர்மன், சதானீகன், சுருதசேனன் என்ற பேருள்ள ஐந்து குமாரர்கள் ஐந்து சந்திரர்களைப்போல் திகழ்ந்தார்கள்.

*(1)* பிரதிவிந்தியன்:-இரண்டாவது விந்தமலை போன்றவன்.

(2) சுதசோமன்:-சூரிய சந்திரர்கள் போன்று ஒளியுள்ளவன்.

(3) சுருதகர்மன்:-சுருதம் என்ற பெரிய கர்மங்களாகிய தீர்த்த யாத்திரை முடித்தபின் பிறந்தவன்.

(4) சதானீகன்:- நூற்றுக்கணக்கான சேனைகளையுடையவன்.

(5) சுருதசேனன்:- அக்கினி தேவதையின் நட்சத்திரமான கிருத்திகையில் பிறந்தவன்; அக்கினியைப் போன்ற ஒளியுள்ள சுருதம் என்னும் சாஸ்திர ஞானத்தைச் சேனையைப் போலப் பலமாக உடையவன்.

## காண்டவ தகனம்:

தருமருடைய ஆட்சி மாட்சியுடன் நடைபெற்றது. கோடைக்காலத்தின் வெப்பத்தினை நீக்கும் பொருட்டுத் தனஞ்செயன் கண்ணனுடனும் பெண்களுடனும் யமுனை நதிக்கரை சென்று ஆடியும் பாடியும் மகிழ்ந்தான்.

தங்க நிறமுள்ள ஒரு வேதியன் அங்கு வந்து அர்ச்சுனனைப் பார்த்து, ''எனக்கு உணவு கொடு'' என்று கேட்டான். அர்ச்சுனன், ''என்ன மாதிரி உணவு வேண்டும். கேள்; தருகின்றேன்'' என்றான்.

''சுவேதகி என்ற மன்னன் பல ஆண்டுகள் யாகம் புரிந்தான். அவன் அதில் ஒழிவு பெறவில்லை. அவனுக்கு யாகஞ் செய்துவைக்க மற்ற வேதியர்கள் சலிப்புற்றார்கள். அவன் சிவனையே வேண்டினான். சிவபெருமான் கட்டளைப்படி பன்னிரண்டு வருடம் ஒரு தூண் பருமனுள்ள நெய்தாரையை நெருப்பில் சொரிந்தான். அதனால் அக்கினிக்கு மந்தம் உண்டாயிற்று. அக்கினி பிரமதேவனிடம் முறையிட்டான். பிரமா, ''கிருஷ்ணார்ச்சுனருடைய உதவியால் காண்டவவனத்தைத் தகித்தால் உன் மந்தம் தீரும்'' என்றார்.

''காண்டவ வனத்தில் இந்திரனுடைய தோழனாகிய தட்சகன் வாழ்கின்றான். அதனால் அக்கினி பலகாலும் எரிக்க முயன்றும், இந்திரன் மழையால் தடுத்துவிடுகின்றான். அந்த அக்கினி தேவன் நான். எனக்கு இந்தக் காண்டவ வனத்தை எரிக்க உத்தரவு கொடுங்கள்'' என்றான்.

அர்ச்சுனன் தன் சொல்லை நிறைவேற்றுவதற்காக, தன் தந்தையாகிய இந்திரனையும் பகைக்க உறுதி கொண்டான். அக்கினியின் ஏவலால் வருணபகவான் காண்டீபம் என்ற அறுத நாணுள்ள வில்லையும், ஒழியாத இரு அம்பறுத் தூணிகளையும் நான்கு வெண்புரவிகளுடன் அனுமக் கொடியுடனும் கூடிய அழியாத தேரையும் அர்ச்சுனனுக்குத் தந்தான்.

---

அபி—பயமற்றவன்; மன்யு—கோபமுள்ளவன்

ஏழுமுறை முயன்றும் எரிக்க முடியாத அந்தக் காண்டவ வனத்தை அர்ச்சுனனுடைய அனுமதி பெற்று அக்னி பகவான் ஏழு நாவுகளை நீட்டிச் சட சட என்று எரிக்கத் தொடங்கினான். அங்குள்ள விலங்குகள், பறவைகள், நாகங்கள், அசுரர்கள் முதலியோர் தப்பித்து ஓட முயலும்போது அர்ச்சுனன் அவைகளைக் கொன்று நெருப்பில் இட்டான்.

தக்ஷகன் என்ற நாகராஜன் அப்போது குருக்ஷேத்திரம் போயிருந்தான். அவன் மகன் அச்வசேனியைத் தாய் நாகம் விழுங்கி வெளிப்பட்டது; அர்ச்சுனன் அதன் தலையை வெட்டி நெருப்பில் இட்டான். அச்வசேனன் வால் அறுபட்டு விழுந்தது. இந்திரன் தன் நண்பனுடைய மகனாகிய அவனை நிரம்ப மழையைப் பெய்வித்துக் காப்பாற்றினான்.

இந்திரனும் தேவர்களும் வானத்திலிருந்து பாணமழை சொரிந்து போர் புரிந்தார்கள். அர்ச்சுனன் ஒருவனே மண்ணிலிருந்து அந்தனைத் தேவர்களையும் இந்திரனையும் வென்றான்.

அசுரத் தச்சனாகிய மயன் தப்பிக்க முயன்றான். அவனைக் கொல்லும் பொருட்டுக்கண்ணபிரான் சக்கராயுதத்தை எடுத்தார். அவன் ''அர்ச்சுனா'' அபயம் என்றான். அர்ச்சுனன் ''அஞ்சற்க'' என்றான். அதனால் கண்ணன் அவனைக் கொல்லவில்லை.

(தொடரும்)

---

# செய்திச் சுருக்கம்

## திருக்குறள் போட்டி—பரிசளிப்பு

ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின் சார்பில் காஞ்சிபுரத்தில் உள்ள, ''மாணவர் நல்வழி மன்றத்தின்'' சார்பில் சென்ற ஐந்து மாதங்களுக்கு முன்பாக ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாளின் அபிப்பிராயப்படி கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் திருக்குறளிலிருந்து போட்டிப் பரீட்சை வைக்க ஆங்காங்கு உள்ள கல்லூரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. இதில் 3270 மாணவ, மாணவிகள் கலந்து கொள்ள ஆர்வமுடன் முன் வந்துள்ளார்கள்.

சென்ற அக்டோபர், நவம்பர் மாதங்களில் 74 தேர்வு மையங்களில்போட்டிப்பரீட்சைகள் முறைப்படி நடைபெற்றன. இவற்றுள் 50 மையங்கள் பரிசுக்குரியவையாகத் தேர்ந்து எடுத்தனர். தொடர்புடைய கல்லூரி முதல்வர்களும், பேராசிரியர்களும், ஸ்ரீ மடத்தின் பிரதிநிதிகளும், இப்போட்டிகள் நன்கு நடைபெற ஆதரவு தந்து உதவினர். இதில் பங்கு கொண்ட மாணவ மாணவிகள் அனைவருக்கும் நற்சான்றிதழ்களும், "நல்வழித்திரட்டு'' என்னும் வெளியீடும் அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும், முதல், இரண்டாவது பரிசுக்குரியவர்களுக்கு முறையே ரூ. 100/-ம் ரூ. 75/-ம் ஸ்ரீ ஆச்சார்யாள் மடத்திலிருந்து அனுப்பப்படுகிறது. முக்கியமாகக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தமிழ் மொழிப் பற்றையும், தமிழ் மறையான திருக்குறளில் ஆர்வத்தையும், நல் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இம்மன்றத் தலைவர் திரு. வி. என் சதாசிவராவ், எம்.ஏ., செயலாளர் புலவர் திரு. ஜெய செந்தில் நாதன், பி.ஏ., இவர்களின் அயராத உழைப்பினால் இப்பணி இனிது நிறைவேறியது.

—ஆசிரியர்.

# எம்பார் வைபவம்

மகாவித்துவான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

இவ்வாசிரியருடைய திருநாமம் ஸ்ரீகோவிந்த பட்டர் என்பது. உடையவர் யாதவப் பிரகாசரிடத்தில் வேதாந்த சிரவணம் பண்ணும்போது, இவரும் உடனிருந்து அதிகரித்தவர். எம்பெருமானுடைய மாயையினால் இவர் சிலகாலம் சைவசமயப் பற்று உடையவராய்க் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் சிவத்விஜரா யிருந்துவந்து, ''தேவு மெப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப்படைத்த, தேவன் எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே'' என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் அழகிய பொருளை மாதுலரான பெரிய திருமலை நம்பி உபந்நியசித்து அருளக் கேட்டு அப்போதே சைவப் பற்றொழிந்து, பகவத் பக்த சிகாமணியாய்த் திருமலை நம்பி திருவடிகளிலே ஆச்ரயித்துத் திருவிலச்சினையும் பெற்று, பிறகு உடையவர்க்கே அறுதியாக அர்ப்பணஞ் செய்யப்பட்டவர். திருமலை நம்பியின் பிரிவை ஆற்றகில்லாத இவர் மீண்டும் அவர் திருமாளிகையேறச் சென்றவளவிலே ''விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?'' என்று சொல்லி அவ்வாசிரியர் தம்மால் மீண்டும் உடையவர் திருவடிக்கே அனுப்பப்பட்டனர். ஆதலால் ஓராண்வழி ஆசாரிய பரம்பரையில் எம்பார் உடையவர்க்குப் பின் அடுத்த ஆசிரியரா யினர்.

ஆசார்யருடைய திருநாமத்தை வகிப்பதும் சிஷ்ய லட்சண மாதலால் இவர் எம்பெருமானருடைய திருநாமத்தையே வகிக்க விரும்பினர். திருநாமத்தின் ஐக்கியம் பலரும் மயங்குதற்கு ஏதுவாகுமே என்று எண்ணி அத்திருநாமத்தின் ஏகதேசவிகாரமாக எம்பார் என்பது இவர்க்குத் திருநாமம் ஆக்கப்பட்டது, இவருடைய சிஷ்யரான பட்டர், எம்பார் என்கிற இத்திருநாமத்தை 'எம்,பார்' என்று இரண்டு சொற்களாகப் பிரித்துக்கொண்டு தனியனிட்டு அருளின அழகு அற்புதமானது,

> ''ராமாநுஜ பதச்சாயா
> கோவிந்தாஹ்வா நபாயிநீ
> ததாயத்தஸ்வரூபா ஸா
> ஜீயாத் மத்விச்ரமஸ்தலீ.''

என்பது எம்பாருடைய தனியன். நிழலானது வியக்தியை விட்டு நீங்காதிருத்தல் போல இவர் எம்பெருமானர் தம் இணையடியை விட்டு நீங்காதிருந்தமைபற்றி ராமாநுஜபதச்சாயா என்னப் பெற்றிருந்தார். தாபாதுரர்களுக்கு நிழல் இளைப்பாறும் இடமா யிருப்பதுபோல சம்சார தாபதப்தரான தமக்கு (பட்டர்க்கு) இவ்வாசிரியர் இளைப்பாறுமிடமாக அமைந்ததனல் 'எம்,பார்' என்று பிரித்துப் பொருத்தமாகப் பொருள் கொண்ட வாற்றை 'மத்விச்ரமஸ்தலீ' என்ற சொல்லால் வெகு அழகாகக் காட்டினர்.

எம்பாருடைய ஞான பக்தி விரக்திகள் லோகவிலக்ஷணமா யிருக்கும், அருளிச் செயல்களிலே இவர் அருளிச்செய்யும் அர்த்த நிர்வாகங்கள் இன்சுவையே வடிவெடுத்ததா யிருக்

கும். திருவாய்மொழியில் 'மின்னிடை மடவார் கள்' என்னும் பதிகத்தின் இரண்டாம் பாட்டின் அவதாரிகையில் ஈடு முப்பத்தாறுயிரப் படியில் இவர் விஷயமாக அருளிச் செய்துள்ள சில ஸ்ரீசூக்திகளைக் காண்மின்-

''எம்பார்தாம் பாஹ்ய விஷயங்களில் ருசி யில்லாமையாலே பதார்த்த ஞானமின்றிக்கே இருப்பர்; இப்படி யிருக்கையாலே 'ஸ்த்ரீக ளுக்கு அசாதாரணமான சிஹ்நங்கள் எங்ஙனே இருக்கும்படி?' என்று சிங்கப்பிரானைக் கேட் டருளினர் என்று பிரசித்தமாயிருக்கும். இப் படியிருக்கின்றவர் தாம் 'மின்னிடைமடவார்' அருளிச் செய்யப்புக்கால் 'இந்த சந்நியாசி பிரட்டுப்பாடத் தொடங்கினர்' என்பராம் பிள்ளையுறங்கா வில்லிதாசர். இவருடைய பகவத் விஷயத்தில் அவகாஹனமிருக்கும்படி. ஒரு க்ஷுத்ர விஷயத்திலே நாலு நாள் வாசனை பண்ணினவர்கள் போர விதக்தராயிரா நின்றுர் கள். அவ்வளவு அளவில்லவிறே சமஸ்த கல் யாண குணாத்மகனோடே நெடுநாள் வாசனை பண்ணினர்க்கு இருக்கும்படி''.

''ஈசுவரன் முன்னே வந்து நின்றுலும் வா என்பாரையும் கிடையாத சம்சாரத்திலே, அவன் அல்பம் தாழ்த்தானென்னு போ என்பா ரைப் பெறுவதே!' என்பர் எம்பார்'' என்பன வாம். இங்ஙனே எம்பாருடைய ஈடுபாட்டை விளக்கும் அருளிச் செயல் வியாக்கியான ஸ்ரீ சூக்திகள் பலவுள்ளன. சிலவற்றை மட்டும் ஈண்டு எடுத்துக் காட்டுவோம்.

பெரியாழ்வார் திருமொழியில் (2—1) மெச்சூது சங்கமிடத்தானென்கிற அப்பூச்சிப் பதிகத்தை நம்பெருமாள் சந்நிதியில் உய்ந்த பிள்ளை என்கிற அரையர் அபிநயிக்குமளவில் ''அத்தூ தனப்பூச்சி காட்டுகின்றுன் அம்மனே அப்பூச்சி காட்டுகின்றுன்'' என்றவிடத்திற்கு— கண்ணை இறுத்துவது மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலாகச் செய்யும் பயங்கரமான பால சேஷ்டைகளைக் கண்ணன் செய்வதாக அபிநயித்துக் காட்டினர். உடை யவர்பின்னே எழுந்தருளியிருந்த எம்பார், அந்த அபிநயரீதியைக் கண்டு திருவுள்ளத்திற் குறை கொண்டு. தம் திருக்கைகளைத் திருத்தோள்க ளோடு சேர்த்துக் காட்ட, அரையரும் தாம் முன்னே அபிநயித்த ரீதியை விட்டு எம்பார் காட்டியதுபோலவே எம்பெருமான் திருத் தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்தார். இதனுல் ஏற்படுவதாவது—தூதனுய்த் தன் சௌலப்பி யத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி இருப்ப வன், அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈசுவரத்வ சின்னங்களான சங்கு சக்கரம் முதலி யவற்றையும் காட்டுகின்றுன் என்பது சுவாப தேசார்த்தமாம். இது எம்பாருடைய திரு வுள்ளத்தில் தோற்றின அரும் பெரும் பொருள். அரையர், முதலில் சாமாந்யமாக வும் பிறகு இங்ஙனே விசேஷமாகவும் அபிநயித் தபடியைக்கோஷ்டியில் கடாட்சித்தஎம்பெருமா ஞர், இது எம்பாருடைய திருத்தமாகவே யிருக்க வேண்டுமென்று கருதி, உடனே பின்னே திரும்பிப் பார்த்து, 'எம்பாரே! நீர் இருந்தீரோ?' என்றுராம்.

பெருமாள் திருமொழியில் (6-8) ''என்னை வருக எனக் குறித்திட்டு'' என்ற பாசுரத்தின் ஈற்றடி—''இன்ன மென்கையகத் தீங்கொரு நாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே'' என்பது. கண்ணபிரானுலே வஞ்சிக்கப்பட்ட ஒரு ஆய்ச்சி 'கண்ணு! இச்சமயம் நீ தப்பித்துக் கொண்டு போனுலும் மற்றொரு சமயம் நீ என் கையில் அகப்படாமற் போகாய்; அப்போது நான் என் கோபத்தைத் தணித்துக்கொள் வேன்' என்பது இங்கு விஷயம். உய்ந்தபிள்ளை என்கிற அரையர், நம்பெருமாள் சந்நிதியில் ஒருகால் இப்பாசுரத்தை அபிநயிக்கும்போது, கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பது மாய் அபிநயித்தார். மறுபடியும் கண்ணன் ஆய்ச்சிகையில் அகப்படும்போது அவனை இவள் கையாலடித்தும் காலால் துவைத்தும் தன் கோபத்தைத் தணித்துக் கொள்வதாக அரையர் அபிப்பிராயப் பட்டபடி. அப்போது கோஷ்டியி லெழுந்தருளியிருந்த எம்பார் இங் ஙனே அரையர் காட்டிய அபிநயத்தைக் கடாட் சித்து அரையர்க்கு ராசிக்கியம் போராதென்று திருவுள்ளம் பற்றி அந்தோ! அப்படி அவள்

செய்தாளாகில் ''மம சிரஸி மண்டநம் கோபிகா தாடநம்'' என்றிருக்கிற கண்ண்பிரானுக்கு அது வருத்தமோ? அஃது அவனுக்குப் பெருப்பேருகு மன்ருே: ஆகவே அதுவன்று கருத்து. கண்ணு! நீ மீண்டுமொருகால் என்பால் வந்தவாறே முகங்கொடாமல் முகத்தை மாறவைத்து என் கோபத்திற்குப் போக்குவீடு செய்துகொள்வேன் காண்-என்பதாகவே கருத்துக் காட்ட வேணுமென்று கொண்டு தாம் (எம்பார்) அவ்வாருக முகத்தை மாறவைத்துக் காட்ட, அரையரும் கருத்தறிந்து மறுபடியும் அங்ஙனே அபிநயித்துக் காட்டினர் என்பது பிரஸித்தம்.

நாச்சியார் திருமொழியில் (4-11) ''நீடு நின்ற நிறைபுகழாய்ச்சியர்'' என்றவிடத்திற்கு, ஆய்ச்சியர்க்கு நிறைபுகழாவது, கிருஷ்ணனை இன்னுள் நாலு பட்டினிகொண்டாள், இன்னுள் பத்துப்பட்டினி கொண்டாள் என்னும் புகழ் காணும்'' என்பராம் எம்பார். நம்மைப் போலே உண்டியே உடையே உகந்தோடித் திரிந்து பழுதே பலபகலும் போக்காமல் முப்போதும் பகவத் விஷய சிந்தனையேயாய்ப் போதுபோக்குகிறுர்கள் ஆய்ச்சிகள்-என்ற காரணத்தினல் அவர்கட்குப் புகழ் நிறைந்திருக்குமென்று சாமாந்நியமாகச் சிலர் பொருள் கொள்வராம்: எம்பார் கூறும் பொருளாவது—(விவரிப்போம் கேண்மின்:) கண்ணபிரானது வரவை யமுனை யாற்றங்கரையில் எதிர்பார்த்திருப்பர்கள் பல மாதர்: இவன் இப்படிப் பல பேர்களை எதிர்பார்த்திருக்குமாறு செய்துவிட்டுத் தன்மனத்துக்கு இனியளான ஒருத்தியோடே கலந்திருந்து போதுபோக்கும். அப்போது எதிர்பார்த்திருந்த மாதர்கள் இனி இவன் இங்கேற வருவானுகில் முகங்கொடுத்து ஒரு பேச்சும் பேசக்கடவோமல்லோம் என்று சங்கல்பஞ் செய்துகொண்டு அளவு கடந்த ரோஷத்துடனிருப்பர்கள். பிறகு தனக்கு ஒழிந்த போது ஒருநாள் கண்ணன் அளவிறந்த அன்பு பூண்டவன்போல ஆடிப் பாடிக்கொண்டு அவர்கள் முன்னே வந்து நிற்பன், அப்போது அவர்கள் தாங்கள் முன்பு செய்துகொண்ட சங்கல்பத்தின்படியே முகங்கொடாமலே இருப்பர்கள், அப்போது கண்ணன் கண்ணீர்விட்டழுவதும் காலிற் கும்பிடுவதுமாய் ஊணுமுறக்கமுமின்றியே பல நாட்களாகவும் அவர்களது வீட்டைவிட்டுப் பேராதே இடைகழித் திண்ணையிலே கிடந்துபடுவன். இப்படி நாலுநாள் பட்டினி கிடந்தபிறகு ஒருத்தி மனமிரங்கி முகங்கொடுப்பாள், மற்ருெருத்தி அவ்வளவினும் மறம் மாருதே இவன் எட்டுநாள் பட்டினிகிடந்த பின்பு முகங் கொடுப்பாள், மற்றுமொருத்தி அவ்வளவிலும் ஊடல் தீராதே இவன் பத்து நாள் பட்டினி கிடந்தபின் முகந்தருவாள், ஆக இங்ஙனே பல பல நாள் பட்டினி கிடந்தாகிலும் அவ்வாய்ச்சிகள் பக்கலிலே இவன் முகம் பெற நினைப்பது, அவர்களிடத்துள்ள தேக குணம் ஆத்ம குணம் முதலியவற்ருலான வைலக்ஷண்யத்தைப் பற்றவாம். இதனல் அவர்களுடைய புகழ் வீறுபெறுமாயிற்று.

இங்ஙனே இவ்வாசிரியர் ஆங்காங்குப் பரமரஸமயமான பொருள்களைப் பணிப்பது அருளிச் செயல்வியாக்கியானங்களில் அவகாஹித்துக் காணவுரியது. இவருடைய திருவடிகளிற் பழகின பெருமையினல்தான் பட்டர் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல மிகவும் ஒளி மல்கினர்,

# திருவாசகம்

டாக்டர் திரு. மு. வரதராசனுர், M.A., M O L., PH.D.
துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.

மாணிக்கவாசகர் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்து, இறைவன் அருளைப்பெற்ற ஞானி. அவருடைய பாட்டுக்கள் உயர்ந்த அநுபவத்தை எடுத்துரைக்கும் ஞானப் பாடல்கள்; நெஞ்சை உருக்கும் கனிவு அமைந்தவை. உருக்கமான பக்தியும், உயர்ந்த மெய்யுணர்வு நிலையும் அந்தப் பாட்டுக்களில் ஒருங்கே காணப்படுகின்றன. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்பது பழமொழியாகியுள்ளது. ''மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறை'' என்று இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்தைப் போற்றிக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகர் மதுரையில் பாண்டிய அரசனிடம் அமைச்சராக இருந்தவர். நாட்டை ஆளும் பொறுப்பில் பல காலம் பயின்றவர் ஆகையால், உலகியல் அறிவு நிறைந்தவராக விளங்கினர். ஆயினும் அந்த அமைச்சர் பதவியோ, அதனல் பெற்ற செல்வாக்கோ, புகழோ அவர் மனத்துக்கு நிறைவு தரவில்லை. உலக வாழ்வு செல்வத்தாலும், புகழாலும் எவ்வளவு நிறைந்திருந்த போதிலும் ஏதோ ஒரு பெருங் குறை உடையதாகவே தோன்றியது,

தொலைவே இருந்து ஒரு குன்றைக் காணும் சிறுவனுக்கு, அதன் மேல் ஏறி நிற்க வேண்டும் என்ற ஆசை தோன்றும். அதன் அருகே செல்லும்போது அவனுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும். அந்த மகிழ்ச்சி நீடிக்காது. அதற்குள் ஒரு குறை தோன்றும். குன்றின் அடிப்பகுதியில் உள்ள ஒரு பாறையின் மேல் சிறுவன் ஏறுவான். அந்தப் பாறைமேல் நின்று கீழேபார்த்தால், தான் ஏறி வந்த உயரத்தை உணர்ந்து மகிழ்வான்; மறுபடியும் திரும்பி அந்தக் குன்றின் மேற்பகுதியைப் பார்த்தவுடன், அந்தச் சிறு மகிழ்ச்சி மறைந்து குறை தோன்றும், இன்னும் ஏறிப் பார்க்கவேண்டும் என்று ஆசை ஏற்படும். அவ்வாறே சிறிது சிறிதாக ஏறி ஒவ்வொர் இடத்திலும் நின்று கீழே நோக்கும்போது மகிழ்ச்சியும், மேலே நோக்கும்போது மறுபடியும், மறுபடியுங் குறையும் தோன்றும். குன்றின் உச்சியை அடைந்து அங்கிருந்து பார்க்கும்போது, பெருமகிழ்ச்சி போல் தோன்றும்; குறிக்கோளை அடைந்து விட்டாற் போன்ற நிறைவு மனத்தில்ஏற்படும். ஆனல், எல்லையற்று விரிந்து உயர்ந்து கிடக்கும் வானப் பரப்பை நோக்கி உணரத் தலைப்பட்டவுடன், அந்த மகிழ்ச்சியும் மறையும்; வானத்தே உயர்ந்து பறக்கும் பறவைகளைப்போல் பறக்கும் ஆற்றல் இல்லையே என்ற குறை ஏற்படும்.

உலக வாழ்க்கையும் அப்படிப்பட்டதே ஆகும். இளமை முதல், ஆற்றல், செல்வம், பதவி முதலியவற்றில் படிப்படியே உயர

வேண்டும் என்ற ஆசையும், ஒவ்வொரு படியையும் அடையும்போது மகிழ்ச்சியும், பிறகு அடுத்த படியை எண்ணி ஏங்கும் குறையும் மாறி மாறி ஏற்படும். உயர்ந்த அமைச்சர் பதவியும், பெருமையும், செல்வாக்கும் பெற்றிருந்த மாணிக்கவாசகரின் வாழ்க்கையில் உணரப்பட்ட குறை, குன்றின் மேல் ஏறி நின்றும் பறக்க முடியவில்லையே என்று உணரும் குறை போன்றது ஆகும். எல்லாம் பெற்ற பிறகும், சிவபெருமான் திருவருளைப் பெறவில்லையே என்ற குறை அவர் நெஞ்சத்தில் இருந்து வந்தது.

திருப்பெருந்துறை என்ற ஊரில் அந்தக் குறை தீரும் வழி பிறந்தது. சிவபெருமான் அவர் விரும்பும் குருவடிவாய் எழுந்தருளினார். ஒரு குருந்த மரத்தின் நிழலில் அடியார் கூட்டத்தின் நடுவே காணப்பட்டார். மாணிக்கவாசகர் அந்தப் பெருமானின் கருணை நோக்கினால் கவரப்பட்டார்; குருவருளால் ஆட்கொள்ளப் பட்டார்.

''சன்னால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்டருளினன் காண்க.

என்று அவரே தாம் பெற்ற பெரும்பேற்றை விளக்கியுள்ளார்.

குருவடிவாய் வந்தவரின் திருவருளைப் பெற்றவுடன், மாணிக்கவாசகர் புத்துணர்வு பெற்றார்; உடம்பெல்லாம் தேன் பாய்ந்தது போல் உணர்ந்தார். உள்ளத்தில் ஆனந்த அநுபவம் உற்றார்; தம்மை மறந்தார்; வியந்தார்; மயங்கினார்: இன்னது என்று சொல்ல இயலாத நிலை அடைந்தார்; அந்நிலையில் ஆட்கொண்ட பெருமான் மறைந்தார். தெளிவு பெற்றுத் தேடிய மாணிக்கவாசகர் அவரைக்காணவில்லை. உடனே அலறினார்; கலங்கினார்; ஓலமிட்டார்; ஏங்கினார்; பலவாறு வேண்டினார்; பாடினார். இந்த நிலைகளே அவர் பாடிய திருவாசகப் பாட்டுக்கள் பலவற்றில் காணப்படுவன. சிலவற்றில் அவர் பெற்ற ஆனந்த அநுபவமும், வேறு சிலவற்றில் பெருமானை விட்டுப் பிரிந்த பிரிவாற்றாமையும், இன்னும் சிலவற்றில் அவர் பெற்ற தெளிந்த மெய்யுணர்வும் ஆகிய மூவகைப் பொருள் அமைந்தவை திருவாசகப் பாட்டுக்கள்.

''பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவம் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்......
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன்ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி
நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளம் கொண்டோர் உருச்செய் தாஅங்
கெனக்கு
அள்ளூ றாக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்''.

இவ்வாறு அவர் வியந்து சொல்லும் அநுபவம், சொல்லுக்கு அடங்காதது என்கிறார்; சொல்லுவது அறியேன் என்கிறார்.

''அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர்
உணர்வே
யான்உன்னை உரைக்குமா றுணர்த்தே.''

இது முதலான பல பாட்டுக்களில் அவர் பெற்ற ஆனந்தத்தை நினைத்து மகிழ்கின்றார். ''அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்'' என்று பூரிப்படைகிறார். குருபிரானாக வந்தவர், தம்மையே மாணிக்கவாசகர்க்குத் தந்து, அதற்கு ஈடாக அவரையே பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார். ''தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை'' என்று சதுரப் பாட்டை எடுத்துப் பேசுகிறார்.

ஆனால் குருபிரான் மறைந்த பிறகு பிரிவாற்றாமையால் நைந்து உருகி முறையிடுகிறார். ''என்னை நீயே வலிய வந்து ஆட்கொண்டாய். அப்போது காணாத குற்றம் இப்போது என்னிடம் புதிதாகக் கண்டாயோ? என்னை இந்த மண்ணுலகில் தனியே வருந்துமாறு விட்டுச் சென்ற காரணம் என்னவோ?'' என்று முறையிடுகிறார்.

''ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்?
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.''

இவ்வாறு முறையிடுதல் மட்டும் அல்லாமல், இறைவனைப் பிரிந்த பிரிவால் மிக வருந்துகிறார்; பாடிச் சோர்கிறார். மீண்டும் எழுந்தருளித் தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்றும், தம்மிடம் வருமாறு அருள்புரிய வேண்டும் என்றும், அவ்வாறு தம்மை ஏற்றுக் கொள்ளாவிடில் தாம் வாழ விரும்பவில்லை என்றும் முறையிடுகிறார், ''யாரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்துரைக்கேன்?'' என்கிறார். ''வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்'' என்று தம் முடிவை எடுத்துரைக்கிறார்.



மதுரையில் அமைச்சர் பதவியில் ஒட்டியிருந்த காலத்திலேயே, அவர் தம் நெஞ்சின் ஆழத்தில் ஒரு குறை இருந்து வந்தது; கடவுளருளை நாடிய பசி இருந்து வந்தது. திருப்பெருந்துறையில் குருபிரானின் அருளைப் பெற்றுப் பிரிந்த பிறகு, அந்தக் குறை தெளிவான வடிவம் பெற்றது. அது வரையில் எது எதையோ மனத்திற்குத் துணை என்று கொண்டிருந்ததை எல்லாம் துணிந்து கைவிட்டார். கடவுளே மனத்துணை எனக் கொண்டார். பதவி முதலியவற்றை வாழ் முதல் என்று கொண்டிருந்த மயக்கத்தை அடியோடு துறந்தார்; இறைவனே வாழ் முதல் எனத் தெளிந்தார். செல்வம் முதலியவற்றை எய்ப்பில் வைப்பு என எண்ணியிருந்த பொய்ம்மை தீர்ந்தார்; சிவனருளே எய்ப்பில் வைப்பு என்ற மெய்யுணர்வு பெற்றார். ''மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு எய்ப்பில் வைப்பே'' என்று பாடினார். அந்நிலையில், இறைவனின் அருளை நாடி அடைவதற்குத் தடையாக-இடையூறாக இருப்பது தம் உடம்பே என உணர்ந்தார். ''துயர்தரும் இந்த உடம்பு என் ஆன்மிகமுயற்சிக்கு இடையூறாய், என்னைச் சிறைப்படுத்தும் ஒரு வலிய வலையாக உள்ளதே'' என்றார். இந்த வலையை இனி ஒரு தினைப்பொழுதும் பொறுத்திருக்கமாட்டேன் என்றார்; ''தினைத் துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண் வலையே.''

இத்தகைய பாட்டுக்களில் நெஞ்சை உருக்கும் நீர்மையைக் காண்கிறோம். ஒவ்வொரு தொடரும் நெகிழ்ச்சியைப் பெருக்கி நெக்குருகச் செய்யவல்ல கனிவுடன் அமைந்திருக்கக் காண்கிறோம். மாணிக்கவாசகர் நெஞ்சத்தின் உருக்கத்திலிருந்து பிறந்த சொற்கள் ஆகை

யால், திருவாசகப் பாட்டுக்கள் இன்றும் நூறாயிரக்கணக்கானவர்களின் நெஞ்சை உருக்கி வருகின்றன. உள்ளங்காலிலிருந்து உச்சி வரையில் உடம்பு முழுதும் நெஞ்சமே ஆக உருகவேண்டும் என்று ஆசைப்பட்டவர் அவர். உடம்பெல்லாம் கண்ணாக இருந்து கண்ணீர் வெள்ளம் பெருகவேண்டும் என்று விழைந்தவர் அவர்:

''உள்ளந்தாள் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்.''

இவ்வாறான கனிவும் உருக்கமும் மிகுந்த பக்திப் பாட்டுக்களுக்கு இடையே, தெளிந்த உண்மைகளை உணர்த்தும் ஞானப்பாட்டுக்களும் உள்ளன. உயிரின் தன்மை என்ன, உலக வாழ்க்கை எப்படிப்பட்டது, வாழ்க்கையில் உய்வதற்கு வழி என்ன, இறைவன் தன்மை என்ன, திருவருள் கூடுவது எவ்வாறு முதலிய பல உண்மைகளைத் தெளிய உணர்த்தும் உயர்ந்த தத்துவப் பாட்டுக்கள் திருவாசகத்தில் உள்ளன.

---

# செய்திச் சுருக்கம்

**சித்தலிங்கேசுவர சுவாமி விழா :**

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலின் சத்திவிலாச சபையில், பகவான் கடையூர் ஸ்ரீ சித்தலிங்கேசுவர சுவாமிகள் ஐந்தாம் நூற்று (500-ஆம்) ஆண்டு விழா, டிசம்பர் 6, 7 தேதிகளில் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது. கும்பகோணம் ஜகத்குரு சாந்ததேவ சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் மகாசந்நிதானம் அவர்கள், ஷட்ஸ்தலக் கொடியை ஏற்றி வைத்தார்கள். காவேரிப்பட்டினம் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். நாகராசமணியக்காரர், M.A., அவர்கள் வரவேற்புரையும்; தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C., அவர்கள் தொடக்கவுரையும் ஆற்றினார்கள். ஓய்வு பெற்ற நீதிபதி எச். ஆர். மகந்தையா, B.A., (Hons.) L.L.B., சென்னை ரயில்வே சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு. சி. ஆர். பசவப்பா, திரு. என். எம். கோவிந்தராச நாட்டார், B.A. L.T., திரு. எஸ். விஸ்வநாத பாகவதர், அறநிலைய ஆணையர்திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S., பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார், கோவை திரு. கிரிதாரி பிரசாத், B.A., B.L., யாழ்ப்பாணம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் முதலிய பெருமக்கள் கலந்து கொண்டு, சிறப்புரை ஆற்றினர். கும்பகோணம் பெரியமடத்தின் செயலாளர் திரு. ஆர். திருநாவுக்கரசு முதலியார், B.A., அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

—ஆசிரியர்.

# மாகறல் அளித்த மாபெரும் தமிழறிஞர்

ந.ரா. முருகவேள், M. A., M. O. L

## முன்னுரை :

இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற தமிழ்ப் பெரும் புலமைச் சான்ருேர்களின் வரிசையில், திருமாகறலில் தோன்றிச் சிறந்து விளங்கிய செந்தமிழ்ப் பெரும்புலவர் திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள், சிறப்பிடம் பெறுபவர் ஆவர்.

சீர்காழி என்ற அளவில் திருஞானசம்பந்தரையும், திருக்காளத்தி என்ற அளவில் கண்ணப்பரையும் நாம் நினைவு கூர்வதுபோல, மாகறல் என்னும் பெயரைக்கேட்ட அளவில் தமிழ் பயின்றவர் எவராயினும், அவர் அனைவரும் திரு. **கார்த்திகேய முதலியார்** அவர்களையே நினைவு கூர்வர்.

இன்று மாகறலில் உள்ளவர்களோ, முன்பு இருந்தவர்களோ, இந்தப் பேரறிஞரின் அருமை பெருமைகளை ஒருகால் அறியாமற் போயினும், நல்ல தமிழறிஞர்கள் அனைவரும் இவரை நன்கினிது அறிந்து மதித்துப் போற்ருமல் இரார். அத்துணை அளவுக்குத் தாம் தோன்றி யருளிய ஊருக்கு, அத் தமிழ்ப் பேரறிஞர் மிகச் சிறந்த பெரும்புகழைத் தேடித் தந்துள்ளார். அவரது தமிழ்ப் பெரும் புலமையும், சான்ருண்மை நலன்களும் பெரிதும் வியந்து போற்றத்தக்கனவாகும்.

## மொழி நூல் :

தமிழ்ப் புலமை உலகில் அவருக்கு அழியாப் பெரும் புகழைத் தேடி அளித்திருப்பது, அவர் அரும்பாடுபட்டு இயற்றியுள்ள ''மொழி நூல்'' என்னும் விழுமிய கலை நூல் ஆகும். இற்றைக்குச் சற்று ஏறத்தாழ ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கும் முன்னரே *(1913)*, தமிழில் முதல் முதலில் ''மொழி நூல்'' 1. என்னும் பெயரில் ஒரு தனிப் பெரும் நூல் இயற்றிய பெருமை நமது கார்த்திகேய முதலியார் அவர்களுக்கே உரியது.

## நூலின் தோற்றம் :

ஒருமுறை இவர் மாகறலினின்று புறப்பட்டுக் காஞ்சிபுரம் சென்று கற்றுவல்ல புலவர்களுடன் கலந்து அளவளாவிக் கொண்டிருந்துவிட்டுக் களிப்புடன் ஊர் திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது பாலாற்றின் கால்வாய் ஒன்றில், ஒருவன் பனையோலை மட்டையில் கூழ் உண்டுகொண்டிருந்தான். அந்நிலையில் இவருக்கு மட்டை என்னும் சொற்காரணம் விளங்கியது. மடை மடைப்பள்ளி மடையன் முதலிய மற்றும் பல சொற்பொருள்களும் விளங்கின. அதனுல் இங்ஙனம் எல்லாச் சொற்களையுமே இடைவிடாது ஆராயத் தொடங்கினர். அவ்வாராய்ச்சியின் பயனுகவே, ' மொழி நூல் ' என்னும் இந்நூல் முகிழ்ப்பதாயிற்று.

---

1. Philology, Linguistics.

'' வயின்வயின் வண்டமிழ் வளாகத் திசையுண
வெயில்நுழை யுங்காற் குயில்நுழை சோலை சூழ்
கச்சியுட் செல்லுபு கனிந்தென வருகையில்
மெச்சுறு புனற்கால் மிளிர் பாலாற்றுள்,
மட்டைவாய் ஒருவன் மடுத்தனன் கூழினை ;
மட்டைச்சொற் காரணம் வந்தது மனக்கண் ;
மடைமுத லாய வழக்கும் விளங்கின ;
இடைவிடா திங்னனம் எல்லாச் சொல்லையும்
அறிவுறல் வேண்டும்என்று அகத்துக் கொளீ இப்
பொறிமிகு நாமகட் போற்றெடுத் தனமே ''

என்று, இந்நூலை எழுதுதற்குக் காரணமாக அமைந்த ஒரு நிகழ்ச்சியினை, இவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## நூலிற்குப் பேருழைப்பு :

இந்நூல் எழுதுவதற்கு இவர் மேற்கொண்ட பெருமுயற்சியும் பேருழைப்பும் இனைய என் பதனைப் பின்வரும் பாயிரவியற் பகுதியினுல் யாவரும் உணரலாம். ''ஒவ்வொரு சொல்லுக் கும் எங்ஙனமேனும் உண்மைக் காரணம் அறி தல் வேண்டும் என்று எண்ணுற்று, அல்லும் பகலும் இடைவீடின்றி வருந்தி வருந்தி ஆராய்ந்த பின்னரே இவ்வழி புலனுயிற்று. அங்ஙனம் வருந்தியும் சில சொற்களுக்குக் கார ணம் புலப்படாமையின் அப்பொருளை நேரிற் கண்ணுற்று ஆராய்ந்துழி அக்காரணமும் இனிது விளங்கிற்று. இன்னும் காரணம் புலப் படாத சொற்களும் உள. ஒரு சொல் ஆரா யுங்கால், மற்றொரு சொற் காரணம் புலனு யின. சில, வாளா இருக்குங்காற் புலனுயின. சில கனவிற் புலனுயின; கற்குங்காற் சில புலனு யின; அவற்றை அப்போதப்போது குறித்து வைப்பன்; கனவிற் புலனுயினவற்றைப் பலகையிலேனும், சுவரிலேனும் குறித்துவைப் பன். குறிப்பதற்குள் மறந்தனவும் உள; அம் மறந்தவற்றுக்குச் சாலவும் வருந்தினன். வருந் துங்கால் அவற்றுள் சில புலனுயின; வாளா இருக்குங்காற் சில மீளவும் புலனுயின; புலனு காது போயினவும் உள''. (பக்கம் 2)

## நூலின் சிறப்பு :

இங்ஙனம் மாகறல் திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள் இயற்றிய மொழி நூலின் அருமை பெருமைகள் அளவிடற்பாலன, அல்ல. இந்நூலுக்கு அக்காலத்தில் ஆங்கிலத்தில் முன் னுரை அளித்துள்ள பேராசிரியர் திரு. முன் னீர்ப்பள்ளம் சி. பூரணலிங்கம் பிள்ளை, பி. ஏ.. எல். டி. அவர்கள், ''முதன் முதற் புதுவகை யான நுண்ணறிவார்ந்த ஆராய்ச்சி வேலை'' 2. நனிமிகச் சிறப்பு வாய்ந்த துணிவாண்மைப் பெரும் செயல், 3. அரிய பயன்மிக்க செய்தி களின் உண்மையான சுரங்கம், 4. வாழ்நாள் முழுவதும் நிகழ்த்திய ஆராய்ச்சிகளின் பயனுய அரும் கனிகள். 5. எனப் பற்பல வகைகளில், இந்நூலினை மிகவும் புகழ்ந்து பாராட்டிப் போற்றியுள்ளார்.

மேலும் ''இந்நூலானது ஆயிரம் அறிஞர் களைச் சிந்திக்கச் செய்யும்; பதினுயிரம் நாவலர் களைப் பேசவைக்கும்; குறைந்தது ஒரு நூருண்டு காலம் ஆற்றல் மிக்க எழுத்தாளர்களை எழுது மாறு இயக்கும் என்பது திண்ணம்.'' 6. என வும், தொலை முன்னேக்குணர்வுடன் குறிப்பிட் டுள்ளார்.

அன்றியும், இந்நூலின் ஆசிரியர் ஆகிய திரு. கார்த்திகேய முதலியார் அவர்களை, அஞ்சா நெஞ்சுடைய சிந்தனையாளர், 7. மூல முதன் முன்னேடியான ஆராய்ச்சியாளர், 8. முன்னைய பிழைக் கொள்கைகளைக் கடிந்

---

2 This intelligent work of original research.

3 This magnificent enterprise.

4 A veritable mine of rare and useful information.

5 The fruits of a life study.

6 " It is a work sure to set a thousand minds a-thinking, ten thousand tongues a-talking, and at least a century of able pens a-writing ".

7 Fearless thinker.

8 Original researcher.

தொழித்தவர். 9. என்றெல்லாம் பல வகைகளிற் போற்றிப் புகழ்மொழி புகன்றுள்ளார்.

## நூலின் அருமை :

நூல்கள் இருவகைப்படும். ஒன்று ஏதும் அறியாத பாமரர்களே சுவைக்கத் தகுவது. மற்றொன்று பெரும் புலவர்களே பல்காற் பயின்று பயன்கொள்ளத் தகுவது. திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள் இயற்றிய மொழி நூல், புலவர்களே பல்காற் பயின்று பெரிதும் பயன் கொள்ளத் தகுவது. இதனை அவர் எழுதியுள்ள பின்வரும் பகுதியால் உணரலாம். ''நன்னூற் காண்டிகையுரையேனும் நன்கு கற்றுணர்ந்தவர்க்கே இந்நூல் பயன் தருமேயல்லாது, ஏனையோர்க்குப் பயன் தருவதரிது. முதன் முதல் இந்நூற்கண், தமிழ்ப் புலவர்க்கும், காலஞ் செல்லச் செல்ல வடமொழிப் புலவர் முதலோர்க்கும், கருத்திறங்கு மென்பது திண்ணம். ஆயின் தமிழுணர்ந்த ஐரோப்பியப் புலவர்கள், இந்நூலையுடன் ஆராயாதுவிடுகிலர். இந்நூல் முற்றும் ஓர் முறையாவது நன்கு ஆராய்ந்தவர்க்கே இப்பாயிரவியலும் விளங்கற்பாலது'' (பக்கம் 75)

## நூலாராய்ச்சித் திறன் :

பாயிரவியல், இலக்கணவியல், முதல்நிலையியல் என்னும் மூன்று பகுதிகள் கொண்ட இந்நூலின் வாயிலாக இவர் செய்துள்ள ஆராய்ச்சியின் இயல்பினை இவரே பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'இஞ்ஞான்று திரிசிரபுரம் பண்டிதர். சவரிராயப் பிள்ளை அவர்கள் ஆராய்ச்சியும், சென்னை மகா கோட்டத்து வக்கீல் தி. வீரபத்திர முதலியார் அவர்கள் ஆராய்ச்சியும், பண்டிதர். சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் ஆராய்ச்சியும், பண்டிதர் நாகை. வேதாசலம் பிள்ளை அவர்கள் ஆராய்ச்சியும், ஒவ்வோர் வகையில் எமது ஆராய்ச்சியை ஒத்துள்ளன. ஜி. யு. போப்பு ஐயர் நாலடியாரிற் கூறிய சொற் காரண வழி எமது ஆராய்ச்சியை ஒக்கும். ஆங்கில சத்த நூலிலுள்ள சொற் பாகுபாடு முதலியனவும் எமது ஆராய்ச்சியைப் போல்வனவே' (பக்கம் 5?) என்கின்றார். விருதைச் சிவஞான யோகிகள், திரு. வி. கனகசபைப்பிள்ளை, பாண்டித் துரைத்தேவர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை முதலிய பேரறிஞர்களின் நட்பையும் நன்கு மதிப்பையும் இவர் பெரிதும் பெற்றிருந்தார்என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## நுண்மாண் நுழைபுலம் :

இற்றைக்கு எழுபது எண்பது ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழிற் பலவகைக் கலைகளையும் கற்பதற்கு முறையான கல்லூரி அமைப்புகளோ, பலவகையான சிறந்த ஆராய்ச்சி நூற்பதிப்புக்களோ பெரிதும் ஏற்பட்டில. ஆயினும் நமது புலவர் பெருமான் ஒல்லும் வகையெல்லாம் பலவகைக் கலைகளையும் பயின்று தேர்ந்திருந்தார். கல்லூரி எதிலும் ஆங்கிலம் பயின்றிலராயினும், ஆங்கில அறிஞர்களின் ஆராய்ச்சி நுணுக்கங்களை எல்லாம் செவ்விதின் அறிந்து தேர்ச்சி பெற்றிருந்தார். 10. இந்நூலின்கண் ஆங்காங்கே பீல், பார், 11. ஹண்டர், 12, இராபர்ட் கால்டுவெல்; 13. வில்லியம் டெய்லர், 14. கர்னல் சைகேஸ், 15. வின்சிலோ, 16. எட்வொர்ட் க்ளார்டு, 17. மாக்சு முல்லர், 18. பெர்சிவல், 19. சார்ல்ஸ் கோவர், 20. முதலிய அறிஞர்கள் பற்பலரின் அரிய

---

9 Precedent breaker.

10 "Though these typical Pandits are apparently of the old school and agree in their blissful ignorance of the language of the ruling race, the works which are their out-turn show how remarkably they have grasped the western method, how laboriously they have consulted the western authorities, and how eagerly they have imbibed the western spirit".

11 Boel, Baur.

12 Hunter.

13 Robert Caldwell.

14 William Taylor.

15 Colonel Sykes.

16 Winslow.

17 Edward Claurd.

18 Max Muller.

19 Percival.

20 Charles Gover,

ஆராய்ச்சிக் கருத்துக்கள் பலவற்றை இவர் தம் நூலில் பற்பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்லுதல், நமக்கு வியப்பையும் விம்மிதத்தையும் விளைவிக்கின்றது.

## பல்கலையுணர்வு :

இவர் தமிழில் மட்டுமேயன்றி, வடமொழி தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய பிற மொழிகளிலும் போதிய அளவு தேர்ச்சி பெற்றிருந்தார் என்பது, இடை இடையே தம் நூலில் இவர் காட்டும் மேற் கோள்களாலும், விளக்கும் செய்திகளாலும் அறியப்பெறுகின்றது. சோதிடக் கலை, மருத்துவக் கலை, இசைக்கலை பற்றிய பற்பல நுணுக்கமான செய்களையும் இவர் இந்நூலின்கண் பலவிடத்தும் இனிதெடுத்து விளக்குகின்றூர். இவற்ருல் இவர்தம் நுண்மாண் நுழைபுலமும், பன்மாண் குணங்களும் புலனுகின்றன. இவர் சித்தாந்த சைவரேயாயினும், வைணவத்திலும் நல்ல புலமையும் பக்தியும் கொண்டிருந்தார். திவ்வியப் பிரபந்தப் பாடல்களை வியந்துபோற்றி மேற் கோள்கள் காட்டியுள்ளார். ஸ்ரீ வேதாந்த தேசிகர் இயற்றியுள்ள பாதுகாசகஸ்ரம் என்னும் நூலின் 24-ஆம் சுலோகம் ஆகிய "விந்தய ஸ்தம்பம்" என்பது தமிழின் பெருமையை விளக்குதலைச் சான்று காட்டியிருத்தல் (பக்கம் 51), இவரது வைணவ நூற்புலமையினை விளக்கும்.

" பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, உரிச்சொன்னிகண்டு, ஆசிரிய நிகண்டு, கயாதர நிகண்டு, திவாகரம், மஞ்சிகன் ஐந்திணைச் சிறு நிகண்டு, போகர் நிகண்டு, சட்டமுனி நிகண்டு, தன்வந்தரி நிகண்டு, பஞ்சகாவிய நிகண்டு, பேரகராதி, வைத்திய அகராதி, மலையகராதி, கன்னட நிகண்டு, ஆந்திரநாம சங்கிரகம், ஆந்திர தீபிகை, அமரம் முதலிய வடமொழி நிகண்டுகள், சங்கச் செய்யுள், திருக்கோவையார், தேவாரம், ஆழ்வார் பிரபந்தம், சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய பல நூல்களையும், உலக வாழ்க்கையையும், வேடர், குறவர், முதலோர்பேசும்சொற்களையும்ஆராய்ந்தமையால், ஒவ்வோர் சொற்குள்ள இயைபு முதலியன புலப்பட்டன, அவற்றுள் வைத்திய நூல்களை நன்கு ஆராய்ந்த பின்னரே மருதோன்றி, புலிதொடக்கி, புனுகுசட்டம், பொடுதலை, ஆடாதோடை, பங்கம்பாளை, கக்கரிக்காய், கத்தரிக்காய், சிறியாநங்கை, முதலிய சொற்களின் உண்மைக் காரணமும்; பரணி உரோகணி, விசாக முதலியவற்றின் காரணமும் புலனுயின" (பக்கம் 74) என்று குறிப்பிடுவதால், பல கலையுணர்வு மிக்க இவர் தம் வியன்பெரும் ஆராய்ச்சித் திறம் விளங்கும்;

## தமிழியல் விளக்கம் :

நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டுத் தோன்றிய சான்றோர்கள் பலரும் தமிழினைப் புகழ்ந்து போற்றியுள்ளனராயினும், தமிழ் என்னும் சொல்லுக்குரிய நுண்பொருள் நலன்களை, இவர் போல் பிறரெவரும் இனிது எடுத்து விளக்கிற்றிலர் எனலாம். (1) "தமிழ் என்பது இனிமை"; அது இனிமை மிக்க மொழிக்கு ஆயிற்று. (2) தமிழில் வல்லோசையும், மெல்லோசையும் இடைப்பட்ட ஓசையும் சிறந்திருத்தலின் முறையே அம் மூன்றெழுத்தால் தமிழ் ஆயிற்று. (3) பெரும்பான்மை இயற்கைச் சொற்களும், சிறு பான்மைச் செயற்கைச் சொற்களும் கொண்டிருத்தலின் அவ்வியல்பும் புலப்படத்தமிழ் ஆயிற்று. (4) இயற்கை ஓசை, செயற்கை ஓசை, செயற்கையில் செயற்கை ஓசை என்பவற்றுள், இயற்கை ஓசையேயுடைமையின், அதனுல் தமிழ் ஆயிற்று. (5) அமிழ்தம்போல மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்திருத்தலின் அமுத எழுத்துக்களால் தமிழ் ஆயிற்று. (6) தெய்வமொழியாக விளங்குதலின், தெய்வகதிக்குரிய எழுத்து தமிழ் ஆயிற்று. (7) தமிழில் 'தகர வித்தை' சிறந்திருத்தலின் அதற்குரிய முதலெழுத்து அமையத் தமிழ் ஆயிற்று"... ..எனப்பற்பல அரிய விளக்கங்கள் அறிவிற்கு விருந்தாக இவர் தம் நூலிற் காணப்படுகின்றன.

## அரும்பொருள் விளக்கங்கள் :

இவர்தம் புலமைநலம் ஒருபுறம் இருப்ப, இவரது குண நலங்களும் எண்ணி யுணர்ந்து

பெரிதும் போற்றுதற்கு உரியனவாக உள்ளன. இவர் நாள்தோறும் தேவாரத் திருமுறைகளை நியமமாக ஓதிவரும் வழக்கம் உடையவராக இருந்தார் எனத் தெரிகின்றது. ''ஒரு முறை தேவாரத்தை விரைந்து படனம் செய்யுங்கால், 'உடைய தமிழ் பத்தும் உணர்வார்கள்' என்பதனை 'உளைய தமிழ்' என்று ஓதி விட்டனன். பின்னர் நாவின் இயல்பைக் கவனித்தனன்'' என்பதனுல் இதனை யுணரலாம்.

(1) இங்ஙனம் தேவாரத் திருமுறைகளை நியமமாக நாள்தோறும் ஓதி வந்தமையின், இவரால் பற்பல தேவாரத் தொடர்கள் பொருள் விளக்கப் பெறுகின்றன. ''வரையினைக் கல்லி மணிபெறல் எளிதாம்; உரையினைக் கல்லி உணர்வதோ அரிதே'' என நமது அறிஞர் பெருந்தகை அவர்களே, நவில்வது போல, இவர் புரிந்துள்ள செயல் பெருங்கடினமானது என்பதில் ஐயமில்லை.

''அன்பிலானை அம்மானை அள்ளூறிய
அன்பினுல் நினைத்தார் அறிந்தார்களே''

எனவரும் தேவாரத் திருப்பாடலில், ''அன்பிலானை'' எனவரும் தொடரைப் படிக்குங்கால் நமக்கு அதன் பொருள் தெளிவாகத் தெரியவில்லை. கடவுள் அன்பு இல்லாதவனு? திருநாவுக்கரசர் சிவபெருமானை அன்பு இல்லாதவன் என்று கூறுவாரா? என்ருற் போன்ற பற்பல ஐயங்கள் அப்போது நமக்கு உண்டாகின்றன. ஆனுல் நமது புலவர் பெருமான் அவர்கள் ''அன்பில் ஆலந்துறையானை'' என்பது 'அன்பிலானை' என வந்துள்ளது என்றும்; பாதகடகம் பாடகம் எனவும், மருவும்மகன் என்பது மருகன் எனவும், இருதலைச் சுருக்கம் ஆக வருதல் போல்வது இது என்றும்; விளக்கும்போது நம் ஐயங்கள் நீங்குகின்றன. அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்ட Motel (Motor - hotel) என்பன போன்ற ஆங்கிலச் சொற்களை நாம் நினைவு கூர்ந்து, இற்றைக்கு எழுபது ஆண்டுகட்கு முன்னரே இம்முறையை அறிந்து தமிழில் அமைத்து விளக்கிக் காட்டிய ஆசிரியரின் அருமை பெருமைகளை எண்ணி இறும்பூது எய்துகின்ருேம்,

(2) சீர்காழியில் உள்ள இறைவனைச் சட்டநாதன், சட்டைநாதன் என இரு வகையாகவும் மக்கள் வழங்குகின்றனர். இதில் எது சரி என்று நமக்குத் தெளிவாகத் தெரிகின்றிலது. 'மாயவன் மெய்த்தோற் சட்டை வயங்கலிற் சட்டை நாதன்' என்று பலர் பல வகை விளக்கங்களைக் கூறுவர். 'சட்டை' 'சட்டம்' என்னும் சொற்கள் பற்றிப் பல வகைகளில் எண்ணி, நாம் தடுமாறுகின்ருேம். நமது மொழி நூலாசிரியரோ, சாடு - சதுவு - சட்டம்-சட்டக்கல்வி என்னும் சொற்பொருள் வழக்குகளையும், ''சட்ட கலை எட்டும் மருவெட்டும்'' என்னும் சம்பந்தர் தேவாரத் தொடரையும் எடுத்துக் காட்டிச் ''சட்டம்-தத்துவம்''; சட்டநாதன்- தத்துவங்களுக்கும், தத்துவ நூல்களுக்கும்தலைவன் எனப் பொருள் விளக்குகின்ருர்.

(3) கல்லூரி என்னும் சொல், இந்நாளிற்பெரு வழக்காகப் பயின்றுள்ளது. College என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபாகவே அதனை நம்மிற் பலர் கருதுவர். நமது மாகறல் ஐயா அவர்களோ, ''கல்லூரி-மலைச் சிகரத்தில் தோன்றியது'' (கல்-மலை; உரி-முளை, முளைப்பது, தோன்றுவது) எனப்பொருள் விளக்குவர். முதன் முதல் மலைப்பகுதிகளிலேயே கல்லூரிகள் தோன்றின என்பது அவர் தம் கருத்து. ''முத்தமிழடை வினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே'' என்பதனை அவர் மேற்கோள் காட்டுவர். ''மன்னும் மாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்'' என்னும் திருவாசகப் பகுதியை நாமும் நினைவு கூர்கின்ருேம். ''கடிகாசலம்'' என்னும் பெயர்க் காரணமும் நமக்கு விளங்குகின்றது, இங்ஙனம் பன்னூற்றுக் கணக்கான சொற்களுக்கு இவர் தந்துள்ள விளக்கங்கள் பொன்னினும் மணியினும் போற்றற்பாலன.

### குருபக்தி :

திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள் இளமைக் காலத்தில் திரு. வ. கணபதி பிள்ளை அவர்களிடம் கல்வி பயின்ருர். பின்னர்ப் பேறைத் திரு. செகந்நாத பிள்ளை, யாழ்ப்பாணம்

மேலைப்புலோலி திரு. நா. கதிரைவேற் பிள்ளை, (1844-1907), வடகோவைத் திரு. சபாபதி நாவலர் (1840-1903) ஆகிய தமிழ்ப் பேரறிஞர்களிடம் தொடர்புகொண்டு பழகிப் பல நூல்களைப் பயின்று தேர்ந்தார் எனத் தெரிகின்றது.

''பேறை புலோலி பெருகு வடகோவை
தேறிய சான்றோரைச் சிந்தித்து-வீறிய
ஞானம் பெறுக நலம்பெறுக கல்விஅபி
மானம் பெறுக மகிழ்ந்து''

எனஇந்நூலின் வரும் ஆசிரிய வணக்கச்செய்யுளால், இவர்தம் குருபக்திச் சிறப்பினை யாவரும் இனிதுணரலாம்.

## கவிதைத் திறன் :

மாகறல் திரு கார்த்திகேய முதலியார் அவர்கள் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிப் புலவராக மட்டும் இல்லாமல் சிறந்த பெருங் கவிஞராகவும் விளங்கி யிருக்கின்றார். திரு மாகறல் வெண்பா, கறைசைக் கலிப்பா, கச்சி இதழ் அகல் அந்தாதி, பாகை வெண்பா முதலிய கவிதை நூல்களையும் அவர் இயற்றி யிருக்கின்றார். அவர் தம் அரிய கவிதைத் திறனுக்கு இங்கு ஒரு சான்று மட்டுமே காண்டல் அமையும். அவர் தம் பாடல் ஒன்று, பின் வரும் கருத்தை உட்கொண்டுள்ளது,

''இறைவன் நம்மனோரின்புன்கண்களுக்குப் புலனாவதில்லை. ஆனால் அதுபற்றி, நாம் அவனை இல்லையென்று மறுத்துச் சொல்லி விடுதல் கூடாது. பரந்து விரிந்த கடலைப் பாருங்கள்[ அதன் ஆழத்தையும் அகல நீளத்தையும் கருதுங்கள். அதன் கண் வாழும் எண்ணிலாத உயிர்த் தொகுதிகளை யெல்லாம் உய்த்துணருங்கள். உங்களுக்குக் கடவுளுணர்ச்சி உண்டாகும்.''

''அது மட்டுமா? ஓங்கி உயர்ந்து எல்லையற்ற விளங்குகின்ற வானத்தை உற்று நோக்குங்கள்; அதன் கண் ஒளிவிட்டுத் திகழும் எண்ணற்ற பலகோடி விண்மீன்களைப் பற்றி நீள நினைத்து ஆராயுங்கள். உங்களுக்கு இறையுணர்வு உண்டாகும்- மேலும், மேகங்கள் படியும்படி பச்சைப் பசேலென உயர்ந்தோங்கி விளங்குகின்ற அழகிய மலை நிலப்பகுதிகளுக்குச் சென்று காணுங்கள். அங்கே வளரும் பற்பல செடி கொடி மரவகைகளின் இயல்புகளை யெல்லாம் ஆராய்ந்து அறிய முயலுங்கள். உங்களுக்குக் கடவுளுணர்ச்சி உண்டாகும்,''

''அவ்வளவு தானும் வேண்டுவதில்லை. உங்களுடைய உடலின் அமைப்பையே நீங்கள் ஒரு சிறிதேனும் ஓர்ந்துணர்ந்து பாருங்கள் மனித உடல்தான், எத்தகைய புனிதமான தன்மையில், வியத்தகு நலங்களுடன் அமைந்து திகழ்கின்றது; கண் காது இதயம் முதலிய உறுப்பு ஒவ்வொன்றின் அமைப்பையும் இயல்பையும் ஓர்ந்து ஓர்ந்து உணர்ந்து காண்மின்கள். உங்களுக்கு இறையுணர்வு ஒரு தலையாக உண்டாகியே தீரும். இத்துணைப் பெரிய உடம்பு, தாயின் கருப்பையிலே முந்நூறு நாட்கள் கிடந்து, முறை முறையே வளர்ந்து வெளிவந்த அற்புத நுட்பங்களைப்பற்றி யெல்லாம் சிந்தனை செய்யுங்கள். இங்ஙனம் உய்த்து உணர்ந்து சிந்திக்கும் போதெல்லாம், உங்களுக்குக் கடவுளுணர்ச்சி உண்டாவது திண்ணம். அதுவெறும் கற்பனையோ, போலி உணர்வோ அன்று; உண்மை அனுபவ உணர்வேயாகும். அங்ஙனம் ஏற்படும் இறையுணர்வு உங்களுக்குக் கைகூடுமாயின், நீங்கள் எல்லா நலங்களும் பெற்று இன்புற வாழலாம்''

என்னும் கருத்து அமைய, மாகறல் திரு. கார்த்திகேய முதலியார் அவர்கள், தாம் எழுதிய மொழி நூலின் தொடக்கத்தில், ஒரு சிறந்த வெண்பாவைக் கடவுள் வாழ்த்தாக இயற்றிச் சேர்த்துள்ளார்.

''கடற்காட்சி வான்காட்சி
கார்வரைசூழ் காட்சி
உடற்காட்சி அவ்வுடல்
ஒண்சூல் - படற்காட்சி
உய்த்துய்த் துணர்ந்தக்கண்
ஓர் இறைவன் உண்டென்னும்
மெய்த்தன்மை
நெஞ்சின் மிகும்''

—மொழிநூல்

சங்கப் புலவர்களின் விழுமிய செஞ்சொற் பாடல்களைப்போல, இவ் இனிய வெண்பாவும் அழகுமிக்குத் திகழ்கின்றது. பாடல் சிறிய தாயினும், அதன் பொருள் மிக விரிவுடையது. சொற்பொருள் நலங்கள் பலவும் அமைந்தது. விரிந்த பொருளைத் திறம்படத் தொகுத்துச் சுருங்க உணர்த்துகின்றது.

## தமிழுணர்ச்சி :

இப் பேரறிஞரின் தமிழ்ப்பற்றும் ஆர்வமும் எல்லையற்றன. மொழி நூலின்கண் இவர் இடையிடையே எழுதியுள்ள பின்வரும் பகுதிகள் இவர் தம் இணையற்ற தமிழுணர்ச்சியைக் குமிழியிட்டு வெளிப்படுத்திக் காட்டுகின்றன. 60-70 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பெற்ற இவ்வறிவுரைகள் இன்னும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன.

''கி. பி. 1066-ல் ஆங்கில நாட்டில், பிரெஞ்சு பாஷையின் வியாபகத்தால் ஆங்கில பாஷை யொடுங்கித் தன்னிலை குலையுங்கால் அக்காலத்துள்ள ஆங்கில பண்டிதர் தம் பாஷையிற் பற்றுள்ளம் வைத்து 1372-ஆம் வருஷம் முதல் பண்டைய நிலைமைக்குக் கொண்டுவர முயன்றனர். அதனாலன்றே ஆங்கில பாஷை இக்காலத்து வியாபகப்படலாயிற்று, இவ் வியாபகத்தால் தமிழும் ஒடுங்கித் தன்னிலை குலைகின்றமையின் தமிழரும், தமிழ் கற்றோரும் அவர்போல் பற்றுள்ளம் வைத்து இச் சமயத்தில் தான் அதனை முன்னுக்குக் கொடுவரல் வேண்டும்.''

''இக்காலத்தில் அரசாட்சியார் மூலமாயும் தமிழை வளர்த்தல் கூடும், ஆங்கில அரசு நடுவு நிலை யுள்ளது, எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். தாயிழந்த குழந்தைகளையும் பெலங் குன்றினவர்களையும் நோயாளிகளையும் காப்பதுவே தலையாய அறமாவதுபோலப் பலவகையிலும் குன்றிய நிலையிலுள்ள தலை சிறந்த தமிழை இத்தருணத்திற் காப்பதுவே தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழையே பேசுந் தமிழ்ப்பெருஞ் செல்வர்களுக்குத் தலையாய அறமாகின்றது.''

''தமிழர்கள் பெரிதும் பற்றுவைத்துத் தமிழ் நூலைக் கற்றல் வேண்டும். ஏனையோரும் அதனையிகழாது கற்றல் நன்றே. புகழ் நிமித்தமாகவும் பொருள் நிமித்தமாகவும் தமிழ் நூல் கற்றல் கூடாது. பதிபசுபாச இலக்கணங்களை அறிதற்பொருட்டே கற்றல் வேண்டும். தமிழ் கற்றோர், கற்கின்றோர், கற்போர் இவர்கள் பால் அன்புடையனாகுக, வறியனாயினும் தமிழ் கற்க; கற்பிக்க. செல்வனாயினும் கற்க; கற்பிக்க. தமிழ் முன்னே நீ கற்க; பின் மகனுக்குக் கற்பிக்க; அதன் பின் உரை கோளாளன் முதலோர்க்குங் கற்பிக்க. தமிழ் கற்க விரும்புவோன் பகைவனாயினும் பகை தணித்துக் கொண்டு கற்பித்தல் வேண்டும், எவ்விடங்களில் கூடுமோ அவ்வவ்விடங்களி லெல்லாம் கற்பித்தல் வேண்டும். எவ்வளவு கூடுமோ அவ்வளவு கற்க; கற்பிக்க. கேட்க; கேட்பிக்க.''

''ஆங்கில சங்கம் ஒழிந்த மற்றை சங்கங்களிலெல்லாம் தமிழே பேசுக; ஆங்கிலம் பேசற்க. இடையிடையே ஆங்கிலங் கலந்தும் பேசற்க. ஆங்கிலப் பெரியோர்க்கு உண்மை எடுத்தினிது கூறி நாட்டிற்கு நன்மை செய்யும் பொருட்டு ஆங்கிலங் கற்றல் வேண்டும். புகழ் நிமித்தமாகவும் பொருள் நிமித்தமாகவும் ஆங்கிலங்கற்றல் அவ்வளவு சிறப்பாகாது. முன்னே தமிழும், பின் ஆரியமும், அதன் பின் ஆங்கிலம் முதலியனவும் கற்க, கற்பிக்க.''

''அரசனாகவரினும், அமைச்சனாகவரினும் மடாதிபதியாகவரினும், தக்க இடங்களில் தமிழ்க் கல்லூரி நாட்டி நடத்துக. இச் சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க.''

''மக்களில்லையென்று கவலையின் மூழ்கிக் கண்ணீர் விடற்க. அப்பொருளை ஓர் முதலாக வைத்து, ஓர் தமிழ்க் கழகம் நிலைநாட்டி நடத்தினரின் அம்மாணவரெல்லாம் நினக்கு வழி வழி

நன்மக்களாவர். ஸ்ரீமான் பச்சையப்ப முதலியார், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலோர் இத்தகை யோராவர். இச்சூழ்ச்சியைச் சிறிதும்மறவற்க.'

''தமிழ்ப்புலவர்க்கு இயன்றவரை பொருளுதவி செய்க, செய்யாதிருக்கற்க. கலியாணம் முதலியவற்றில் தமிழ்ப் புலவர்க்கு மரியாதை செய்க. எப்பொழுதும் தமிழையே தெய்வம் போலவும், நற்றுய்போலவும் சிந்திக்க; நீ தமிழ்மயமாவை. நின்மக்களும் தமிழ்மயமாவர். நின்குடியும் தமிழ்மயமாகும். உலகும் தமிழ் மயமாம். ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' இச்சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க, நின்கை தமிழ் நூல் எழுதுக. நின்வாய் தமிழையே பேசுக, நின்மனம் தமிழையே சிந்திக்க. நோய்கொண்டு மெலியனுயின் மருந்துண்டு வலியனுகித் தமிழ் கற்க''.

''நீர்க் குமிழிக்குப்பொற்பூண் கட்ட முயல்வதுபோல யாக்கைப் பயனென்றே கருதி அலையற்க. சில கணமேனும் தமிழ் நூல் கற்க. சில கணமேனும் கடவுளைப் போற்றுக. ''தவத்துக்கொருவர் தமிழுக்கிருவர்'' இச் சூழ்ச்சியைச் சிறிதும் மறவற்க. திருமுறைக் கூடம் நாட்டித் தமிழ் நூலையும் பிற நூல்களையும் போற்றுக. மற்றைய பாழைகளையும் இகழற்க.''

## முடிவுரை :

இத்தகைய சிறந்த தமிழுணர்ச்சியும், இணையற்ற தமிழ்ப் புலமையும் கொண்டு விளங்கியிருந்த இப்பேரறிஞர், சென்னைச் சைதாப்பேட்டைக்கு அணித்தேயுள்ள கிண்டியில் அமைந்திருந்த ''வெஸ்லியன் மிஷன் தியலாஜிகல் காலேஜ்'' தமிழ்ப் பண்டிதராகத் திகழ்ந்தார். சப்த தத்துவ சூடாமணி, நன்னூல் விளக்கம், சூரிய தீபிகை, இலக்கணக் குறிப்பு, ஆத்திசூடி முதற் சூத்திர விருத்தி, முதற்பா என்னும் பற்பல நூல்களை இயற்றி யருளினர். திருமாகறற் புராணம், திருமாகறல் வைபவம் என்னும் நூல்களையும் பதிப்பித்தார் எனத் தெரிகின்றது. இதனுல் திரிபுவனநாயகி சமேத திருமாகறலீசுவரர் திருவடிகளில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் பக்தியும் இனிது புலனுகின்றன. திருமாகறலில் நிகழ்கின்ற மகா கும்பாபிஷேக விழாவில், அப்பேரறிஞர் பெருந்தகையை நாம் நினைவு கூர்வோம், அவர் நினைவாக இவ்வூரில் ஒரு வார வழிபாட்டுக் கழகத்தினையேனும் அமைப்போம். இவ்வூரிற் பிறக்கும் அறிவார்ந்த தமிழ்க் குழந்தைகளுக்குக் '' கார்த்திகேயன் '' என்னும் பெயரையாவது வைத்து வழங்கி மகிழ்வோம் ;

—ஆசிரியர்

(வெண்பா)

சீர்த்தமொழி நூல்அளித்த செந்தமிழ்நற் பேரறிஞர்
கார்த்திகே யச்சான்ஞேர் கல்விநலன்,—நேர்த்திமிகு
தெய்விகப்பண் பெல்லாம், சிறப்புமிகப் போற்றிநாம்
வையத்து வாழ்வோம் மகிழ்ந்து.

—ந. ரா. முருகவேள்.

# சிவஞானபோதப் பொருள்நிலை

(முற்றொடர்ச்சி)

'சித்தாந்தக் கலைச்செல்வர்'

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T.,

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

## நான்காஞ் சூத்திரம் :

உயிர்க்கு நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படக்கம் என்னும் ஐந்து உணர்வு நிலைகள் அன்றாடம் முறையே ஏறு வரிசையிலும், பின் இறங்கு வரிசையிலும் நிகழக் காண்கிறோம். ஏறு வரிசையில் பொருள் உணர்வு (Objcetive Consciousness) மேன் மேலும் விளக்கமுற்று வருதலும், இறங்கு வரிசையில் அவ்வுணர்வு மங்கி அறியாமை மேம்பட்டு நிகழ்தலும் நம் அநுபவமாக வுள்ளன. ஆதலினால், உயிர்க்கு அறியாமையை விளைப்பதாக இயற்கை மலம் ஒன்று உண்டென்பது உணரப்படும். மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்னும் அகக் கரணங்கள் அவ்வறியாமையை விலக்கி, உலகப்பொருள்களை உணர்ந்து தக்கபடி எதிர் இசைவு புரிய (Respond) உதவுகின்றன என்பதும் உணரப்படும்,

''யான் இதனை அறிகிறேன்'' என நிகழும் உணர்வில், யான் என நிகழ்வது தன் நோக்கு உணர்வு (தற்பிரகாசம், Self Consciouness): இதனை அறிகின்றேன் எனப் புறப்பொருளை நோக்கும் உணர்வு பொருள் உணர்வு (பரப்பிரகாசம், Objective Consciouness); ஆன்மா பொருள் உணர்வோடு தன் நோக்கு உணர்வும் உள்ளது, அதற்கு உதவியாக உள்ள அந்தக் கரணங்கள், ஐம்பொறிகள் முதலியவை ஆன்மா உடனாகி நிற்கும்போது பொருள் நோக்கு உடையவையாய்த் தோன்றும்; ஆயினும், தன் நோக்கு உடையவை ஆகா. இவ் வேறுபாட்டை உள்நோக்குத் தற்சோதனையால் (Introspection) உணர்ந்து, அந்தக்கரணங்களைத் தனக்கு வேறு என்று அறிக என்கிறார் மெய்கண்ட தேவர்; 'அவை தாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்' என்னும் ஏது, அந்தக்கரணங்கள் பரப்பிரகாசமாகிய பொருள் நோக்கு உடையவையாயிருந்தே தற்பிரகாசம் (தன் நோக்கு உணர்வு) இல்லாதவை ஆதலால் எனப் பொருள்படும். இது சிவஞான சுவாமிகள் கொடுக்கும் விளக்கம்,

இங்குக் காட்டிய அநுபவம்பற்றி மேலும் தற்சோதனை (Introspection) உள்நோக்கு நெறியில் நின்று நோக்கின், உயிர்க்கு மூன்று அடிப்படை உணர்வு நிலைகள் உள்ளன என்பது விளங்கும், அவை கேவலம், சகலம், சுத்தம் எனப்படும். கேவலம் அறியாமையில் அழுந்தும் நிலை; இது நூல்களில் இரவு எனப்படும். சகலம் உலகப் பொருள்களின் தன்மையில்

அழுந்தும் நிலை; இது பகல் எனப்படும். சுத்தம் முதல்வனின் திருவருளில்அழுந்தும்நிலை; இதுவே நூல்களில் இராப் பகலற்ற இடம் எனப்படும். கேவலத்திலிருந்து சகலத்தைத் தலைப்படும் நெறியில் மேலே காட்டிய உயிர்ப்படக்கம், பேருறக்கம், உறக்கம், கனவு, நனவு என்னும் ஐந்து ஆக்க நிலைகளும், இவ்வாறு ஏறு வரிசையில் நிகழும். இவைபோலவே சகலத்தில் ஐந்து ஆக்க நிலைகளும், சுத்தத்தில் ஐந்து ஆக்க நிலைகளும், உள்ளன. தன்னை உணரப் புகுவார் இந்த நிலைகளையெல்லாம் சகலத்தில் நின்று முன்னும் பின்னும் கூட்டி உணர்தல் வேண்டும்.

## ஐந்தாஞ் சூத்திரம் :

மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளும் தத்தமக்குரிய ஊறு, சுவை, உரு, நாற்றம், ஓசை என்பவற்றை அறியும் போது மேலே சொல்லிய உயிரால் செலுத்தப் பட்டே அறியும்; ஆயினும் அவைபுற நோக்கு ஒன்றே உடையவை ஆதலால், தம்மையும் அறிவதில்லை, தம்மைச் செலுத்தி நிற்கும் உயிரையும் அறிவதில்லை. இவற்றைப்போன்ற இயல்புதான் உயிர்களாகிய நமக்கு உள்ளது. உயிர் ஒரு பொருளை அறியும்போதும் ஒரு செயலைச் செய்யும்போதும், முதல்வனால் அறிவிக்கப் பெற்றும், செலுத்தப் பெற்றும்தான் அறிகிறது;செய்கிறது.ஆயினும்,அது பொருள் நோக்கு (objective consciousness) உடையதாகவே இருத்தலின்,தன்னையும் அறிவதில்லை; தன் உணர்வின் முதலாக இருந்து தொழிற்படுத்தும் முதல்வனையும் அறிவதில்லை. காந்தம், தான் அசைவின்றி இருந்தே, இரும்பைத் தன் ஆற்றலால் இயக்குமாறுபோல, இறைவன் உயிர்களைத் தொழிற்படுத்துகின்றான். ஆதலின், அவன் எல்லா உயிர்களுக்கும் உபகரிப்பவனாக இருந்தும் தான் சிறிதும் விகாரப்படுவதில்லை.

இஃது உயிர்க்கு அறிவு செயல்கள் மாயையின் சார்பால் விளங்குவன எனினும், அவ் விளக்கம் முதல்வனது உபகாரம் இன்றி உளதாகாது என உணர்த்திற்று. முதல்வனது உண்மையை அவன் நம் உணர்வுக்கு முதல் எனக் கண்டு உணரவேண்டும் என நியமித்ததூஉம் ஆயிற்று.

அத்துவிதம் என்பதன் மெய்ப்பொருளை இரண்டாஞ் சூத்திரத்தில் தோற்றுவாய் செய்த ஆசிரியர், இச் சூத்திரத்தில் மேலும் விளக்கிப் பதினொன்றாஞ் சூத்திரத்தில் அதன் முழு இயல்பையும் பயனையும் கூறி முடிக்கின்றார். பன்னிரண்டாஞ் சூத்திரத்தில், திருவேடம் ஆலயம் என்பவற்றைச்சிவனெனக் கண்டு தொழுவதற்கும்அத்துவித உணர்வே துணையாதலைத் தெரிவிக்கின்றார். இவற்றை நோக்கி உணர்ந்த தாயுமான அடிகள்,

> "பொய்கண்டார் காணாப் புனிதமெனும்
> அத்துவித
> மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்
> நாளோ"

என்றமை கருதி உணரத்தக்கது.

## ஆறாம் சூத்திரம் :

முதல்வன் நம் அறிவால் அறியப்படுபவனா? அறியப்படுபவன் என்றால், அறியப்படும் பொருள்களெல்லாம் அறிவில் பொருள்களாகவும் அழிவனவாகவும் இருத்தலின் முதல்வனும் அறிவில் பொருளாய், அழியும் பொருளாய் முடிவான். எவ்வாற்றாலும் அறியப்படாதவனே ஆவன் எனின், நம் உணர்வில் தட்டாத பொருளால் நமக்கு எப்பயனும் உளதாகாது. ஆதலினால், அவனை இல்பொருள் என்றே கொள்ள நேரும். இங்ஙனமாகலின், அவன் நம் சுட்டறிவுக்கு அப்பாற் பட்டவன் எனவும், பாசங்களினீங்கிச் சுட்டாது ஒற்றித்து நின்று உணரும் அநுபவ உணர்வுக்கு விடயமாகுவன் எனவும் கொள்ளுதலே பொருத்தம் ஆகும். இதனால் அவன் சித்தாகவும் செம்பொருளாகவும் உளன் என்பதையும் உணரலாம். எனவே முதல்வனைச் சிவசத்து எனக் கூறலாம். சிவம் - சித்து; சிவசத்து - சித்துச் சத்து; அறிவு வடிவாய் உள்ள செம்பொருள்.

இச் சூத்திரம் மேலே 'அளந்தறிந் தறியா' என்றமை பற்றிவரும் ஐயம் நீக்கித் தெளிவிக்

கின்றது. உயிர் அறியாமையில் அழுந்தி நிற்கும் கேவல நிலையிலும், மாயையின் காரியங்களால் அவ்வறியாமை ஓரளவு நீங்கிப் பொருளறிவு பெற்று நிற்கும் சகல நிலையிலும் முதல்வனை அறியாது எனினும், இருளும் மருளும் நீங்கி முதல்வன் திருவருளைத் தலைப்பட்டு நின்றுணரும் மாசறு காட்சியில் (சுத்த நிலையில்) அம்முதல்வனை அறிவின்பச் செம்பொருளாய்ச் சார்ந்து உணர்ந்து இன்புறும் என்பது இதனுல் உணர்த்தப்பட்டது.

'' இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு''

''தூஉய்மை என்பது அவாவின்மை'' என்னும் திருக்குறட் பகுதியும் புடைபட வைத்து நோக்குதற்கு உரியன.

## ஏழாஞ் சூத்திரம் :

சத்தாகிய சிவத்தின்முன் அசத்தாகிய உலகம் முனைந்து தோன்றுது: ஞாயிற்றின் ஒளிமுன் விளக்கொளி முனைந்து தோன்றுதன்றே ; அதுபோல, ஆதலால், சிவம் உலகத்தை நுகராது; அஃதாவது, அதுவதுவாய் அழுந்தி நின்று அதன் தன்மையை ஏற்றுக்கொள்ளாது. அசத்தாகிய உலகமும், அறிவில் பொருள் ஆதலால், சிவத்தை அநுபவியாது.

பின்னர் இவற்றை அறிந்து பயன் உறுவது எது என்னில், ஆன்மாவே இரண்டனையும் அழுந்தி அறிந்து பயன்கொள்ளும். அது சத்து அசத்து என்ற இரு திறனையும் இரு திறனுலும் அறிவதாய், அவ்விரண்டனையும் சார்ந்து அவற்றின்பால் உள்ளதாய் விளங்கும். இஃது அதன் சிறப்பியல்பு,

சத்து - செம்பொருள், எவ்வகை மாறுதலும் எய்தாதது. அசத்து - தோன்றி நின்று மறைவதாகிய மாற்றம் உடையது,

விளக்கம்; பிறப்பு நிலையில், ஆன்மா, அசத்தாகிய, முக்குண வடிவில் உள்ள உலகப் பொருள்களை அறிந்து நுகரும்; அந்நுகர்ச்சி தனுகரணங்களாகிய அசத்தால் அதற்கு உளதாவது; அந்நிலையில், ஆன்மா தனுகரணங்களேதான் என உணர்ந்து அவற்றின் மயமாய் இருக்கும்,

வீட்டு நிலையில், இதுபோல, சத்தாகிய சிவத்தை அதன் திருவருளாகிய சத்தாற் கண்டு உணர்ந்து, சத்தாகிய அதன் எண் குணங்களும் தன்பால் மேம்பட்டு விளங்கச் சிவமாய் நிற்கும். இதுபற்றி ஆன்மா என ஒன்றில்லை ; சிவமே ஆன்மா என்றல் அடாது.

முன் அசத்தைச் சார்ந்து அசத்தாய் நின்ற ஆன்மா, பின் சத்தைச் சார்ந்து, அச் சத்தின் நீங்கிச் சத்தாய் நிற்றலின், அது சத சத்து எனப்படும்,

'' சேர்ந்தார் தாமே தானுகச் செயுமவன்.''
—திருஞானசம்பந்தர்.

'' தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில்
சிவகதி விளையும் அன்றே.'.
—திருநாவுக்கரசர்.

'' அவனிவன் ஆன தவனருளா லல்லாது
இவன் அவன் ஆகான்என் றுந்தீபற
என்றும் இவனேயென் றுந்தீபற,''
—திருவுந்தியார்.

இவ்வனுபவ வாய்மொழிகள் உடன் வைத்து நோக்குதற்கு உரியவை.

## எட்டாஞ் சூத்திரம் :

முன் முன் பிறவிகளில் பயன் கருதாது செய்து வந்த சரியை கிரியா யோகங்களாகிய தவமுதிர்ச்சியினுல், உயிர்க்குயிராக இருந்து உணர்த்திவரும் முதல்வன் ஞானசிரியனுகத் தோன்றி மெய்யுணர்வை அளித்தருளுவன், மன்னவன் மகன் வேடரிடத்தே தங்கித் தன் பெருந்தன்மையை மறந்து வாழ்வது போல

சிவாநந்தப் பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழ்வதற்குரிய சிவகுமாரனாகிய உயிர் ஐம் பொறிகள் முதலிய தத்துவக் கூட்டங்களுடன் சேர்ந்து, தன் பெருந்தன்மையையும், சிவத் தோடு தனக்கு உள்ள சம்பந்தத்தையும் அறி யாது, பிறப் பிறப்புட்பட்டு உழலும். இவ் வுண்மையை ஞானசிரியன் பக்குவ முதிர்ச்சி யுள்ள உயிர்க்கு உணர்த்தியருளுவன். இவ் வுண்மையைக் கேட்டவுடன், உயிர் தத்துவக் கூட்டங்களின்றும் நீங்கி, முதல்வன் திருவடியில் பிரிப்பின்றி ஒன்றி இன்புறு நிலையை எய்தும்,

எட்டாஞ் சூத்திரப் பொருள் ''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற் றீண்டு வாராநெறி'' என்னும் திருக்குறளின் விரிவுரையாக அமைதல் காண்க,

## ஒன்பதாஞ் சூத்திரம் :

அசத்தாகிய தத்துவங்களோடு கூடுவதால் உயிர்க்கு உண்டாகும் சுட்டுணர்வு பாசஞானம் எனப்படும். மூன்றாஞ் சூத்திரத்துக் கூறிய வாறு. ''நான் யார்''? என உயிர் தன் உண் மையை ஆய்ந்துணரின், அது மாயாகாரிய மாகிய கருவி கரணங்களின் தொடர்பு நீங்கித் தன் வியாபக நிலையை உணரும்; அவ்வாறு உணரும் நிலையில், பாசம் நீங்கினும் அதன் வாதனை காரணமாகத் தன்னை ''நான் பரம் பொருள்'' என உணரும். இவ்வுணர்வு பசு ஞானம் எனப்படும். பகற்பொழுதில் அளப் பரிய ஆகாயத்தைக் காணலுறும்போது, ஆகா யத்தின் அவ்வளப்பரிய விளக்கம் அதன்கண் கலந்து விளங்கும் ஞாயிற்றின் பேரொளி காரணமாக உளதாதல்போல, பாச நீக்கத்தில் உயிரின் கண் விளங்கும் வியாபகம் முதல்வன் திருவருட்சார்பு பற்றிய விளக்கமாகும் எனத் தெளிந்து, அத்திருவருள் ஒளியில் 'யான் எனது' என்னும் செருக்கு அற அடங்கி நிற்பின், அவ்வருளுக்கு முதலாக உள்ள சிவம் பேரின்ப வடிவாய்த்தோன்றி, ஆன்மாவைத் தன் வயப்படுத்தி இன்பூட்டும். இவ்வாறு திரு வருளே கண்ணாகக் காணும் காட்சியே மெய் யுணர்வு அல்லது சிவஞானம் எனப்படும்.

பாசக் கூட்டம் எல்லாம் கானல் நீர்போல் சடுதியில் தோன்றி மறைவன என, அவற்றைத் தனக்கு வேறாகக் கண்டு பற்றுச் செய்யாது நிற்ப, அவ்வாறு நிற்கும் உயிரின் அறிவின்கண் திருவருள் ஞானம் பிறவி வெப்பத்திற்குத் தண்ணிய நிழல்போல் வெளிப்படும், பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலும் பற்ற முடி யாத பேரின்ப முதல்வனை அத்திருவருள் ஞானத்தால் தன் அறிவின்கண் ஒருவன் நாடு தல் வேண்டும். இவ்வாறு சிந்தித்துக் காணும் காட்சி சலியாதிருத்தற் பொருட்டு முத்தி பஞ் சாக்கரம் சுத்தமானதமாக எண்ணப்படும்.

ஒன்பதாஞ் சூத்திரப் பொருள் ''ஓர்த் துள்ளம் உள்ளதுணரின் ஒரு தலையாப்-பேர்த் துள்ள வேண்டா பிறப்பு'' என்னும் திருக் குறளின் விரிவுரையாக அமைதல் காண்க.

## பத்தாஞ் சூத்திரம் :

பிறப்பு நிலையில், உயிரின் அறிவு செயல் கள் நிகழும்போது முதல்வனும் உடனாகி நின்றே அவ்வாறு நிகழுமாறு பணித்து வருகின் றான்; இங்ஙனம் முதல்வன் உடனிற்பினும், உயிர் யான் எனது என்னும் செருக்கோடு முய லும்; அதனால், முதல்வன் தன் இருப்பைச் சிறிதும் அவ்வுயிர்க்குக் காட்டாது. தான் பின் நின்று, அதன் வழியிலே அவனைச் செல்லுமாறு விடுகின்றான். உயிர் முதல்வன் உபகாரத்தை மறந்து செய்யும் செயல்களுக்குத் தானே பொறுப்பு ஆதலின், இருளினை அதைப்பற்று கின்றது.

இங்ஙனம், பிறப்பு நிலையில், முதல்வன் தான் எனத் தன்னைக் காட்டாது உயிரின் செய லில் மறைந்து வந்தாற்போல, முதல்வ னிருப்பை உணரும் வீட்டு நிலையில், ஆன்மா தான் என ஒரு முதல் காணப்படாதபடி எல் லாம் முதல்வன் செயலே என்னும்படி அவன் வியாபகத்தில் அடங்கி ஒன்றாகி, அவன் அரு ளால் அல்லது ஒன்றையும் அறிதலோ செய் தலோ இன்றி அருள்வழி நிற்றல் வேண்டும். இங்ஙனம், முதல்வனோடு ஒன்றுதலால் இயற் கை மலம் எனப்படும் ஆணவத்தின் வாதனை

பற்றறக்கழியும்; அருள்வழி நிற்றலால் அருளே காட்சிப்பட்டு உலகம் காட்சிப்படாது, அதாவது மாயையின் செயல் பற்றறக் கழியும்; ஆதலினால், இருவினைகளும் ஆன்மாவைப் பற்ற மாட்டா.

இச் சூத்திரத்தால் குறிக்கப்படும் மெய் யுணர்வு நிலை அருணிலை எனப்படும்.

இச் சூத்திரம் ''சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்—சார்தரா சார்தரு நோய்'' என்னும் அருமைத் திருக்குறளை ஒத்தது.

## பதினொன்றாஞ் சூத்திரம் :

கண் பொருள்களைக் காணும் இயல்பு உள்ளது; ஆயினும், உயிரின் அறிவு உட னிருந்து செலுத்திக் காட்டினால் அன்றி அதற் குக் காட்சி நிகழாது, ஆதலினால் பொருள் களைக் கண் காணும்போது உயிரின் உதவியைக் கொண்டே காணும்.

இவ்வாறே, உயிர் பொருள்களை அறிந்து அவற்றில் அழுந்தி நின்று அநுபவிக்கும் இயல்பு உள்ளது; ஆயினும், முதல்வன் திருவருள் உடன் கலந்து செலுத்திப் பொருள்களைக் காட்டினால் அன்றி அது பொருள்களைக் காணாது.

மேலும் கண் பொருள்களைக் காணும்போது உயிரின் அறிவு அதற்குப் பொருள்களைக் காட் டித் தானும் காணும்: உயிரின் அறிவுக்குக் காட்சி இல்லையென்றால், கண்ணிற்கும் காட்சி இல்லைதான். இவ்வாறே உயிர் பொருள்களை அறிந்து அநுபவிக்கும்போது, உயிர்க்கு அவ் வநுபவம் நிகழ்தற்பொருட்டு முதல்வன் அவ் வுயிர்க்குப் பொருள்களைக் காட்டித் தானும் அவற்றில் அழுந்தாது காண்பன், இவ்வுப காரம் முதல்வனால் எல்லாவுயிர்களுக்கும் பிறப்பு, வீடு என்னும் இரு நிலைகளிலும் எஞ் ஞான்றும் செய்யப்படுகிறது. பிறப்பு நிலையில் உயிர்கள் அசத்தாகிய உலகப் பொருள்களைத் தம் அறிவிச்சை செயல்களால் பற்றி விடயித்து இன்பத் துன்ப மயக்கம் என்னும் மூவகை வேதனைப்படும்; வீட்டு நிலையில் முதல்வனையே தம் அறிவு இச்சை செயல்களுக்கு விடயமாகப் பற்றி அழுந்திப் பேரின்பம் துய்க்கும். தாய்ப் பால் அருந்தும் குழவிக்குத் தாய் அதனை எடுத்து அணைத்துத் தன்னிடம் சுரக்கும் பாலை உண்ணக் கொடுத்து உபகரிப்பது போலவே, வீட்டு நிலையில் முதல்வன் உயிர்களுக்கு உபகரிக் கின்றான். இக் கருத்தை மாணிக்கவாசகர் ''தாயாய் முலையைத் தருவானே'' என அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறு பிறப்பு வீடு இரண்டினும் முதல் வன் செய்யும் உபகாரத்தைச் சிவஞானத்தாற் சிவனைக் காணும் சிவஞானிகள், முன் சூத்தி ரங்களாற் கூறியபடி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து, உணர்வர். அவ்வாறு முதல்வன் உபகாரத்தை உண்மையாக உணர்ந்த மெய் யுணர்வின் பயனாக அவர்களுக்கு இடையறாப் பேரன்பு கரைகடந்து எழும்; அந்நிலையில், அவ்வன்பே இன்பமாய்ச் சிவம் வெளிப்பட அதன் கண் அழுந்தி அன்பே சிவமாய் அமர்ந் திருப்பார்,

இதுவே பரமுத்தி நிலையில் ஆன்மா சிவ மாந் தன்மைப் பேராஇயற்கை பெற்று வாழும் நிலை. இது சுத்தத்தின் கண் நிகழும் அதீதநிலை எனவும், இன்புறு நிலை எனவும் கூறப்படும்,

## பன்னிரண்டாஞ் சூத்திரம் :

இன்புறு நிலையைத் தலைப்பட்ட பெருமக் கள், முதல்வன் திருவருளால் உந்தப்பட்டும் அன்றிப் பிராரத்தவாதனை காரணமாகவும், சிற்சில சமயங்களில் அந்த நிலையில் நீங்கி உலக முகப்படுவர். அந்நிலையில் மலவாதனை காரண மாக ''யான் எனது'' என்னும் செருக்குத் தம் உணர்வில் தோன்றாதபடி ஞானநீரால் வாதனை மாசு கழுவுவர்; தம்மோடு ஒத்த மெய்யன்ப ரொடு கூடி நிற்பர்; திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்களையும் திருவேடத்தையும் சிவன் எனவே தெளியக்கண்டு தொழாநிற்பர்.

இச்சூத்திரம் அணைந்தோர் தன்மை எனப் படும். சீவன் முத்தர் இயல்பு கூறுவது. இவ் வியல்பைத் திருஞானசம்பந்தர் முதலிய பெரு மக்கள் வாழ்க்கை வரலாறுகளில் காணலாம்,

( முற்றும் )

148687
609008
N71.13.5

# செய்திச் சுருக்கம்


## திருமந்திர மாநாடு :

திருவாவடுதுறை ஆதீனத்தின் 22-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கட்டளையிட்டருளியபடி, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ மெய்கண்டார் விலாசத்தில், ஜனவரி மாதம் 24, 25, 26 தியதிகளில் 18-வது திருமந்திர மாநாடு மிகவும் சிறப்புற நடைபெற்றது. முதல் நாள் டாக்டர் திரு. பா. நடராசன் M.A.,D Litt. தலைமையில், திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A.L.T, திரு. சொ. சிங்காரவேலன் M,A, திரு. சு. சாமி ஐயா, M.O.L., ஆகியவர்களும், இரண்டாம் நாள் திரு. கி. வா. ஜகந்நாதன் M.A., அவர்கள் தலைமையில், திரு. ந. ரா. முருகவேள் M.A.,M O.L., திரு. த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளை திரு. ரா. இராதாகிருஷ்ணன், M.A., ஆகியவர்களு . மூன்றும் நாள் திரு. மீ. ப. சோமசுந்தரம், அவர்கள் தலைமையில், திரு. காந்திமதிநாதன், M.A., திரு. ஔவை நடராசன், M.A.M.Litt., செல்வி. சோ. பாகீரதி, M.A.M.Litt., ஆகியவர்களும்சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர். மூன்று நாட்களிலும் செந்தமிழ்ச் சைவ அன்பர்கள் பலர் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்.

## திருமுறைக் கருத்தரங்க விழா :

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ மகாலிங்கசுவாமி கோயிலின் சார்பில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம், வருகிற பிப்ரவரி மாதம் 12, 13, 14-ஆம் தேதிகளில், திருவிடைமருதூரில், திருமுறைக் கருத்தரங்கம் சிறப்புற நடைபெற இருக்கின்றது. திருமுறை ஆராய்ச்சியில் வல்ல பேரறிஞர்கள் பலர், குறிப்பிட்ட கருத்தரங்கப் பகுதிகளிற் கலந்து கொண்டு ஆய்வுரைகள் ஆற்ற இசைந்துள்ளார்கள். ஆங்காங்குள்ள சிவனடியார் திருக்கூட்டத்தினரும், திருமுறை அன்பர்களும் விழாவுக்கு வருகை தந்து, சிறப்பித்துப் பயனடைய வேண்டப்படுகின்றனர்.

—ஆசிரியர்.



திருப்பெண்ணாகடம், பிரளய காலேசுவரர் கோயிலில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே.வி.சுப்பையா, B.A., அவர்கள் திருமண மண்டபம் திறந்து வைத்தல் (5 -11—1970).



திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை சௌந்தரேசுவர சுவாமி கோயிலில், ''மங்கையர்க்கரசியார் இலவச மருத்துவமனை'' திறப்புவிழாவில் தஞ்சைத்துணையாணையர் திரு ஜி ஆதிமூலம் B.A.,B.L. அவர்களும், நாகை உதவியாணையர் திரு. புலியூருடையான் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல், (22-12-70).



நாகப்பட்டினம் காயாரோகண சுவாமி கோயிலுக்குத் தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவர் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் M. L. C. அவர்கள் எழுந்தருளியபோது வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல்.



திருப்பெண்ணாகடம் மெய்கண்ட தேவர் கோயிற் குடமுழுக்கு விழாவில், தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், நீதிபதி R. சதாசிவம் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல்,



நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா B A. அவர்கள் கும்பகோணம் வட்டம் திருப்பட்டீச்சுரம் தேனுபுரீசுவரர் கோயில் திருப்பணியைத் தொடங்கி வைத்தல். (2—10—70).



சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ எல்லம்மன் கோயிலுக்குத் தூய்மைப் பரிசுச் சுழல் கோப்பையை நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L.,I.A.S., அவர்கள் தலைமையில், தமிழ் நாடு அரசின் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் திரு. நெடுஞ்செழியன், M.A., அவர்கள் அறங்காவலர் திருமதி. லட்சுமி A. M. சம்பந்தம் அவர்களிடம் வழங்குதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras - 34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.